## சிகண்டியார் தேன்கூடு

## அறம், அருள், அன்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் இன்பம்

உலகம் இனிது; வாழ்வு இனிது; உயிர் இனிது. இனிய வாழ்விற்கு நுகரப்படும் பொருள் வேண்டும். பொருளைப் பெறப் பொன் வேண்டும். பொருளால் - போகம் கிட்டுகின்றது; இன்பம் கிட்டுகின்றது.

பொருளில், நெல் முதலிய உணவுப் பண்டங்களும் மாடம், மனை, குடிசை முதலிய வதிவிடங்களும், மாடு, குதிரையுடன் பல்வேறு வகைப்பட்ட ஊர்திகளும் ஏனைய வளங்களும் எல்லாம் அடங்கும். பொன் என்பதில் காசு, பணம் முதலியன அடங்கும். "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்பது மணிவாசகப் பெருமான் வாக்கு.

தமிழ் நூல்களுல் முதன்மையானது - மிகப் பழமையானது - தொல்காப்பியம். அதனைத் தந்தவர் ஆசிரியர் தொல்காப்பியனார். அவர், மனிதன் மற்றும் விலங்கு, பறவை முதலிய அனைத்து உயிர்களுக்கும் இன்பம் உரியது என்பர். இந்நாளில் மனித உரிமைப் பிரகடனங்கள் வெளியிடப்படுவதை நாம் அறிவோம். மிகப்பழைய காலத்திலேயே இன்பம் பொது உரிமை என்று பிரகடனப்படுத்தியாயிற்று.

தமிழ்மாந்தர் அருள், அன்பு, அறம் எனும் மூன்றன் அடிப்படையிலேயே இன்பம் நுகரப்படவேண்டும் என்று கண்டனர். அருள்:- கருணை; அன்பு:- தொடர்புடையாரிடத்துச் செல்லும் கருணை; அன்பின் முதிர்ந்த நிலைதான் அருள். அதனாலேதான் வள்ளுவப் பெருந்தகை "அருள் என்னும் அன்பு ஈன்குழவி" என்று குறிப்பிட்டார். அறம், தருமம்; அது "தக்கது இன்னது" என்று கண்டு அறிந்து ஒழுகுதல். பெரியோர் "விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் அறம்" என்பர்.

செந்தமிழர், அறத்தினை மக்களிடையே பயிற்றுவிக்க இரு பயிற்சிக் கூடங்களை அமைத்தனர். இல்லறம், துறவறம் என்பன அவை. இல்லறத்தே அன்பு பயிற்றுவிக்கப்படுகின்றது; தாய், சேய் முதலாக உறவுகள் விரிவடைகின்றன; அன்பும், அறனும் அங்கு பேணப்படுகின்றன. அவற்றால் பண்பும் பயனும் விளைகின்றன.

துறவறத்தே அருள் பயிற்றுவிக்கப்படுகின்றது. அதனால் அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை: என்றுமே இன்பம் என்னும் நிலை எட்டப்படுகின்றது.

அருளும் அன்பும் அறமும் இன்பத்தைத் தருகின்றன. சங்கப்புலவர், கடுவன் இள எயினார் - "யாஅம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும், உருள் இணரக் கடம்பின் ஒலி தாரோயே" (பரிபாடல் - 5) - என்று வேண்டுகின்றார். பழந்தமிழ் நூல்களில் யாண்டும் அறத்தின் நிழல் விரிந்து கிடக்கின்றது. உலக வாழ்வில் துன்பவெயில் சுடும்போதெல்லாம் அங்கு நின்று ஆறி அமைதி காண்போம்.

துயில் இல்லாதார்

'நான்மணிக்கடிகை' என்பது சங்கமருவிய பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களுல் ஒன்று. கடிகை என்பது ஒருவகை அணிகலம். அதன் ஆசிரியர் விளம்பி நாகனார். விளம்பி என்பது தாய்த் தமிழகத்து ஓர் ஊரின் பெயர். நாகனார் இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளின் முன் வாழ்ந்தவர். சிறந்த சிந்தனையாளர்.

முடியாட்சி நிலவிய காலத்தில் மன்னர் துயில் - நித்திரை இன்றி இருந்து நாட்டை ஓம்பினாராம். அரசர்கள் ஆட்சியை அறத்தின் வழி நடத்தவேண்டியிருந்தது. தன்னால் தன் பரிசனத்தால், பகைவரால், கள்வரால், பிற உயிர்களால் ஆன பயம் ஐந்தும் தீர்த்து ஆளவேண்டியிருந்தது. அரசன் உறங்கினால் கூட அவனுடைய ஒளி - தேஜஸ்- வையகத்தைக் காத்தது. திருத்தக்க தேவர் நகைச்சுவை ததும்ப, 'உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்' என்று கூறிவிட்டு தேவர்கள் விழித்த கண்ணுடன் இருந்தும் அசுரர்கள் தருமத்தை கெடுக்க அதனைக்காக்க இயலாராகி இருக்கின்றனர் என்றார்.

விளம்பிநாகனார் துயில் இல்லாத நால்வரை எங்கள் கண்முன் நிறுத்துகிறார். பிறர் பொருளை திருடுவோர் ஒருபகுதியார்; காதலியார் மாட்டு உள்ள வைத்தோர், மறுபகுதியார்; சிறந்த செல்வப் பொருளில் இருப்பது போதாதென்று முயல்கின்றவர் இன்னொரு சாரார்; மேலும் ஈட்டிய பொருளை ஈந்துவக்காமல் காப்போர் வேறொரு பிரிவினர். இந்த நான்கு பிரிவினரையும் பாருங்கள்.

கள்வமென் பார்க்குந் துயிலில்லை; காதலிமாட்டு

உள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை; ஒண்பொருள

செய்வருமன் பார்க்குந் துயிலில்லை; அப்பொருள்

காப்பார்க்கும் இல்லைத் துயில்.

வாழ்விலே பிறர்பொருளைத் திருடுதல், மங்கையர் இன்பத்தில் பெரிதும் மூழ்குதல், பொருளை ஈட்டப் பெரிதும் ஆசை கொள்ளல், கிடைத்தப் பொருளைப் பயனான வழியில் செலவு செய்யாது காத்தல் முதலியன மேம்பாடற்ற செயல்கள் என்கின்றார். இன்றை அரசியல்வாதிகளையும் துயில் இல்லார் வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம் போலும்.

நாகனார் கண்ட ஏதிலார், காதலார், தந்தை, தாயா

நாம் அன்றாட வாழ்வில் பல்வேறு சொற்களைப் பயன்படுத்துகின்றோம். எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பர் தொல்காப்பியர். பொருளற்ற சொல் சொல்லாகாது. ஈன்றவளை அன்னை என்கின்றோம். ஈன்றவனை அத்தன் என்கின்றோம். மற்றும் நண்பர், ஏதிலார், பகைவர் முதலிய சொற்களையும் பயன்படுத்துகிறோம்.

நாகனார் நம்முன் ஏதிலார், காதலார், தந்தை, தாய் முதலிய சொற்களை வைக்கின்றார். அவர் கூறும் ஏதிலார் இயல்பு இல்லாதவர்களாம். இயல்பு என்பதுதான் என்ன? நல்லியல்புகளாகும். நல்லியல்புகளை நாம் வளர்க்க வேண்டும்.

காதலார் என்பார் யார்? தகவுடையவர்களாம். தகவு என்பது என்ன? அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய நற்பண்புகளாம்.

அன்பு - தொடர்பு பற்றி எழும் கருணை: நாண் - நல்லன அல்லாதவற்றைச் செய்யப் புகுங்கால் ஏற்படும் வெட்கம்: ஒப்புரவு - எல்லோருடனும் ஒத்தொழுகும் பண்பு: கண்ணோட்டம் - இரக்கம். 'கண்ணோட்டமென்னும் கழிபெரும் காரிகை' என்பது குறள். அது இருப்பதனாலேதான் இவ்வுலகு இருக்கின்றது. வாய்மை - சத்தியம். நரகேவரினும் சத்தியம் துறக்க மாட்டேன் என்றான் அரிச்சந்திரன். இவ்வகை நல்லியல்புகள் உள்ளோர்தான் காதலார்.

இனி, தந்தையென இவரால் குறிப்பிடப்படுபவர், அருமந்த உபாத்தி(யார்). அவர் கல்வி கற்பித்து மாணவர்களை உயர்ந்தோர் ஆக்குகிறார்தானே!

நான்காவதாகத் தாயைக் காட்டுகிறார். ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்ற அன்னையை அல்ல. முந்து தான் செய்த வினையை, முன்பு செய்த பாவ, புண்ணியங்களை. எங்கள் உடம்பு வினையின் வந்ததுதானே?

இனி, நான்மணிக்கடிகையில் வரும் பாடலை படிப்போம்.

ஏதிலார் என்பார் இயல்பில்லார்: யார்யார்க்கும்

காதலார் என்பார் தகவுடையார்: மேதக்க

தந்தை எனப்படுவான் தன்னுவாத்தி: தாயென்பாள்

முந்துதான் செய்த வினை.

நாம் நல்லியல்புகளைப் பேணி தகவு நிறைந்தவர்களாய் அறிவு வளர்ச்சி பெற்று நல்வினையை இயற்றி இன்பம் காண்போம்.

இன்பம் இனிக்கும் இடம் நான்கு

மனிதன் இன்பத்தைத் தேடி எங்கெங்கோ அலைகின்றான். அந்த இன்பம் எளிதில் கிடைத்துவிடுவதில்லை. இன்பத்தைச் சிற்றின்பம், பேரின்பம் என்றெல்லாம் பகுத்துக் காட்டுகின்றார்கள். ஒருவனும் ஒருத்தியும் கூடி அறத்திறம் அகலாது வாழும் வாழ்க்கையைச் சிற்றின்பம் என்கிறார்கள். அவ்வாழ்க்கை அவர்களைப் பேரின்ப வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் என்றும் கூறுகிறார்கள், சரி, சரி.

எங்கள் புலவர் விளம்பி நாகனார் நண்பர்கள் இடையே இருந்து - அதாவது, சிரிப்பதற்காகவன்றி, வேண்டாத செய்கை உளதாய வழி முற்பட்டு இடித்துரைக்கும் பொருட்டு நண்பு பூண்டார்களின், இடையில் இருந்து முகமலர்ந்து பேசி மகிழும் போது இன்பம் உண்டாகும் என்கிறார்.

எல்லோரும் முயன்று அரும்பொருளை ஈட்டுகின்றோமே - ஈட்டிய பொருளின் அளவைக் காண்கின்றோமே - அப்பொழுதெல்லாம் இன்பமில்லையாம். மற்றும் அதனை ஏழைகளுக்கு அளிக்கின்றோமே அப்போது உண்டாகும் இன்பந்தான் உண்மை இன்பமென்கிறார், பொய்யாமொழியார். ‘உலகோர் அறியார் கொல்’ என்று வினவுகின்றார். வறியார் உவப்பத்தானும் உவக்க வேண்டுமாம்.

மேலும் வகை உடைய பெண், அதாவது நினைவு, சொல், செயல் நல்லனவாக அமைந்த பெண் கணவனை, உண்டி முதலியன கொடுத்து அவன் கருத்தறிந்து அதன்வழி நிற்றல் இன்பம் பயக்கும் என்கிறார்.

மேலும், ஒரு பாடலைப் பொருளறிந்து பாடும்வழி இன்பம் உண்டாம் என்கின்றார். இனி பாடலைப் படிப்போம்.

நகைஇனிது நட்டார் நடுவண் பொருளின்

தொகைஇனிது தொட்டுவழங்கின் - வகையுடைப்

பெண்இனிது பேணிவழிபடின், பண்ணினிது

பாடல் உணர்வார் அகத்து.

நல்ல நண்பருடன் பழகியும், இரப்போர்க் கிரந்தும், மாண்புடை மனைவியைப் பெற்றும் பொருளறிந்து பாடியும் இன்பம் காண்மின்.

சிறந்தன நான்கு

இன்று எவற்றையும் மதிப்பீடு செய்கின்றோம். தரவுகளை வைத்துக்கொண்டு முடிவுக்கு வருகின்றோம். விளம்பி நாகனாருக்கும் அப்படி ஒரு விருப்புத் தோன்றியது போலும். உடலிலுள்ள உறுப்புக்கள் தொடர்பான மதிப்பீடு,

இல்லத்தரசி குறித்து மதிப்பீடு, உயர் பொருள் பற்றிய மதிப்பீடு, கடவுள் பற்றிய மதிப்பீடு - இவற்றை எடுத்துக் கொள்கின்றார்.

உறுப்புக்களுள் கண்ணினைச் சிறந்ததென்று முடிக்கின்றார். பிற சான்றோரும் அங்ஙனமே 'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை' என்கிறார்கள். நீங்களும் கூட அந்த முடிவுக்கே வருவரீகள் என்பதில் சந்தேகமே இல்லை. வள்ளுவப் பெருந்தகை சற்று மேலே சென்று 'கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்' - இரக்கமுடமை - என்கிறார்.

தொடர்ந்து, திருமணம் செய்துகொண்ட மங்கைக்கு மிகமிக நெருங்கிய உறவினர் யார் என்று வினவுகிறார். பெண்ணினுடைய தாயுமில்லை, தந்தையுமில்லை. பேறு கொண்டான் - அவள் மணந்து கொண்ட கணவனே - என்று முடிக்கின்றார்.

பெற்றோர் ஈட்டும் பொருள்களில் சிறந்தது எது என்ற வினா எழுகின்றது. காணி, நிலம், மாடு, மனை அல்லவாம். நன்மக்களாம். ஒண்மை - அறிவு - ஒளி மிக்க மக்களாம். உங்களுக்கு வள்ளுவத் தேவர் கூறுவது நினைவுக்கு வரலாம். 'தம்பொருள் தத்தம் மக்களே' என்றுதானே அவர் கூறுகின்றார்? மக்களுள்ளும் மூத்தோனை வருக என்னார்; கற்றோனையே வருக என்பார்கள். தெரிந்தவிடயம் தான்.

கடவுளுக்கு வருவோம். சிலர் அரனே கடவுள் என்பர். சிலர் அரியே கடவுள் என்பர். மற்றும் சிலர் அல்லா என்பர். வேறும் சிலர் பரமண்டலத்தில் வாழும் பரன் என்பார்கள். சொல்லால் விளங்கா நிருவாணம்தான் கடவுள் என்பவர்களும் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் இப்படியிருக்க நாகனார், ஈன்றாளை நம்மைப் பெற்று வளர்த்த தாயைத்தான் கடவுள் என்கிறார். பத்து மாதமும் சுமந்து பெற்ற அந்தத் தாயை மறக்கமுடியுமா?

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்

துன்னிய கேளிர் பிறரில்லை - மக்களின்

ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளோ(டு)

எண்கனக் கடவுளும் இல்

கண்காத்துக் கணவனை ஓம்பி ஈன்றோர்க்கும் புகழைக் கொடுத்து அன்னையை அகத்தவிசில் இருத்தி யாவரும் வாழ்வார்களாக!

## புலவரும் அவரூரும்

சின்னஞ்சிறு கிராமமும் தேவரூர் ஆகலாம். புலவர் ஒருவர் அங்கு வாழ்ந்தாற்போதும். புலவர் என்பார் யார்? இயற்கை அறிவுடன் கல்வி

கேள்விகளால் ஆய உண்மை அறிவும் கைவரப் பெற்றவர் புலமை உடையோர், அறிவுடையோர்.

அறிவுடையோர் பிறர்நோயைத் தம் நோய்போற் காண்பர். வரக்கடவதனை முன்னே அறிந்து செயற்படுவர். அவர் அஞ்சுவதற்கு அஞ்சுவர். சுருங்கக் கூறின் செல்வம் எல்லாம் உள்ளவரும் ஆவர். அறிவு இருக்கின்றதே அது கெடுதி வராமல் முன்னறிந்து காக்கும் சிறந்த கருவியும் கூட. புலவரை - அறிவரை - போற்றாத நாடே இல்லை.

விளம்பி நாகனார் புலவர்களைத் தேவருக்கு ஒப்பானவர் என்று கூறுகிறார். ஆகவே அவர்கள் தொழும் தகையர் ஆவர்.

புலவர் வாழும் ஊரில் உள்ள ஏனைக் குடிமக்களெல்லாம் தேவர்களின் உறவினர்களைப் போன்றவர்களாம். தேவர்களும் ஆகிவிடுகின்றார்கள். பெருமைக்குரிய விடயந்தான்.

ஊரவர்களில் சிலர் புலவர்களைப் பேணி அவர்வழி நின்று வழிபட்டு ஒழுகுவார்கள் அன்றே! அவர்கள் தாமும் தேவர்களின் அருளைப் பெற்றோர் ஆகிவிடுகின்றனராம்.

மேலும் அவ்வூரில் புலவரிடம் காதல் கொண்டு பற்றும் பாசமும் வைத்து வாழும் சிலர், புலவர் போலக் கற்றோர் வரிசையில் வைத்து மதிக்கப்படுவார்களாம். இனி, பாடலைப் படிப்போம்.

தேவர் அனையர் புலவரும்: தேவர்

தமரனையர் ஓரூர் உறைவார் - தமருள்ளும்

பெற்றன்னர் பேணி வழிபடுவார்: கற்றன்னர்

கற்றாரைக் காதலவர்.

(பெற்றன்னர் - அருள் பெற்றாரை ஒப்பர். கற்றன்னர் - கற்றவரே ஆவர்)

அறிவர் வழிநின்று அமைதி காண்போம்.

## வேண்டுவன நான்கு

நாட்டில் நாம் சில தாழ்வான செயல்களைக் காண்கின்றோம். அவற்றை நீக்கி வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கும். களவு, ஒழுக்கக் கேடு, கீழ் மக்கள் தொடர்பு, வீணே சிலரைப் பகைத்துக் கொள்ளுதல் முதலியன தாழ்வான செயல்களாகும்.

கள்ளாமை என்பது பிறர்பொருளை அபகரியாது இருத்தல். இன்னும் தெளிவாகக் கூறுவதாயின், பிறரது உடைமைகளில் ஏதேனும் ஒன்றைத் தானும் வஞ்சித்து அபகரியாது இருத்தலாகும். களவு செய்ய நினைத்தல் கூட களவெடுத்ததற்கு ஒப்பாகும். நினைத்தலும் செய்தலோடு ஒக்கும் என்பர். களவு செள்து பொருளைக் குவித்தால் அது வந்த வழி தெரியாது மறைந்து போய்விடும்.

ஒருவரைப் பார்த்து நல்ல தகுதியுடையவர் என்று கூறுகின்றோம். தகுதி எதனால் தீர்மானிக்கப்படுகிறது? மாடு, மனை, மக்கள், சுற்றம், கோடி பொன் முதலியவற்றினாலா? இல்லை! இல்லை!! சீரிய ஒழுக்கத்தினாலே தான் தீர்மானிக்கப்படுகின்றது. முந்தையோர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்தனர். ஒழுக்கம் எல்லாச் சிறப்புக்களையும் தரும்.

இனி, கீழ் மக்கள் என்பார் யார் என்று நோக்குவோம். கீழ் மக்களை சிற்றினத்தார் என்கின்றோம். சிற்றினத்தார் அட்டவணை நீண்டது. நல்லதன் நன்மையையும், தீயதன் தீமையையும் இல்லை என்போர். மற்றும் காமிகள், தூர்த்தர், நடமாடிகள் இவர்கள் எல்லாம் சிற்றினத்தார் தான். தாயைக் கொன்றவன், தந்தையை இகழ்ந்தவன் முதலானோரும் இதில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டியவர்களே. நிலத்தின் இயல்பால் நீர் மாறுகின்றது. மக்களும் கூடிய கூட்டத்துக்கு ஒப்ப மாறிவிடுகின்றனர். ‘சிற்றினம் சேரேல்’ என்பது முதுமொழி. துரியோதனன் கூடிய சிற்றினச் சேர்க்கையால் கெட்டொழிந்தான். நாம் வாழ்வில் நல்லவரையே நாடவேண்டும். பருமரத்தைச் சேர்ந்த பல்லிக்குத் தீங்கு இல்லையன்றோ?

வாழ்வில் எவருடனும் பகைமை கொள்ளுதல் ஆகாது. பகைமையை விளையாட்டுக்குக் கூடக் கொள்ளலாகாது என்பது பெரியோர் வாய்மொழி. பகைமையும் பாவமும் பழியும் வாழ்வினைப் படுகுழியில் வீழ்த்தும். பகைமை இல்லையென்றால் போர் ஒடுங்கும், புகழ் உயரும், மரபு உயரும். இனிச் செய்யுளைப் படித்துப் பாருங்கள்:-

கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்

தள்ளாமை வேண்டும் தகுதி உடையன

நள்ளாமை வேண்டும் சிறியரோடு யார்மாட்டும்

கொள்ளாமை வேண்டும் பகை.

மனத்தும் களவு தொழிலை நினையாது, நல்ல குணங்களைப் பேணி சிறியார் கூட்டத்தைத் தள்ளிவிட்டு பகைமையின்றி வாழ்ந்து வளம் பெறுவோம்.

நட்பினராதற்குரிய மூவர்!

திரிகடுகம் என்பது பழந்தமிழ் பதினெண்கணக்கு நூல்களுல் ஒன்று. சுக்கு, திப்பிலி, மிளகு என்பன திரிகடுகு என்று கூறப்படும். இவற்றால் அமைந்த கசாயம் - குடிநீர், உடற்பிணியைப் போக்கும். உயர் வாழ்வளிக்கும் திரிகடுகம் நூலான் அமைந்த பொருள், உயிர்ப்பிணியாகிய அறியாமையைப் போக்கும். மனிதனை அறத்தின் வழியில் செலுத்தும்.

இந்நூலின் ஆசிரியர் பழந்தமிழ்ப் புலவருள் ஒருவர். நல்லாதனார் என்பது அவர் பெயர். சிறந்த சிந்தனையாளர். அண்ணளவாக ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவர் இயற்பெயர் ஆதனார் ஆதல் வேண்டும். சிறப்பு நோக்கி அடைமொழி புணர்த்தி நல்லாதனார் என அழைக்கப்பட்டார்.

நாம் சமுதாயத்தில் பலவிதமானவர்களைச் சந்திக்கின்றோம். எல்லோரும் நட்பினர் - கேளிர் - ஆதற்குரியரா? இல்லை! இல்லை!! ஒரு சிலர்தான் நட்பினராதற்குரியவர். இதனாலேதான் ஆங்கில மேதை ஒருவரும் நட்பினரைப் பெருக்கிக் கொள்ளாதீர்! என்று அறிவுரை புகன்றுள்ளார் போலும்.

நாம் சந்திப்போரில் சிலர் முயற்சியுடையவர்களாக இருக்கின்றார்கள் - தாளாண்மையுடையவர்களாக இருக்கின்றார்கள். சிலர் சோம்பேறிகளாகவும் இருக்கின்றார்கள். முயற்சி உடையவர்கள் மிக்க ஊக்கத்துடன் செயற்படுகின்றனர். ஊக்கம் என்பதற்குப் பழைய உரைகாரர், 'வினை செய்தற்கண் உளதாகும் மனவெழுச்சி' என்று உரை காண்பர். ஊக்கமுடன் உழைப்போரிடம் செல்வம் வழி தேடிச் செல்லும். ஊக்கம் அற்றவன் தோற்றத்தில் மனிதனாக இருப்பினும், அவன் வெறும் மரத்துக்குச் சமானனே!

'முயற்சி திருவினையாக்கும்', 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பனவெல்லாம் அனுபவ உரைகள் அன்றே! இனி சோம்பல் என்பது சுறுசுறுப்புடன் உழையாமையாகும். அது 'மடி' என்றும் கூறப்படும். நன்முயற்சி இன்றி சோம்பல் உற்ற மாந்தரின் குடும்பம் அழிந்து போகும், இகழ்வும்படும். சோம்பேறிகளுக்கு தாமதம், மறதி, தூக்கம் என்பவை கைகொடுத்துதவும். சோம்பல் மனிதனை அடிமையாக்கிவிடும். 'சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்'.

முயற்சி உடையோன் செல்வம் வளர்ந்து கொண்டே இருக்கும். செல்வம் செழித்து வளரும். வாழ்க்கைச் சகடம் சீராக ஓடும். கடன் படாது வாழ்ந்து இன்பம் அடைவான்.

உபகாரியாம் தன்மை உள்ளவன் - கொடையாளன். அவனை உலகம் வேளாளன் என்று அழைக்கின்றது. அவன் நாளெல்லாம் தனக்கென வாழாது பிறருக்கு உதவி செய்கிறான். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று வாழ்கிறான். விருந்தோம்பி வாழ்கின்றான். திருமகள் அவனிடம் விரும்பி வந்து உறைகின்றாள். செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கின்றான்.

மக்களுட் சிலர் சான்றோரோ, ஆசிரியரோ, நல்லோரோ கூறியவற்றை மறவாராய் மனத்தில் இருத்தி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்கின்றார்கள். பேணி

நடக்கின்றார்கள். அவர்கள் இலக்கிய மொழியில் 'கோளாளர்' எனப்படுகின்றனர். கோள் - கொள்ளுதல். முன்னிலை திரிந்த தொழிற் பெயர் என்பர்.

எங்கள் புலவர், உரத்த தொனியில் நாம் நண்பு கொள்ளற்குரியர் - கேளிராக்கற்குரியர் - மூவர் என்கிறார். அவர்கள் தாளாளன், வேளாளன், கோளாளன் முதலிய மூவர் மட்டும்தானாம். பாடலைப் படித்துப் பாருங்கள்.

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்

வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்

கோளாளன் என்பான் மறவாதான் இம் மூவர்

கேளாக வாழ்தல் இனிது. (திரிகடுகம் -12)

முயற்சி உடையாருடனும் கொடையுடையாருடனும் கேட்டவற்றை மனத்துள் வைத்து நடப்பாருடனும் கேண்மை பூண்டு - நண்பு கொண்டு - வாழ்வை வளம்படுத்தி வாழ்வோம்.

## சாவா உடம்பு எய்தினோர் மூவர்

மக்கள் உலகில் வாழ்கின்றனர்: "அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்று பெரியோர் கூறுவார். மானிடப் பிறப்பிலும் குருடு, பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் என்ற எண்வகைக் குற்றங்களும் அற்றவர்களாகப் பிறத்தல் வேண்டும். அக்குற்றங்கள் அற்றவனே நிறைவான மனிதன்.

அவன் கற்பன கற்று அறிவொழுக்கங்களில் சிறந்து நன்மகனாக வாழ்தல் வேண்டும். நல்வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது. வறியார் நன்மை தீமை இரண்டையுமே அறியார். பொருளைத் தேட வேண்டும். தேடிய பொருள் கொண்டு புகழ்பட வாழ்தல் வேண்டும். செல்வத்தை இம்மைக்கண் புகழும் மறுமைக்கண் அறமும் கிட்டும் வழியில் செலவு செய்தல் வேண்டும். வள்ளுவப் பெருந்தகை ஈதலும் இசைபட வாழ்தலும் மக்களுக்கு ஊதியம் தரும் செயல் என்பர்.

பல வழிகளில் புகழை வளர்க்கலாம். சமயம், மொழி, சமூகம், அரசியல் எனப் பல நிலைகளில் தொண்டு புரியலாம். உழைப்பைப் பிறர்க்கு உதவி - தானம் செய்து - புகழை வளர்க்கலாம். எல்லோர் தமக்கும் இனிதே இயற்றிப் புகழை வளர்க்கலாம். ஒரு சிலர் குறுக்கு வழிகளில் புகழை வளர்ப்பதனையும் அறிவோம். அஃதவர்க்கு வசையினையே நல்கும். ஒவ்வொருவரும் உலகில் புகழை நிலைக்க செய்தல் வேண்டும்.

தமிழ் மாந்தர் இல்லறத்தையே மேலான தருமம் என்று கண்டவர். அடி நாளில் காதல் ஒழுக்கம் வலுப்பெற்றிருந்தது. பின்னர் செய்த ஒன்றனைச் செய்திலேன் என்று சொல்லில் பொய் கூறுதல் மட்டுமன்றி ஒழுக்கத்திலும் வழுவி நடக்கத் தலைப்பட்டனர். அந்நிலையில் மேலோர் வேள்விச் சடங்கை - திருமணச் சடங்கை ஏற்படுத்தினர். அது 'கரணம்' எனப்பட்டது. பெற்றோர், அந்தணர், அறிவர் முதலியோர் முன் 'இன்னவாறு ஒழுகுக' என்று கற்பிக்கப்பட்டது. காதல் மனையாளும் காதலனும் தீதின்றி வாழ்ந்தனர். மனையாள் மனைத்தக்க மாண்புடையாளாய் வாழ்ந்தாள். மாண்பு நற்குண நற்செய்கைகள். நற்குணத்தில் துறந்தார்ப் பேணுதல் விருந்தயர்தில் வறியார் மாட்டு அருளுடைமை முதலியன அடங்கும். நற்செயல்களில் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தல் சமையல் தொழில்வன்மை ஒப்புரவொழுகல் முதலியன இடம்பெற்றிருந்தன. சமூகம் மாசில் சீர்க்கற்புடையாளை மேலாக மதித்தது. இன்பம் கண்டது.

நீர்வளமும் வாழ்விற்கு இன்றியமையாததாய் இருந்தது. உண்ணுதல் மண்ணுதல் - கழுவுதல் மற்றும் தேவைகளுக்கெல்லாம் நீர் இன்றியமையாத பொருள் அல்லவோ? நீரை வானம் வழங்குகிறது. அது பெய்யாது பொய்த்து விடுவதும் உண்டு. அதனால் குடிமக்கள் அல்லற்பட்டு ஆற்றாது நிற்பரன்றோ! நாட்டிலே சிறியனவான கிணறுகளும் - கூவல்களும், பெரியனவான குளம் முதலிய நீர்நிலைகளும் பெருக வேண்டும்.

புறநானூற்றில் குடபுலவியனார் என்னும் புலவர் வருகிறார். அவர் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவு புகட்டும் போது நீர்நிலைகளை அமைக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார். "அரசே நீ துறக்க இன்பத்தை (சுவர்க்க போகத்தை) விரும்பினும் இப்பிறப்பில் பேரரசனாகப் புகழ் எய்த வேண்டினும் நீர்நிலை பெருக அமைப்பாயாக. அங்ஙனம் நீர்நிலை அமைத்தவரே இவ்வுலகில் தளைத்தவர். ஏனையோர் தளையாதவராவர் - அங்ஙனமாகவர்" என்கிறார்.

இனி நல்லாதனாரிடம் வருவோம். அவர் கூறுகிறார் பூமியின் மேலே பெரிய புகழை நிலைநிறுத்தியவரும், கற்புடைப் பெண்ணை வாழ்க்கைத் துணையாகக் கொண்டவரும் நீர்க்கிணற்றைத் தோண்டிவித்தவரும் இறவாயாக்கையினர் என்கிறார்.

பாடலை நோக்குவோம்.

மண்ணின் மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீல்ப்

பெண்ணினும் கற்புடையாட் பெற்றானும் - உண்ணுநீர்க்

கூவல் குறையின்றித் தொட்டானும் இம்மூவர்

சாவா உடம் பெய்தினார்.

புகழ் நிறுவி, மாட்சியைப்பட்ட வாழ்க்கைத் துணையுடன் இல்வாழ்க்கையை ஓம்பி நீர்நிலை பெருக்கி வாழ்வோம்.

## தூயோர் தொழில்

நாம் அடிக்கடி நல்லோர்களைப் பற்றி பெரியோர் கூறக் கேட்டிருக்கின்றோம். நல்லோர்களைத் தூயோர் என்றும் வழங்குகின்றார்கள். நல்லோர்கள் அறங்கள் முப்பத்திரண்டினை வகுத்துள்ளதாக நூல்கள் கூறும்.

எங்களிடம் மூன்று சிறப்புக்கருவிகள் உண்டு. அவற்றை திரிகரணம் என்பர். அவை மனம், வாக்கு, காயம் என்பன. இம்மூன்றின் செயற்பாடுகளும் தூயனவாய் இருத்தல் வேண்டும். மனம் நல்லதை நினைத்தல் வேண்டும். வாக்கு நல்லதை நவில வேண்டும். காயம் நல்லதைச் செய்தல் வேண்டும். இடரினும் தளரினும், இன்பினும் துன்பினும் அவை பிறழாதிருத்தல் வேண்டும். அங்ஙனம் வாழ்வோர் தூயோர், மேன்மக்கள்,

நக்கீரதேவர் தூயோரும் புகழ தூயோரை, நம் கண் முன் நிறுத்துகின்றார். வெள்ளிய நரை முடியினர், எக்காலத்தும் நீராடுதலில் அழுக்கற்ற வடிவினர், விரதாதிகளை அனுட்டித்தலால், மெலிவுற்று மார்பெலும்புகள் தெரியும் தோற்றத்தார்; மாறுபாடும் கோபமும் நீங்கிய மனத்தார்; பலவற்றையும் கற்றோர்; கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்; காமம், கடுஞ்சினம், கோபம் அற்றவர்; யாரையும் வெறுக்காத பேரறிவினர்; அவர் தூயோர்.

சிலப்பதிகாரம் தித்திக்கும் சுவை உடையது! கண்ணகியார் கதை கூறுவது. நூலின் இறுதியில் வரந்தரு காதை வருகின்றது. அங்கு அறத்தின் பிழிவு சுரந்து பாய்கிறது. 'உலகீர்! தெய்வம் உண்டென்று தெளிமின்', 'தெளிந்தோரைப் பேணுமின்', 'பொய்க்கரி போகன்மின்' என்றெல்லாம் சுட்டப்படுகின்றது. பொய்ச்சாட்சி கூறுதல் துன்பந்தருவது.

பாலைக்கரி ஆசிரியர் ஒரு செய்தி கூறுகிறார். அழகிய உவமை ஒன்று அச்செய்தியை வெளியிடுகின்றது. அது 'கரி பொய்த்தான் கீழ் இருந்த மரம் போலக் கவின்வாடி' என்பதாகும். இங்கு சான்று பொய்த்தவன் - பொய்ச் சாட்சி கூறியவன் - வந்து தங்கிய மரம் கூட அதன் அழகை இழந்து விடுமென்று கூறப்படுகிறது.

'மன்றோரம் சொன்னார் மனையில் வேதாளம் சேரும்; வெள்ளெருக்குப் பூக்கும்; பாதாள மூலி படரும்; மூதேவி சென்று வதிவாள்; சேடனும் குடி புகும்' - என்று ஔவை மூதாட்டி கூறுவதையும் அறிந்திருப்பீர்கள். என்ன தான் கிடைப்பதாக இருந்தாலும் ஒரு பக்கத்துக்காகப் பொய்ச் சாட்சி புகழல் - சொல்லுதல் - ஆகாதாகும்.

சான்றாண்மை குறித்துச் சிறிது அறிந்து கொள்வோம். திருவள்ளுவ தேவர், பொருட்பாலில் சான்றாண்மை என்றே ஓர் அதிகாரம் செய்திருக்கின்றார். சால்பு என்பதைப் பழகு தமிழில் மாட்சிமை எனலாம். சால்பை ஆளும் தன்மையைச் சான்றாண்மை எனலாம். சால்பு ஒரு பெரும் கோட்டையாம். அந்தக் கோட்டைக்கு ஐந்து தூண்கள் உண்டு. அவை அன்புடைமை, பழிக்கு நாணுதல், எல்லோரிடத்தும் ஒப்புரவு செய்தல், இரக்கமுடைமை, மெய்ம்மை கூறுதல் என்பனவாம்.

சான்றாண்மையின் உயர்நிலை, இன்னா - தீயன செய்தார்க்கும், இனியன - நல்லன செய்தலேயாகுமென்பர். உலக இரட்சகராகிய இயேசுபிரானும் ஒரு கன்னத்தே அடித்தால் மறு கன்னத்தைக் கொடு என்ற அருளுரையை மொழிந்துள்ளார். மக்களுக்கு மன்னிக்கும் மாட்சி வேண்டும். கணியன் பூங்குன்றனார் நலஞ் செய்தாரைப் பாராட்டுதலும் தீது செய்தாரைப் புறக்கணித்தலும் இல்லை என்பது முதலாகச் சான்றோர் குணங்களைக் காட்டுவர். என்நிலையிலும் தோல்வற்றிச் சாகும் நிலையிலும் நாம் சான்றாண்மை குன்றாது வாழ வேண்டும்.

இனித்திரிகடுகப் பாடலுக்கு வருவோம்.

உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்

பால்பற்றிச் சொல்லா விடுதலும் - தோல்வற்றி

சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்

தூஉயம் என்பார் தொழில்.

நித்தம் நித்தம் நீராடி உண்டு, சாட்சி கூறும் பொழுது பக்கம் சார்ந்து பொய்ச் சாட்சி கூறாது - இருந்து சான்றாண்மை ஓம்பி வாழ்ந்து, இன்பம் பெறுவோம். ஆசிரியர் நீராடலால் உடற் குற்றத்தையும், பொய் கூறாமையால் வாய்க் குற்றத்தையும், சான்றாண்மை குன்றாமையால் மனக்குற்றம் இன்றி வாழுமாறும் கூறுகின்றார்.

## செல்வம் உடைக்கும் படை மூன்று

செல்வம் என்றதும் பொருள் செல்வம், கல்விச் செல்வம் என்பன கண்முன் நிற்கும். திருவள்ளுவர் பொருள், கல்வி முதலியவற்றுடன், அருள், கேள்வி, பிணியின்மை முதலியவற்றையும் செல்வம் என்றே வழங்குகின்றார்.

மக்கள் வாழ்விற்கு அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் முதலியவற்றிற்கும் பிற தேவைகளை முட்டின்றிப் பெறுவதற்கும்,

சுற்றத்தாரையும் இரவலரையும் பேணவுமெல்லாம் செல்வம் பெரிதும் வேண்டப்படுகின்றது.

ஒரு நாட்டைப் பொறுத்தவரை - தாழ்வில்லாச் செல்வர், தகுதிவாய்ந்த பெரியோர் மற்றும் நல்ல விளைநிலம் முதலியன சிறந்த உறுப்புக்களாகப் பேணப்படுகின்றன. அருளிலார்க்கு மேலுலகு இல்லது போல் பொருளிலார்க்கு இவ்வுலக வாழ்வு சூனியமாய் விடும். எனவே பொருள் செல்வம் சிதைந்து போகாது பேணக் கடமைப்பட்டுள்ளோம்.

படை என்றதும் தரைப்படை, கடற்படை, வான்படை முதலியன நினைவிற்கு வரும். போர்த்தொழிலுக்கு அணுக்குண்டு முதலாகப் பலப்பல கருவிகள் பயன்படுகின்றன. பழைய தமிழ் நூலாகிய புறநானூற்றில் 'புலவர் பாடும் புகழ் உடையோர், விசும்பின் வலவனேவா வானவூர்தி எய்துப என்ப......'(27) என்று சாரதியால் இயக்கப்படாத - தானே இயங்கும் - வானவூர்தியைப் பற்றிக் கேள்விப்படுகின்றோம். இன்று 'வலவன் ஏவாக்கிபிர் விமானம்' போர்ப்படையால் பயன்படுகிறது.

அரிது முயன்று ஈட்டிய செல்வத்தை உடைப்பதற்கு - சிதைப்பதற்கு - வேறும் பல படைகள் இருக்கின்றன. ஒன்று தன்னை வியந்து தருக்குதல், இன்னொன்று கொன்னே வெகுளி பெருக்குதல், மற்றொன்று பல்பொருள் வெஃகும் சிறுமை. இப்படைக்கலங்கள் உள்ளம் என்னும் தரைப்பரப்பில் இருந்து ஏவப்படுகின்றன.

யாராயினும் ஒருவர் செல்வவளம் பெற்றிருக்கின்றார். அச்செல்வம் அவரை வாளா இருக்க விடமாட்டாது. அவரது உள்ளம் பிறர் தம்மைப் பெரிதும் பாராட்ட வேண்டும் என்று எண்ணும், நற்பெரியவன், செல்வந்தன் என்ற தருக்கு - பெருக்கு - ஆங்காரம் மேலோங்கும், படாத பாடெல்லாம் படுத்தும்.

ஒரு கதை சொல்லுவார்கள். ஒருபோது எலியொன்று தரைமீது நின்று துள்ளியதாம். அயலில் நின்றவர்களுக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. தரையைத் தோண்டிப் பார்த்தார்கள். அடியில் புதையல் இருந்ததாம். எலியைப் பணம் துள்ள வைத்தது. செல்வம் தன்னை உடையவரை வியந்து தருக்கச்செய்தல் கூறவேண்டுமோ? தருக்குற்றவர் செல்வம் உடைந்தே போய்விடும்.

சிலர் தாழ்வின்றி வீணே வெகுளியை - கோபத்தை - பெருக்கியபடியே இருப்பர். வெகுளியைச் சினம் என்றும் கூறுவோம். காமம், வெகுளி, மயக்கம் இவை அற்றபோதுதான் பிறவிப்பிணியும் அறும் என்பார்கள். சினம் தான் அடைந்தாரைச் சுட்டுப் பொசுக்கிவிடும். சினத்தின் வயப்பட்டோர் செல்வத்தை அவமே செலவுசெய்து அழிந்துபடுவர்.

இனி மன்னிய பல்பொருள் வெஃகும் சிறுமையை எடுத்துக் கொள்வோம். சிலர் சிந்தையைக் கண்டகண்ட பொருள்களில் எல்லாம் ஓடவிடுவர்; இச்சிப்பார்கள்; விரும்புவார்கள். திருவள்ளுவர் பெருமான் இதன் கொடுமை நோக்கி வெஃகாமை என ஓர் அதிகாரமே வகுத்துள்ளார். வெஃகுதல் - விரும்புதல் என்னும் பொருளது,

பிறர்பொருளைக் கவரக்கருதுதல், நடுநிலை நீங்கிப் பிறர் பொருளைக் கொண்டால் குடியே அழிந்து போகும் என்பார்கள். மேலும் குற்றங்கள் சேரும் என்பார்கள். நல்லோர், பிறர் பொருளைக் கொள்ளக் கருதார். பிறர் பொருளைக் கொள்ளக் கருதுதல் அறிவுடைமையாகாது. பல்பொருளையும் இச்சிக்கும் சிறுமையை அகற்ற வேண்டும்.

திரிகடுகம் என்ன சொல்கிறது?

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்

கொன்னே வெகுளி பெருக்கலும் - முன்னிய

பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம் மூன்றும்

செல்வம் உடைக்கும் படை. (திரிகடுகம் - 38)

என்று கூறுகின்றது.

தற்புகழ்ந்து செருக்குவதும், வீணாகச் சினங் கொள்வதும், பிறர்பொருளை விரும்புவதும் ஆகிய இவை செல்வத்தைத் தேய்க்கும் படைகளாதலினால் அவற்றில் நின்றும் நீங்கி வாழுவோம்.

உமிக்குத்திக் கை வருந்துவார்

நகரம் ஒன்றுக்குப் புதியவர் ஒருவர் வருகின்றார். வீதியிலே பெயர்கள் பொறிக்கப்பட்ட கைகாட்டிப் பலகைகளைக் காண்கின்றார். அவற்றை வாசித்துத் தாஞ்சேர வேண்டிய முகவரியைச் சென்றடைகிறார். பழமொழிகளும் கைகாட்டிப் பலகைகளை ஒக்கும் எனலாம். வாழ்க்கைத் திருநகரில் நல்வாழ்வு எய்த விரும்புவோர், பழமொழிகள் கூறும் அறிவுரைகளை அறிவது சீரிய வாழ்வு நடத்த உதவும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஒரு நாட்டினரின் பண்பாட்டை உணர்தற்கு அந்நாட்டு மொழியில் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படும். ‘உமிக்குற்றிக் கை வருந்துவார்’ என்பது ஒரு பழமொழி. திரிகடுகம் ஆசிரியர் அதனை உமிக்குத்திக் கைவருந்துவார் என்று ஆள்கின்றார். நெல்லைக் குற்றினால் அரிசியாகிய மணியை நாம் பெறலாம். வெறும் உமியைக் குற்றினால் கைவருந்துவது அன்றி வேறேதும் கிடைக்காதன்றோ? இப் பழமொழியின் முடிந்த பொருள், பயனில் செயல்களைச் செய்யாதிருத்தல் வேண்டும் என்பதாகும். அஃதாவது நினைவு, சொல், செயல் எனும் மூவிடத்தும் தமக்கும் பிறர்க்கும் பயன்தரத் தக்கவற்றையே இயற்றல் வேண்டும் என்பதாம்.

வள்ளுவப் பெருந்தகையார், பயனிது சொல்பவனை எல்லோரும் இகழ்வரென்றும், அது தீதாய் முடியுமென்றும் நயனொடு நன்மையை அழிக்கும் என்றும் கூறுவார். பெரியோர் பயனிது செய்யார்; செய்யின் அவர் சீர்மை அழியும். பயனில சொல்வோரை மக்கள் எனல் வேண்டா பதடிகள் என்றே கூறுக என ஆணைமொழிவர். பயனுடையவற்றையே சொல்லுக; பயன் தராதவற்றை சொல்லாது ஒழிக என்பர்.

நல்லாதனார், பயனிது சொல்வோர் மூவரை எம்முன் நிறுத்துகின்றார். ஒருவர் 'வெல்வது வேண்டி வெகுண்டு உரைக்கும் நோன்பு இலி', மற்றவர் 'இல்லது காமுற்று இருப்பவர்', மூன்றாமவர் 'கல்வியின் நன்மை தேராது குற்றம் கூறுபவர்'.

முதலில் வெகுண்டு உரைப்பவரை எடுத்துக் கொள்வோம். நாட்டில் நல்லொழுக்கம் உடையோர் விரதம், நோன்பு முதலியவற்றை அனுட்டிப்பார். வெற்றி, தோல்வி எல்லாம் தவப்பயன் என்றே கருதி அமைதி காண்பர். தவஞ்செய்யாதோர் நோன்பிலிகள். வெற்றியை ஈட்டுவதற்குப் பல்லாரோடும் பிணங்குவர், சினங்கொண்டு பேசுவர். அப்பேச்சினால் பயன் காணாது வருந்துவர்.

இரண்டாமவர், தம்மிடம் உள்ளது கொண்டு திருப்தி காணாதவர். நெஞ்சை ஒருவழி நிறுத்தும் ஆண்மை அற்றவர். பிறர் பொருளில் ஆசைப்படுவார், அழுக்காறு கொள்வர். களவு முதலிய புண்செயல்களிலும் ஈடுபடுவார். முடிவில் பயனேதும் காணார். அவர் ஆக்கம் உள்ளது போலக் கெடும்.

மூன்றாமவர், முந்தையோர் கூறியாங்கு 'உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலைமுனியாது கற்றலும் செய்யார், உறுதி தரும் நூல்களைக் கற்றலும் செய்யார், நுலைக் கற்றறிந்தோர் சொல்லக் கேட்டலும் செய்யார். செவிக் குற்றம் பார்த்திருப்பார். கூற்றமே கூறி நிற்பர். இவர்களும் பயனிலிகளே'

இனி, பாடலைக் காண்போம்.

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பிலியும்

இல்லது காமுற் றிருப்பானும் - கல்வி

செவிக்குற்றம் பார்த்திருப் பானும் இம்மூவர்

உமிக்குத்திக் கைவருந்து வார்.

எனவே நாம் கோபித்துப் பேசிப்பிறரை வெல்ல எண்ணாதும், கிட்டாததை வெட்டென மறந்தும் கல்வியைச் செவிக் குற்றம் முதலியன பாராது கற்றும் வாழ்ந்து பயனடைவோமாக!

மெய்ப்பொருள் கண்டு வாழ்வார்

தமிழர் வாழ்வியலை இல்லறம், துறவறம் என இருவகைப்படுத்தினர். மனைவி மக்களுடன் இல்லின்கண் இருந்து அவாவை நெறிப்படுத்தி அறநெறியில் வாழ்வது இல்லறம். அறநெறி வழுவாத இல்வாழ்வு, துறவற நிலையினும் மேம்பட்டது. வையத்தில் - பூமியில், வாழ்வாங்கு வாழ்பவன் - முறைப்படி வாழ்பவன், மெய்ப்பொருளைக் காண்கின்றான். அறிவின் பயன் மெய்ப்பொருளை காண்டலாகும். மெய்ப்பொருள் - செம்பொருள். இறையுணர்வு முற்றியநிலை. மெய்ப்பொருள் கண்டவன் தெய்வநிலை எய்துகிறான்.

துறவறமும் பிறரால் பழிக்கப்படாத நிலையில் உயர்ந்தது, சிறந்தது என்பது நூற்றுணிபு. துறவு மேற்கொண்டோர் தம்வினைமாசு தீர்ந்து கரணங்களும் கருவிகளும் தூயதாதற் பொருட்டு விரதாதிகளை மேற்கொள்வர். தவம்முயல்வர். கருவி, கரணங்கள் தூயவாயவழி, ஞானம் தோன்றும், பற்றுக்கள் கெட்டொழியும். ஞானத்தினால் மெய்ப்பொருளை - செம்பொருளை - இறைவனை உள்ளத்தில் காணலாம். அத்தகு நிலையில் மெய்ப்பொருள் கண்டார் ஆகின்றனர்.

மெய்ப்பொருள் கண்டார் அன்பு, அருள், அறம் பூண்டு தாமும் இன்புற்றுப் பிறரும் இன்புற்று வாழ வழி கூறுவர்.

'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே

அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'

எனும் நிலை மலரும்.

எல்லோரும் இன்புற்று வாழக் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள் மூன்றனை எம்முன் வைக்கின்றார். அவ் விதிமுறைகளைப் பின்பற்றுவோர் மெய்ப்பொருளைக் கண்டு வாழ்வர் என்கிறார். விதிமுறைகள் மூன்று:-

ஒன்று - வைததனை இன்சொல்லாக் கொள்ளுதல்; மற்றது - கூழை, நெய் பெய்த சோறாகக் கொள்ளுதல்; பிறிதொன்று - மிகுதியும் கைப்புடைய பண்டத்தை வெல்லக்கட்டி போன்ற பண்டமெனக் கொள்ளுதல். இவை நடைமுறைக்கு சிறிது கடினம் தான். ஆனால் நாளாக நாளாக எளியனவாகிவிடும்.

எம்மிடத்தில் மனம், புத்தி, அகங்காரம் என்னும் மறைந்த சிறப்புக் கருவிகளும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் அறிகருவிகள் ஐந்தும், வாக்கு - சொல், பாணி - கை, பாதம் - கால், பாயுர், உபத்தம் - கருவாய், எருவாய் என்னும் செயற்கருவிகள் ஐந்தும் இருக்கின்றன. இவற்றை அடக்கி ஆளும் திறனை வளர்த்தல் வேண்டும். அடக்கி ஆளும் திறன் கைவந்தால் வாழ்வு இனிக்கும்.

சமுதாயத்தில் பல்வேறு தேவைகளுக்காகப் பலருடன் தொடர்பு கொள்கின்றோம். மாறுபாடுகள் உண்டுபடுவது சகஜமே. அப்போது சிலர் நம்மைத் திட்டுவார்கள். அதாவது வைவார்கள். வசைமொழிகளை கேட்டு நாம் சினத்தல் ஆகாது. அவற்றை இன் சொல்லாக மதித்தல் வேண்டும். இந்தப் பயிற்சியை நாள்தோறும் செய்துவந்தால் எத்தனையோ தொல்லைகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

உணவு வாழ்விற்கு இன்றியமையாது வேண்டப்படுவது. இல்லாள் அறுசுவை உண்டியை அயலில் இருந்து ஊட்ட மகிழ்ந்து உண்ட பேரும் விதிவசத்தால் சில வேளைகளில் வறுமை வாய்ப்பட்டு வருந்தவும் நேரலாம். அப்பொழுது அறுசுவை உணவு கிடைக்கவில்லை. புல்லரிசிக் கூழ்தான் - நீராகாரம் தான் கிடைக்கின்றது. அறுசுவை ஆசையை மட்டுப்படுத்தி, கூழினை நெய் வார்த்த சோறு என்று கொண்டு திருப்தி அடைதல் வேண்டும். அது புலன்களை அடக்கி ஆளும் திறத்தினை வளர்த்து எந்த நிலையிலும் வாழும் பாங்கினைத் தரும்.

சில வேளைகளில் மிகுந்த கைப்பண்புடையபண்டம் கிடைக்கலாம். அதனை இனிப்புக் கட்டி என்று உண்ணும் பக்குவம் நமக்கு ஏற்படவேண்டும். இவையெல்லாம் மதம் பிடித்த யானை போன்று உள்ளத்தெழும் ஆசையை கட்டுப்படுத்தி, மட்டுப்படுத்தி வாழ்வைத் திருப்தி உடையதாக நடத்த உதவும்.

இனித் திரிகடுகம் பாடலை நோக்குவோம்.

வைததனை இன் சொல்லாக் கெள்வானும், நெய்பெய்த

சோறென்று கூழை மதிப்பானும் - ஊறிய

கைப்பதனைக் கட்டியென்(று) உண்பானும், இம்மூவர்

மெய்ப் பொருள் கண்டுவாழ் வார்.

உடற் கருவிகளை அடக்கியாண்டு இனிய வாழ்வு வாழ்வோம்.

## இருளுலகம் சேராத ஆறு

நமது மனம் வாளா இருக்கமாட்டாது. அது பலபல விடயங்களை நினைந்து கொண்டே இருக்கும். சில சமயம் 'இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?' என்று எண்ணும். மறுபிறப்பில் சுவர்க்கம் புகவேண்டும் என நினைக்கும். இல்லை, நரகம் கிடைத்துவிடுமோ என்று கூட அஞ்சும். நரகத்தை இருளுலகம் என்றும் கூறுவார்கள். எவரும் நரகத்தை விரும்புவது இல்லை. அறிஞர்கள் மக்களிடம் கொண்ட அருள் உள்ளத்தால் நரக உலகம் புகாமல் இருக்க வழி கூறுவார்கள்.

வள்ளுவர் பெருமான் மறுபிறப்பு, சுவர்க்க - நரகம் முதலியன பற்றித் தெய்வத்திருக்குறளில் பல இடங்களில் குறிப்பிடுகிறார். சங்ககாலச் சான்றோருள் ஒருவர், 'மறுபிறப்பு இல்லை' என்பாரை மடவோர் என்கிறார். நரகம், 'இருள் சேர்ந்த இன்னா உலகம்' என்றும் 'அழறு' என்றும் எல்லாம் பேசப்படுகின்றது. நரக உலகை நிரயம் என்றும் நூல்கள் கூறும். பௌராணிகர் உலகு பதினான்கு என்பார்கள். மேலே ஏழு உலகங்களும், கீழே ஏழு உலகங்களும் இருக்கின்றனவாம். நரக உலகம் கீழே இருப்பதாகக் கூறப்படும்.

எங்கள் திரிகடுக ஆசிரியர் நல்லாதனார் இருளுலகம் சேராதிருக்க வழி கூறுகிறார். அதைக் காண்போம்.

எவரும் பொருள் கொண்டே பூதலத்தில் வாழவேண்டி இருக்கிறது. அதனால் ஒவ்வொருவரும் பொருள் ஈட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்கிறார்கள். பொருளைத் தேடுவது - தாமே உண்டு, உடுத்துக் காணி நிலம் வேண்டி, மாடிவீடு கட்டி, வங்கியில் வைப்புச் செய்து, மகிழ்ந்திருக்க மட்டுமல்ல, எங்கள் புலவர் என்ன சொல்லுகிறார்? 'ஈதற்குச் செய்க பொருளை' என்கிறார். அதாவது வறியார்க்குச் செல்வத்தை வழங்குவதற்காகவே அதனைக் கூட்டவேண்டும் என்கிறார். தெய்வப்புலவர் திருவள்ளுவரும் பிறர் பசியை நீக்கிப் பகுத்துண்டு வாழவேண்டும். அதனால் வரும் இன்பமே பெரிது என்கிறார்.

இவர் அடுத்து 'யாம் கற்பன எல்லாம் கற்று அறிந்தோம்' என்று கூறும் கல்விமான்களுக்கு அறிவுரை பகருகின்றார். 'பிறரெல்லாம் அறத்தின் வழியில் வாழவே நூல் செய்ய வேண்டும்' என்கிறார்.

அறம் என்றதும் அது என்ன? என்ற வினா எழுகின்றது. பெரியோர், விதியானும் விலக்கானும் செய்வன - தவிர்வனவற்றை வரையறுப்பது அறம் என்று விளக்கம் கூறுவர். கூருங்கக் கூறின், மனித வாழ்வில் கொள்ளத்தக்கனவும் தள்ளத்தக்கனவும் இவையென வரையறுப்பதெனலாம். ஆகவே, நல்லன எல்லாம் - தகுதியாயின எல்லாம் - புண்ணியமெல்லாம் - நோன்பெல்லாம் - அறமே என்பது போதரும்.

வள்ளுவப் பெருமான் மனத்துக் கண் மாசிலனாதல் அறம் என்பர். மனத்தை மாசு செய்வன காமம், வெகுளி, மயக்கம் முதலியன. இன்னாச் சொல், மொழியை மாசுபடுத்துகின்றது. தூய இல்வாழ்க்கை செயலை தூயதாக்கும். எனவே அறிஞர்களால் செய்யப்படும் நூல்கள் மனம், மொழி, செயல் என்பவற்றைத் தூயதாகச் செய்ய வல்லனவாய் அமைதல் வேண்டும் என்பது போதரும்.

மற்றும் ஒன்று - சொல்லுவன, பேசுவன எல்லாம் அருள் கலந்தன ஆதல் வேண்டும். வள்ளுவர் பெருமான் 'அருள் சேர்ந்த நெஞ்சினார் இருள் சேர்ந்த உலகம் புகார்' என்று கூறுவர். பிறசான்றோர், 'இன் சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் மகிழாது' என்பர். எனவே அருளொடு கலந்த சொல்லினர் நரகம் அடையார் என்பது ஒருதலை.

இனித் திரிகடுகம் பாடலை நோக்குவோம்.

ஈதற்குச் செய்க பொருளை அறநெறி

சேர்தற்குச் செய்க பெருநூலை - யாதும்

அருள் புரிந்து சொல்லுக சொல்லையிம் - மூன்றும்

இருளுலகம் சேராத ஆறு.

செல்வர் ஈதலைச் செய்தும் அறிஞர் அறத்திறம் விளக்கும் நூல்களைச் செய்தும் யாவரும் அருள் கலந்து இன்சொல் இயம்பியும் நரகத்துன்பத்தை தவிர்த்துக் கொள்வோம்.

## தூற்றின் கண் தூவிய வித்து

'தூறு' என்றதும் பற்றை முட்புதர், பற்றைக்காடு முதலியன எமது நினைவுக்கு வரும். பண்படுத்தப்படாத முட்புதர்நிலத்தில் விதைத்த வித்துக்கள் பயன்தர மாட்டா. பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைத்த வித்துக்கள் முளைத்துச் செழித்து பூவனீறு காய்காய்த்துக் கனி தரும். பண்பாடற்ற சிலருக்குக் கிடைத்த நற்பேறுகள் பயனற்றனவாகிக் கழிந்து போதலும் உண்டு. 'தூற்றின் கண் தூவிய வித்து' என்பதனை ஒரு மரபுத் தொடராகக் கொண்டு பயன் தராத பேறுகள் எனப்பொருள் காணுதலும் உண்டு.

இந்நாளில், தலைமைப் பதவிக்குப் பலர் முயற்சிப்பதனைக் காண்கிறோம். தலைமைப் பதவி சில வேளைகளில் தகுதி அற்றவர்கள் இடத்தும் போய்ச் சேர்ந்து விடுகின்றது. "பேடி கைவாள்" என்று ஒரு தொடர் வழங்கி வருகின்றதன்றோ? பேடியின் கைவாள் அவனுக்குப் பயன்படாது போய்விடுதல் அன்றி, சில சமயங்களில் அவன் உயிர் நீங்குவதற்கும் கருவி ஆகிவிடுகின்றது. வரீன் கையில் தான் வாள் இருத்தல் வேண்டும். அவன் காலம் அறிந்து, இடமறிந்து, தேவையறிந்து அதனைப் பயன்படுத்துவான்.

மன்னவனோ, தலைவனோ, தன்கீழ் வாழ்வார்க்குக் காட்சிக்கெளியனாய், கடுஞ்சொல்லன் அல்லனாய் முறைசெய்து நடத்தல் வேண்டும். முறை செய்தலாவது தன்கீழ் வாழ்வார், குற்றஞ் செய்துழி அக்குற்றத்தை ஆராய்ந்து, கண்ணோட்டம், நடுநிலைபேணி, அக்குற்றத்துக்கு நூல்கள் சொல்லும் தண்டனையை வழங்குதலாகும். முறை கோடிய மன்னன் கெடுவான்; அவன் நாட்டில் மழை பெய்யாது. முறை செய்து வாழும் தலைவன் - மன்னன் - தெய்வமாக மதிக்கப்படுவான்.

மனுச்சோழன் முறை செய்த மாமன்னன்; மகனைத் தேர்க்காலில் வைத்தூர்ந்து முறை செய்தான். கரிக்காற் பெருவளத்தான், பழந்தமிழகத்து மன்னருள் ஒருவன். அவன் இளமையிலேயே அரசெய்தி இருந்தான். தம்முள் மாறுபட்டு, தன்னை இளைஞன் என்று இகழ்ந்த முதியோர் பொருட்டு, அவர் அறியாது, தானும் முதியவனாய் வந்து வழக்கைத் தீர்த்து முறை செய்தான் என்று வரலாறு கூறுகின்றது.

தலைமையை ஏற்கும் எவரும், முறை செய்து வாழவேண்டும். இல்லையேல் பெற்ற பேற்றினால் - தலைமையால் பயனேதும் இல்லை.

இனி தவஞ் செய்வாரை தங்கருமம் செய்வாரென்று உலகம் புகழும். தவத்தின் தலைநின்றால், வேண்டியவற்றை வேண்டியபடியே எய்தலாம். தவவேடத்துள் மறைந்து நின்று நிறைகடந்து அல்லவற்றைச் செய்தல் தீதாம். நிறை எனப்படுவது நெஞ்சை ஒருவழி நிறுத்துதல். காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகுதல் என்றும் கூறலாம். பொறி புலன்களை அடக்கித் தவம் செய்தல் வேண்டும். நிறை காவாதான் கொண்ட தவம் பயன் அற்றதாகிவிடும்.

வனப்பு என்பது, அழகு. மகாலக்குமி தேவியார் மிகு வனப்புடையர். இயற்கையே அழகுடையர். சீதா தேவியார் ‘அழியா அழகுடையாள்’ என்று பாராட்டப்படுகிறார். நம்முட் சிலர் செயற்கையாகவே நம்மை அழகுபடுத்திக் கொள்கிறோம். தலையலங்காரம், உடையலங்காரம் செய்து பூசுவன பூசிப் புனைவன புனைந்து அழகுபடுத்திக் கொள்கிறோம். அவை அழகல்லனவாம். நடுநிலை பேணி நல்லம் யாம் என்று நிற்கும் கல்வி அழகே அழகென்பர். அறிவினால் ஒழுக்கம் பேணப்படுகின்றது. ஒழுக்கம் உயிரினும் மேம்பட்டது. ஒழுக்கம் உடையார் வழுக்கியும் தீய சொலார். அழகு உயர்வு பெறுவது சீரிய ஒழுக்கம் உள்ளவழியேயாம். இனி திரிகடுகம் பாடலை நோக்குவோம்.

முறை செய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்

நிறையிலான் கொண்ட தவமும் - நிறை யொழுக்கம்

தேற்றாதான் பெற்றவனப்பும் இவை மூன்றும்

தூற்றின் கண் தூவிய வித்து.

தலைமை பெற்றக் கால் முறைமை பேணி, நிறைகாத்துத் தவமியற்றி ஒழுக்கம் ஓம்பி வனப்பை வளர்த்து வாழ்வாங்கு வாழ்வோம்.

## ஆசாரப்பயிருக்கு வித்து

கீழ்க்கணக்கு வரிசையில் நான்மணி நாற்பது, திரிகடுகம் முதலியன கூறும் நல்லறங்கள் சிலவற்றை அறிந்தோம். அத்தொடரில் ஆசாரக்கோவை கூறும் அறங்கள் சிலவற்றைக் காண்போம்.

ஆசாரம் என்றதும் நடைமுறைப் பழக்கவழக்கம், பண்பாடு முதலியன நினைவில் உதிக்கும். திருவள்ளுவர் பெருமான் ஆசாரம் என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றார்(1075). ஆசாரம் - ஒழுக்கம் என்னும் பொருளில் வழங்குகின்றது. ஆசாரம் என்னும் சொல்லை வடசொல் எனக்கொண்டு, ‘சர்’ -

போதல், நடை முதலிய பொருள்களைத் தரும் என்றும், 'ஆ' என்பது உபசர்க்கம் என்றும் மொழிவர். ஆசாரத்தைச் சீலம் என்றும் வழங்குவது உண்டு. சிவஞானசித்தியார், 'ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல்' முதலிய பதினாறினை அறம் என்று பேசும். (சித்தி.சுப.23)

ஆசாரக்கோவை தமிழர் ஒழுக்கம், பழக்கவழக்கம் முதலியவற்றை அட்டவணையிட்டுக் காட்டுகின்றது. தமிழர் உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் முதலிய பல்வேறு துறைகளில் உயரிய ஒழுகலாறைக் கடைப்பிடித்தனர். மக்கள் 'செயற்பாலன' இவை என்றும் 'செயற்பாலன அல்ல' இவையென்றும் அறிந்திருந்தனர். சுருங்கக் கூறின், விலக்கியன ஒழித்து விதித்தன செய்தனர்.

ஆசாரத்தைப் 'பெருவிருட்சம்' என்போம். அவ்விருட்சத்துக்கு உரிய மூலவித்து எது? என்ற வினா எழுகின்றது. ஆசாரக்கோவை ஆசிரியர் பெருவாயின் முள்ளியார், நன்றி அறிதல், பொறையுடைமை, இன்சொல், உயிர்க்கு இன்னாத செய்யாமை, கல்வி, ஒப்புரவறிதல், அறிவுடைமை, நல்லினத்தாரோடு நட்டல் ஆய எட்டினையும் ஆசாரவித்து என்று கூறுகிறார். மணிமேகலை ஆசிரியரோ காமம், கொலை, களவு, பொய், கள் என்னும் ஐந்து பாவங்களை நீக்கி ஒழுகுதல் ஐவகைச் சீலம் என்கிறார். எட்டு, பத்து என்று விரித்துக் கூறுவதும் உண்டு. நன்றி அறிதல் முதலிய எட்டன் அடிப்படையில் எழுந்த ஆசாரமே இன்ப வாழ்வினை உதவவல்லது.

நன்றி அறிதல் என்பது பிறர் செய்த நன்றியை மறவாது ஒழுகுதலாகும். திருக்குறள் 'நன்றி மறப்பது நன்று அன்று' என்று தெருட்டுகின்றது. ஆலத்தூர் கிழார் என்னும் பழம்புலவர் 'ஆள்முலை அறுத்தல் முதலிய கொடும் பாதகங்களை இயற்றினார்க்கும் கூடக் கழுவாய் - தீர்திறம் - பிராயச்சித்தம் - உண்டாம். நன்றி கொன்றார்க்கு உய்தியில்லை' என்று குறளை ஆதாரம் காட்டிக் கூறுகின்றார்.

பொறையுடைமை - பொறுத்துக் கொள்ளுதலாகும். நிலம் தோண்டுவாரைப் பொறுக்கின்றது. தாங்கிக் கொள்ளுகின்றது. பொறுமையின் முதுநிலையில் எதையும் தாங்கும் இதயம் ஏற்பட்டும் விடுகிறது. வருத்தினும் அணைக்கினும் வருந்தாச் சமநிலை உதிக்கின்றது.

இன்சொல் இனிதீன்றலை அறிவோம். இன்சொலால் இருநீர்வியனுலகம் மகிழும். காயும் கனியும் உள்ள வழி யாரும் கனியையே பறிப்பர். இன்சொல்லை விளைநிலம் என்று கூட நூல்கள் கூறும்.

இன்னா செய்யாமை, பிறர்க்குத் துன்பந்தருவனவற்றை செய்யாதிருத்தலாகும். வள்ளுவர் பெருமான், 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டும்' என்கிறார். கல்வி உடைமையின் மேம்பாடு எல்லாரும் அறிந்ததே! புறநானூற்றுள் நெடுஞ்செழியன் கூறுகின்றான். ஒரு வயிற்றுப்பிறந்தோருள் கல்விவிசேடத்தால் தாயும் மனம் வேறுபடும். ஒரு குடியுள் பிறந்தோருள் மூத்தோனை

நோக்குவதில்லை. அறிவுடையோனையே நோக்குவர். அரசு கூட அறிவுடையோன் வழியில் செல்லும். எனவே 'உற்றுழி உதவியும் உறுபொருள் தந்தும் பிற்றை நிலை முனியாது' கற்றல் நன்று என்கின்றனர். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு.

ஒப்புரவறிதல் என்பது உலகநடையை அறிந்து நடத்தல். நாம் உலகத்தாரோடு ஒத்து ஒழுகுதல் வேண்டும்.

அறிவு இறுதிவராமல் காக்கும் கருவியாகும். அது பகைவரால் அழிக்க ஒண்ணாதது.

நல்லினத்தாரோடு நட்டல். முன்பும் அறிந்தோம் நற்பு சிரித்தற்கல்ல: மிகுதிக்கான் - தீயவழிக்கான் செல்லும் போது இடித்துரைத்தற்காம்.

இனிப் பாடலைப் படிப்போம்.

"நன்றி அறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு

இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு

ஒப்புரவாற்ற அறிதல் அறிவுடைமை

நல்லினத்தாரோடு நட்டல் இவை எட்டும்

சொல்லிய ஆசாரவித்து" - ஆசாரக்கோவை

நல்லாற்றான் நாடி ஆசாரம் பேணி இன்புறுவோம்.

யாவரும் கண்ட நெறி

இங்கு யாவரும் என்று குறிப்பிடப்பட்டோர், பொதுமக்கள் அல்லர்; மேன்மக்களையே அங்ஙனம் குறிப்பிடுகிறார். மேன்மக்கள், காப்பன காத்து கடிவன் கடிந்து ஒழுகும் நேர்மையாளர்; 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று தேர்ந்தவர். வாழ்வில் மேலான ஆசாரங்களைக் கடைப்பிடித்தவர்கள். பிறரும் அவற்றைக் கைக்கொண்டு விழுமிய இன்பம் பெறத் தூண்டுபவர்கள்.

பண்டை நாளில் கோனாட்சி நிலவியது. மன்னவன் 'உயிர்' போல் மதிக்கப்பட்டான். நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று என்று மக்கள் கருதினர். மாரி பொய்த்தாலும் வாரி - வருவாய் - குன்றினும் இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும் உலகு மன்னனைப் பழித்தது. மன்னன், ஆட்சியினை 'வாளின் மேல் வரும் மாதவமாகக்' கருதினான். முறைசெய்து காத்த அவன் இறையாக

உயர்ந்தான். ஐம்பெருங் குரவருள் ஒருவனானான். இன்று குடியாட்சி நிலவினும் மன்னவன் இடத்தில் தலைவன் அமர்ந்து கொண்டான்.

நல்வாழ்வுக்கு அறிவு வேண்டும். நல்லாசான் மக்களுக்கு அறிவு புகட்டினான். அவன் வாத்தி, தேசிகன், ஆசிரியன், குரு முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டான். குருவில்லாத வித்தை பயன் தராதென்று மக்கள் அறிந்தனர். ஆசிரியனிடத்தே நற்குடிப்பிறப்பு, தூய்மை, நல்லொழுக்கம் தண்ணளியுடன் கூடிய கல்வி, ஞாயிறு அனைய நிலை பிறழா உண்மை, வற்றா அன்பு, பேராசையின்மை என்றின்வாய் சிறப்பியல்புகள் குடி கொண்டிருந்தன. ஐம்பெருங்குரவருள் ஒருவனானான்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று அறிவோம். பொன்முடியார் எனும் புலவர் பெருமாட்டி 'ஈன்று புறந்தருதல் - பாதுகாத்தல் - என்தலைக் கடனே, பெற்றுக்காத்த பிள்ளையைச் சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' என்று அடித்துக் கூறுகிறார். இருவரும் மெய்வருத்தம் பாரார்; கண்துஞ்சார்; பசி நோக்கார். ஆக தம் பொருளாகத் தம்மக்களைப் பேணுகின்றனர். அவர்களும் ஐம்பெரும் குரவருள் இடம்பெற்று விடுகின்றனர். அன்னை அன்பின் கொள்லம்; அருளின் திருவுரு; மணிவாசகப்பெருமான் 'தாயேயாகி வளர்த்தனைப் போற்றி' என்று இறைவனைத் தாயாகக் காண்கிறார்; வணங்குகின்றார். தந்தை மைந்தரை கல்வி கேள்விகளில் வல்லோராக்குகின்றார். தந்தை சொல்லின் மேம்பட்ட மந்திரம் இல்லையே! மந்திரம் உச்சரித்தாரைக் காப்பது.

தம்முன் - தனக்கு முன் பிறந்தோன். இங்கு முன் என்பது காலவாகு பெயர். ஐயன் என்றும் அவன் அழைக்கப்படுகின்றான். தம்பி, தங்கையரை அன்புடன் அரவணைத்து இன்பம் காண்கின்றான். நெறிப்படுத்துகின்றான்.

இவ்வாறு அரசனும் உவாத்தியாயனும் தாய்தந்தையும் தம்முன்னோனும் அயராது உழைத்து நாட்டையும் வீட்டையும் சமூகத்தையும் வாழ வைக்கின்றனர். வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விடுகின்றனர்.

இவ்வனைவரும் தீயன களைந்து நல்லன புகட்டுதலால் குருவாகி - குரவாகி - விளங்குகின்றனர். அகிலம் ஐம்பெரும் குரவர் என்று அவர்களைப் புகழ்ந்து பாடுகின்றது.

ஆசாரக் கோவை ஆசிரியரிடம் வருவோம். வைகளைப் போது வழிபாட்டுக்குரிய நேரம் அல்லவா? அவர் - பெருவாயின் முள்ளியார் - யாவரும் கைக்கொண்ட ஆசாரநெறி கூறுகின்றார். கேளுங்கள்.

அரசன் உவாத்தி யான் தாய் தந்தை தம்முன்

நிகரில் குரவர் இவரிவரைத்

தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே

யாவரும் கண்ட நெறி. ஆசா - 16

இப்பாட்டில் இரண்டாம் அடியில் ஒரு சொல் குறைந்துள்ளது. யாப்பு நூல் இதனை சவலை வெண்பா என்று கூறும். புறத்திணையில் செவியறிவுறா உ என்று ஒரு துறை வருகிறது. அது அரசர் முதலாயினாருக்குப் புலவோர் செவியிற் புகுத்தி அறிவிப்பது என்னும் பொருளது. ஆங்கும் குரவரைப் பேணும் ஆசாரம் வற்புறுத்தப்படுகின்றது.

ஊணொடு கூடிய ஒழுக்கம்

ஊண் என்பது உணவு. இது உண்டி, போனகம் முதலிய பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. உடல் வளர உணவு வேண்டும். உடல் வளர்ந்தால், உயிரும் வளரும். திருமூலதேவர், 'உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே' என்கிறார். முந்தையோர் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோதே' என்று போற்றினர்.

ஒவ்வொருவரும் தாம் தாமே உண்ணுகின்றனர். விருந்தினரை உண்பிக்கின்றார். திருமணம் முதலிய விழாக்களிலும் உணவு வழங்குகின்றனர். மகேசுவர பூசையிலும் உணவு தருகின்றனர். பழந்தமிழர் வரலாற்றில் 'பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் ஐவரொடு பொருதி துரியோதனாதி நூற்றுவர் போர்க்களத்து அழிந்த காலை பெருஞ் சொற்று மிகுபதம்' வழங்கிய செய்தி கேட்கப்படுகிறது. ([புறம் 2).

ஆசாரக்கோவைநூல் உணவுண்டவுடன் தொடர்புபட்ட ஆசாரங்களை வகைப்படுத்திக் கூறுகின்றது. அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

உணவு உட்கொள்ளு முன், நீராடிக் கால்கழுவி வாய் பூசி கிழக்குத்திசை நோக்கி மணைக் கட்டையில் அமர்ந்து மண்டலம செய்து உண்ணவேண்டும் என்கிறார். (வாய் பூசுதல் - வாய்கொப்பளித்தல்; மண்டலம் செய்தல் - உண்கலத்தைச் சுற்றி நீரால்வட்டமிடல்)

உணவு உண்ணத் தொடங்கு முன் விருந்தினர், மூத்தோர், பசு, சிறை, பிள்ளை இவர்க்கு உணவு கொடுத்த பின்னரே உண்ண வேண்டுமாம். (சிறை - பறவைகள்; பிள்ளை - குழந்தைகள்)

திருமந்திரத்தில்:-

யாவர்க்கு மாம்இறை வற்றொரு பச்சிலை;

யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை;

யாவர்க்கு மாம் உண்ணும்போதொரு கைப்பிடி;

யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

என்று கூறுவதும் நோக்கத்தக்கது.

கிடந்துண்ணுதல், நின்றுண்ணுதல், வெள்ளிடையில் - வெளியிடத்தில் - இருந்து உண்ணுதல் போல்வன ஆசாரம் அற்ற செயல்களாம்.

அறுசுவை உணவென்று அடிக்கடி கூறுகின்றோம். அவை கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன என அறிவோம். ஆசிரியர் அவற்றை உண்ணும் விதத்தை முறைப்படுத்திக்காட்டுகின்றார். அவை உமிழ்நீர்ச் சுரபிகளை ஊக்குவிக்கும் விதத்தில் அமைந்து கிடக்கக் காண்கிறோம்.

கைப்பன எல்லாம் கடைதலை தித்திப்ப;

மெச்சும் வகையால்ஒழிந்த இடையாகத்

துய்க்க முறைவகையால் ஊன்.

என்பது பாட்டு. (கடை - இறுதி; தலை - தொடக்கம்; தித்திப்ப - இனிப்பன)

உணவுகளிடையே நான்கு வகுப்புகள் இருப்பதை அறிவோம். அவை உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன, சோறு, புற்கை முதலியவற்றை உண்ணுகின்றோம். கறியமுதைத் தின்னுகின்றோம். பாயசம், தேன் முதலியவற்றை நக்குகின்றோம். மோர், நீர் முதலிவயற்றை பருகுகின்றோம்.

நீரினை இரு கையாலும் பருகும் வழக்கம் இல்லையாம். உண்டபின் வாய் அலம்புகின்றோம்தானே! தண்ணரீல் நின்று கொண்டும் நடந்து கொண்டு வாய் அலம்பலாகாதாம். பின்னை? ஒருகலத்தில் - பாத்திரத்தில் - நீரினைக் கொண்டே அலம்ப வேண்டுமாம்.

கல்யாணம், தேவர் - பிதிரர் நாள்கள், வேறுவிழாக்கள், யாகாதிகள் செய்யும் காலம் என்று இவற்றின் போது இகழாது சோறளித்தல் வேண்டுமாம். முன்பு பெருஞ்சோற்று மிகுபதம் என்றதும் இதுதானே!

விருந்தினர்க்கு உணவளித்தலுடன் இன்முகம், இன்சொல், கால்கழுவ நீர் முதலியன உதவிச் சிறப்பிக்க வேண்டுமென்கிறார். அவரது வாக்கிலேயே காண்போம்.

முறுவல் இனிதுரை கால் நீர் மணை பாய்

கிடைக்கையோ டிவ்வைந்தும் என்ப தலைச்சென்றார்க்(கு)

ஊனொடு செய்யும் சிறப்பு.

ஊன் - உணவு; முறுவலோடு கூடிய இனிதுரை, கால்நீர், மணை, பாய் இவை ஐந்து.

முந்தையோர் கண்ட முறைகளைக் காரம் கண்டு கைக்கொள்ளுவோம்.

## கேள்வி உடையார் செயல்

கேள்வி உடையார் என்பது, நூல் பலவற்றையும் கற்றுணர்ந்து கேட்டறிந்த பெரியோர் என்னும் பொருளை உடையது. திருஞான சம்பந்தப் பெருமான் ‘கற்றல், கேட்டல் உடையார் பெரியார்’ என்பர். பெரியார் தேவரை ஒப்பர். அவர் தஞ் செயல் என்றும் அறத்தொடு பட்டதாகவே அமையும்.

பெரியோர், நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இனிதின் உணர்ந்தவல், யாராயினும் ஒருவருக்குக் கல்வி, செல்வம், புகழ் என்பன பெருகுவதாக வைத்துக் கொள்ளுவோம். அவற்றைக் கண்டு ஆற்றாத மற்றும் ஒருவர், பொறாமை கொண்டு புழுங்குகின்றார்! பிறரை நிந்திக்கத் தொடங்குகின்றார். சான்றோர் அத்தகையர் அல்ல. ‘சீ என்று பேயென்று நாயென்று பிறர் தம்மைப் பழித்துரையார்.’

நாளும் நாளும் நாம் பலருடன் பழகுகின்றோம். சாதாரணமாக உலகோர் ஒருவர் தம்மினும் பார்க்க சற்றுக் கல்வி செல்வம் முதலியவற்றுள் உயர்ந்து விட்டால், அவர் யார்? அவருக்கு ஏது தெரியும்? எப்போ வந்தவர்? என்றெல்லாம் இழிந்துரைக்கின்றனர். குலத்தாழ்ச்சி , இகழ்ச்சி கூறுகின்றனர், மேன்மேக்கள் ஒருவரை பல்லோருள் இழித்துரையார்.

‘உறக்கம் நமக்கு மிகமிக இன்றிமையாதது. நமது உடலில் உள்ள கருவி, கரணங்கள் எல்லாம் கேவலம் உதவி வேண்டாது நாள் முழுவதும் ஓயாது உழைக்கின்றன. உறக்கத்தின்போது அவை ஓய்வெடுக்கின்றன. உறங்குவதற்குக் கால எல்லை விதித்துள்ளார்கள். குழந்தை முதல் முதியோர் வரை அனைவருக்குமே காலஎல்லை உண்டு. சிலர் கால எல்லையை இகந்து நெடுந்துயில கொள்கின்றனர். கும்பகர்ணனை ஏவலாளர் ‘உறங்குகின்ற கும்பகர்ண! உங்கள் மாய வாழ்வெல்லாம் இறங்குகின்றது. எழுந்து காண்!’ என்று எழுப்பியதாகக் கதை உண்டு. ‘தூங்காதே தம்பி தூங்காதே’ என்ற பாட்டினைக்

கேட்டிருப்பீர்கள். தூங்கியவர்கள் தம்மைக் கெடுத்ததுடன் நாட்டையும் கெடுத்து விடுகிறார்களாம். சோம்பல் காரணமாகவும் சிலர் பகற்பொழுதில் துயில்கின்றனர்தானே! திருவள்ளுவ தேவர், சோம்பல், தாமதம், மறதி, தூக்கம் என்பன அழிந்து போகத் துடிப்போம் ஏறும் தோணி என்கிறார். முந்தை யோர் கருமம் இழந்து தூங்கினார் இல்லை.

எம்முட்சிலர், சிலசமயங்களில் செய்ய இயலாத ஒன்றைச் செய்து தருகிறோம் என்று கூறிவிடுகின்றனர். ஆனால் அதனைச் செய்துதராது மறைந்து விடுகின்றனர். வேறு சிலர் தம்மால் இயலக்கூடியதையும் இயலாது என்கிறார்கள். புறநானூறு எனும் பழைய தமிழ் நூலில் ஆவூர் மூலங்கிழார் மன்னன் நன்மாறனுக்குக் கூறிய பாடலில் இருந்து சில வரிகளை நினைவு கூறுவது நலம்.

“ஒல்லா தொல்லும் என்றலும் ஒல்லுவது

இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே

இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்

புகழ்குறை படூஉம் வாயில்..”

என்பது அது.

(ஒல்லுவது - இயலும் பொருள். ஒல்லாதது - இயலாதது) சான்றோர் தமக்கு பொருந்தாத செயல்களைச் செய்கின்றோம் என்று கூறார். கூறியதைச் செய்யாது கரக்கவும்மாட்டார். (கரத்தல் - மறைத்தல்)

வறியராயினாரை ‘அந்தப் பிச்சைக்காரனைப் பார்’ என்று சிலர் இகழ்வதனைக் காண்கிறோம். வள்ளுவப் பெருந்தகை ஒரு வினாவினை எழுப்புகின்றார். விடையும் தருகின்றார். பலர் வறியோராய் இருக்கக் காரணம் என்ன? ஆம். தவம் செய்யாமையாம். தவம் செய்தோர் சிலராம். அவர் செல்வராம். பொருள் நிரம்பியவன் வறியாரது பசியினைத் தீர்க்கவேண்டும். அஃதவனது தலையாய கடனாம். சந்திரமதியார் தாம் இல்லோரைச் சிறியர் என்று இகழாத பான்மையினராம். அவ்வாறிருப்பவும் தமது அருமைப்புதல்வன் ஏன் பாம்பின் வாய்ப்பட்டு இறந்து பட வேண்டும்? என்று அலறித் துடிக்கின்றார். சான்றோர் எந்தநிலையிலும் இல்லோரை இகழார். இனி ஆசாரக் கோவை பாடலைப்பார்ப்போம்.

பழியார் இழியார் பலருள்; உறங்கார்;

இசையாத நேர்ந்து கரவார்; இசைவின்றி

இல்லாரை எள்ளி இகழ்ந்து உரையார் தள்ளியும்

தாங்கரும் கேள்வி யவர் .

(ஆசாரக்கோவை - 50)

(தாங்க அரு - பிறரால் தாங்குவதற்கு அரிய: எள்ளித் தள்ளியும் என்று கூட்டுக.)

மேலே கண்ட அறங்களை எமக்காக்கி ஒழுகுவோம்.

## போர்த்தும் பிறவார் இயல்பு

ஆசாரக் கோவை கூறும் ஒழுக்கங்கள் சிலவற்றை முன்பு அறிந்தோம். இனி, கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாய 'சிறுபஞ்சமூலம்' கூறும் அறத்திறங் குறித்துச் சிந்திப்போம்.

'சிறுபஞ்சமூலம்' என்னும் தொடரைக் கேட்டதும் அஃது என்ன என்று வியப்படைவரீகள். ஆம். அவை ஐந்து மூலங்கள் - வேர்கள். மருத்துவ நூல்களில் ஐந்து வேர்கள் கூறப்படுகின்றன. அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, நெருஞ்சி, பெருமல்லி முதலியவற்றின் வேர்களாம். சிறுபஞ்ச மூலகங்கள் மக்கள் பிணிகளைத் தீர்க்கின்றன. இந்நூலுள் அமைந்த ஒவ்வொரு செய்யுள்களிலும் அடங்கிய ஐந்து ஐந்து பொருள்களும் தன்னைப் படித்துணர்ந்தார் பிறவி நோயைத் தீர்க்கவல்ல நல்லொழுக்க நெறிகளைப் புகட்டுகின்றன.

இந்நூலாசிரியர் காரியாசான் என்னும் பழம் பெரும் புலவர்; ஆசிரிர் மாக்காயனாரின் மாணவர்.

சமயங்கள் மீண்டும் மீண்டும் - பேர்த்தும் பிறவாதிருக்க வேண்டும் என்று பேசுகின்றன. திருவள்ளுவ தேவர், பிறவியைப் பெருங்கடல் என்கிறார். 'பிறந்தோர் உறுவது' பெருகிய துன்பமாம். பிறவார் உறுவது பெரும் பேரின்பமாம். காரைக்கால் அம்மையார், இறைவன்பால் பிறவாதிருக்க வரம் வேண்டினார். சமய வாழ்வில் நின்ற அருளாளர் 'மீண்டும் வாரா வழியை அருள் பவன் இறைவன் ஒருவனே' என்று கண்டனர்.

காரியாசான் பேர்த்தும் பிறவார் இயல்பைக் கூறுகிறார். கேட்போம்.

ஒன்று - பொன் பெறினும் பொய் கூறாதிருக்க வேண்டுமாம். திருவள்ளுவதேவர் பொய் கூறாதிருந்தால் வேறு அறம் வேண்டாம் என்கிறார். பொய்யாமை என்பது

பொய் மொழி கூறாமையாகும். காணாததொன்றைக் கண்டேன் என்றும் கண்டதொன்றைக் காணேன் என்றும் கூறாதிருத்தல் முதலியனவாம்.

அன்று அரிச்சந்திரனை நோக்கி விசுவாமித்திரன் 'தந்த நாடு யான் தந்திலேன்' என்னும் பொய் மொழி கூறுவையேல் நீ இழந்த அனைத்தையும் தருவேன் என்று கூறினனே! அப்போது அரிச்சந்திரன் யாது கூறினான்- 'ஐய! பதியை இழந்தேம், பெற்றபாலனை இழந்தேம், படைத்த நிதியை இழந்தேம், இன்னும் ஒன்றுதான் உண்டு நற்கதி - வடீு பேறு. அதனை இழக்க நேர்ந்தாலும் கூடப் பொய் மொழி புகலோம்' என்று மொழிந்தான். இன்று அரிச்சந்திரன் உலகோர் உள்ளத்துள் உறைகிறான். சிலர் பொன்னைக் கைத்தூட்டடாக வழங்கி - கைக்கூலியாகக் கொடுத்து - பொய்ச்சாட்சி சொல்லுவிக்கின்றனர், சொல்லுகின்றனர். புலவர் பொன் பெறினும் பொய்யாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார்.

அடுத்து - கள்ளாமை காக்க வேண்டும் என்கிறார். அஃதாவது, பிறர்பொருளை வஞ்சித்துத் தான் எடுத்துக் கொள்ள நினையாதிருத்தல் வேண்டும் என்கிறார். 'திருவள்ளுவதேவரும் களவு செய்தலினாலே உண்டாகிய செல்வமானது, வளர்வது போலத்தோன்றி பின் அழிந்துபடும் என்கிறார் - களவினைச் செய்வதன்றி நினைத்தலும் கூடப் பாவமாகும்.

மேலும் அவர் மெல்லியலாரை - ஏழை எளியாரை - திட்டுதல் ஆகாது என்று சொல்லுகிறார். மேலோர் 'சீயென்று பேயென்று நாயென்று' பிறர் தம்மைத் தீங்கு சொல்லாதிருக்கப் பணிக்கின்றார்கள்.

தொடர்ந்து வார் குழலார் நச்சினும் நையாமை வேண்டுமென்கிறார். அது என்ன? மகளிர் தாமாக விரும்பினும் ஆடவன், உள்ளத்துறுதி இன்றி உடைந்து போகலாகாது என்பதாம். அன்று மணிமுடி மன்னவர் திலகனாய் பார்த்தன், அரம்பை - தேவமகள் - மருட்ட, மசியாது உள்ளத்து உறுதியுடன் நின்றான். பின்னர் பேடிபெயர் பெற்றான். அதுவும் நன்றாயிற்றே! கம்பநாடர் காமம் இல்லெனின் கேடு, நரகம் முதலியன இல்லை என்பார்.

மேலும் தொடர்ந்து ஊன் அவாய் உண்ணாதிருக்கச் சொல்கிறார். புலாலை உண்ணாதிருக்க வேண்டும் என்பது அவர் குறிப்பு. புலால் - ஊன் அதனை மறுத்தானை எல்லா உயிரும் தொழும் அன்றோ! இனி சிறு பஞ்சமூலம் பாடலைப் படிப்போம்.

பொய்யாமை பொன்பெறினும் கள்ளாமை மெல்லியலார்

வையாமை வார்குழலார் நச்சினும் - நையாமை

ஓர்த்துடம்பு பேருமென்று ஊனவாய் உண்ணானேல்

பேர்த்துடம்பு கோடலரிது.

(சிறுபஞ்சமூலம் - 19)

எனவே நாம் பொய்கூறாது, களவு செய்யாது, வறியாரை வையாது - திட்டாது, கூடாத ஒழுக்கம் கொள்ளாது, ஊன் உண்ணாது வாழ்ந்து உயர்வடைவோமாக!

## வழக்கப்படுத்திக்கொள வேண்டுவன

வரகவி பாரதியார் பாப்பாவுக்குப் பாட்டிசைத்தார். 'காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு - மாலை முழுதும் விளையாட்டு - என்று வழக்கப்படுத்திக் கொள்ளு' என்று கூறினார். எங்கள் பழம் புலவர் 'காரியாசானும்' வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டுவன - நினைவில் இருத்தவேண்டுவன - ஐந்து கூறுகின்றார். காண்போம்.

ஒன்று பெருங்குணத்தாரை சேர்ந்தொழுகல். ஆமாம் பெருங்குணத்தால் யார்? அறிவு, ஒழுக்கம் முதலியவற்றால் மேம்பட்டவர். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை மிக்க சான்றோர். ஔவைப்பிராட்டியார் 'சான்றோர் இனத்து இரு' என்று கூறினார். மேலும் அமையாராய்ச் 'சேரிடம அறிந்து சேர்' என்றார். பருமரத்தைச் சுற்றிய பல்லிக்கு தீங்கு இல்லையே! திருவள்ளுவதேவரும், 'அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்பேணி தமராக்கொளல்' என்று கூறுவர். எனவே நாம் கல்வி, அறிவொழுக்கங்களில் மேம்பட்ட பெரியார்களுடன் கூடிப் பழுகுதல் வேண்டும்.

அடுத்தது - பிறர் பொருளை வெளவாமையாகும்; வெளவுதல் - அபகரித்தல். வெளாமை - அபகரிகாதிருத்தல். வஞ்ச மனத்தோர் அயலார் சொத்துக்களை அபகரிக்க முற்படுவர். பிறர் பொருளை எட்டி என்றே - நஞ்சு என்றே நாம் கருதுதல் வேண்டும். திருவள்ளுவப் பெருந்தகையார் பிறர் பொருளை அபகரித்து அனுபவிக்கும் செயலை விரும்பாதிருங்கள் என்று பணிக்கின்றார். அனுபவிக்கும்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றாதல் இல்லை என நவில்கின்றார். பிறர் ஆக்கம் விரும்பாப் பெருங்குணத்தைப் பேணுவோம்.

தொடர்ந்து வருவது கருங்குணத்தார் கேண்மை கழித்தலாகும். கருங்குணத்தார் - தீக்குணத்தார்; கேண்மை - நண்பு; நாம் எல்லோருடனும் நண்பு பூணுகின்றோம். தெய்வத் திருக்குறளில் நண்பு தொடர்பாக நான்கு அதிகாரங்கள் வருகின்றன. அவை நட்பு, நட்பு ஆராய்தல், தீநட்பு, கூடாநட்பு என்பனவாம். சுருங்கக் கூறுமிடத்து தூயநட்பினர் உடல் இரண்டாய் உயிர் ஒன்றாய் இருப்பர். சிறந்த நட்பு எழுபிப்பும் தொடர்ந்து வரும் என்பர்; நகுதற் பொருட்டன்று நட்டல்; தவறு கண்ட இடத்து தட்டிக் கூறிப் புத்தி புகட்டுவதற்கே ஆகும். கரு நண்பினர், நெய்க் குடத்துள் எறும்பென நின்று அது தீர்ந்ததும் விலகும் இயல்பினராம். கைப்பொருள் இல்லாத போது கழிந்துவிடுவர்.

அடுத்து தீச்சொற் காத்தலை வழக்காறாகக் கொள்ள வேண்டுமாம். தீச்சொல் என்பது தீமைபயக்கும் சொல்லாகும். அதனுள் பொய், குறளை, கடுஞ்சொல் என்பன அடங்கும். பொய் என்பது பொய்யுரைத்தல் என அறிவோம். குறளை என்பது கோள் கூறுதலாகும். அதனை வெளிப்படையாக அன்றி, குறிப்பானே பிரை இகழ்ந்து உரைத்தல் என்று கூறுவதும் உண்டு. கடுஞ்சொல் சுடுசொல்லாகும். இன்சொல் இனிது பயக்கவும், வன்சொலை ஏன் வழங்குதல் வேண்டும்? 'இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாது' என்பது நன்னெறி.

தொடர்வது, காலன் வருகுவன்; உறுதி என்பதாகும். வாழ்வாவது மாயம்; உடல் மண்ணாவது திண்ணம் என்பர். அருளாளர். பழம் புலவர் ஒருவர் நமது உடலத்தை மரத்துடன் ஒப்பிடுகின்றார்; காதல், கழிப்பு என்பன அதன் கிளைகளாம். கிளைகளில் துன்பம் என்னும் பூ பூக்குமாம்; பூவிலே இடும்பை - வறுமை என்னும் காய் காய்க்குமாம்; அக்காய் கனிந்து மரணமாகுமாம். என்றோ கூற்றுவன் வருகூன். நாலடியார் நகைச்சுவை கலந்து 'ம்ம்ம்.... இன்று கொல்! அன்று கொல்! என்று கொல் எண்ணாது பின்றையே நின்றது கூற்றம்' என்று பேசுகிறது. (இன்று - இன்றைக்கோ?; அன்று - நாளைக்கோ?; என்று - என்றைக்கோ?; பின்றை - பின்னே) அப்பர் சுவாமிகள் 'தாளாது அறஞ் செய்மின்' என்கிறார்.

இனி பாடலை நோக்குவோம்.

"பெருங்குணத்தார்ச் சேர்மின்; பிறன்பொருள வெளவன்மின்;

கருங்குணத்தார் கேண்மை கழிமின; - ஒருங்குணர்ந்து

தீச் சொல்லோ காமின்; வருங்காலன் திண்ணிதே

வாய்ச் சொல்லே அன்று வழக்கு"

பெரியாரைச் சேர்ந்து, பிறன் பொருளை விலக்கி, தீயருடன் நண்புக்கொள்ளாது, தீச்சொல் பேசாது, நிலையாமையை நினைந்து அறஞ்செய்து வாழ்வோம்.

நாடுங்கால் நகைதருவன

உலகு, பெரியோரை 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்று கூறுகின்றது. அதன் விளக்கம் என்ன? கல்வியால் நிறைந்து, ஆசை அற்று, மன மொழி மெய்களால் அடங்கிய மேலோர் என்று கொள்ளலாம். அவர் பிறர்நலமே பேணுவர்; எஞ்ஞான்றும், நல்லனவே எண்ணி நல்லனவே சொல்லி, நல்லனவே செய்து வாழ்வர். அத்தகு மேலோ, நகை செய்யும் இடங்கள் ஐந்தினைக் காரியாசான் என்னும் புலவர் காட்டுகிறார்.

முதற்கண் வருவது - 'நாணிலார் சால்பு'. சால்பு என்பது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, நிறைந்த அமைதி என்று முன்பு கண்டோம். நாணம் என்பது வெட்கம். அஃது இருவகைத்து முதலது மகளிர்க்குரிய நால்வகைக் குணங்களுள் ஒன்று. மற்றது இழிந்த காரியங்களைச் செய்யும்வழி உண்டாகும் நாணம். இந்த நாணம் யாவர் மாட்டும் இருக்க வேண்டிய பெருங்குணமாகும். திருவள்ளுவர் பெருமானும் 'கருமத்தால் நாணுதல் நாணு - திரு நுதல் நல்லவர் நாணுப் பிற' என்பர். நாணம் மக்களுக்கு அணிகலமாகும். இத்தொழில் செய்ய நாணாத - வெட்கப்படாத - ஒருவனுக்கு, சால்புடைமை அன்மையாதன்றோ! அத்தகையோரைக் கண்டவிடத்து விழுமியோர் நகைப்பர்.

அடுத்து வருவது - 'நடையிலால் நோன்பு'. நடை என்பது நல்லொழுக்கம். ஒழுக்கம் உயிரினும் மேலாக மதிக்கப்படும். ஒழுக்கம் இல்லார்க்கு உயர்வு இல்லை. ஒழுக்கம் உடையார் மறந்து தீயவை சொல்லார். அவர் செய்யும் நோன்பே பயன்தரும். இங்கு நோன்பு என்பது விரதமாகும். விரதத்தினை எங்கள் மலக்குறும்பை அகற்ற அனுட்டிக்கின்றோம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகத்துக்கரணங்கள் - மறைந்திருக்கும் கருவிகள் தூயதாதற் பொருட்டுச் செய்கின்றோம். உணவைச் சுருக்கியேனும், விடுத்தேனும் விரதம் இருக்கின்றோம். விரதம் தூய உள்ளத்துடன் இயற்றியவழியே தான் நற்பயன் தரும். ஒழுக்கக்கேடு உடையார்க்குப் பயன் தராதன்றோ? மேலோர், தூயரல்லால் நோன்பு கண்டு சிரிப்பர். அடுத்து 'ஊண் இலான் உதாரதை'. ஊண் என்பது உணவு. அது போனகம் என்றும் புகலப்படும். உதாரதை பிறர்க்கு ஈகையாகும் - கொடுத்தலாகும். ஒரு குடும்பத்தில் புதல்வோராய் இருக்கும் போது தாய், தந்தையர் இடமிருந்து உணவு கிடைக்கின்றது. குறிப்பிட்ட கால எல்லையின் பின், ஒவ்வொருவரும் தத்தமில் தங்கி இருக்க வேண்டி உளது. பின்னர் தான் வருந்திப் பாடுபட்டுழைத்து உணவை உண்ண வேண்டியிருக்கின்றது. இந்நிலையிலேதான் 'போனகம் என்பது தானுழந்துண்டல்' என்றாகின்றது. ஒரு சிலர், அறிவனீத்தாலோ, முயற்சி இன்மையாலோ உணவின்றி வருந்துதலும் உண்டு. அவ்வாறு வருந்துபவர், பிறர்க்கு உணவளிக்க, உதாரதை செய்ய முற்படுவர். அன்னமும் கறியமுதும் அளிப்போமென்று ஆரவாரம் செய்வர். 'இயல்பலாதன செய்யேல்' என்று ஆன்றோர் ஆணையிட்டதையும் அறியார். மூடன் ஒருவன், செய்யும் முறை அறிந்து செய்யத் தெரியாத ஒருதொழிலை மேற்கொள்ளுவானாயின் அது பயன்படாது குற்றப்படும் அன்றோ! உணவுக்கு வழியிலான் ஈகை நகை விளக்கும் தானே!

தொடர்வது - 'ஏணிலான் சேகம்'. வலிமை அற்றேனின் வீரத்தனம். ஏண் - வலிமை; சேவகன் - வீரன். சிவபிரான் திண் சிலை ஏந்தியவீரன் என்று

பேசப்படுகிறார். கம்பநாடர் இராமனை சேவகன் என்று ஏத்துகின்றார். தமிழர் வரலாற்றில் வீரர் பலர் வருகின்றனர். வீரத்தாய் ஒருத்தி 'யுத்த களத்தில் யானையை வேலால் வீழ்த்தித் திரும்புதல் காளைக்கு - இளைஞனுக்கு - கடன்' என்கிறாள். வலிமை அற்ற கோழை ஒருவன் தன்னை வீரமுடையான் என்று கூறுதல் நகைப்புக்கு இடமன்றோ!

இறுதியாக வருவது - 'தமிழ் தேற்றதான் கவிதை' செய்தலாகும். முன்பெல்லாம் செந்தமிழ் இலக்கியங்களை நன்கு பயின்றவர்களே பாடல்களை யாத்தனர். கல்லாதார் அறிவுடைமை ஒருகால், மிக நன்றாக இருப்பினும் நூலறிவுடையோர் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. 'கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும் - கொள்ளார் அறிவுடையார்' என்பது வள்ளுவர் வாய்மொழி. வரம்புசிதைந்த பாடல்களை முந்தையோர் கண்டித்தனர்; தண்டித்தனர். 'தமிழறி யாத்துரைகள்' பாராட்டினர். செந்தமிழ் கற்காதான் பாடலும் நகை விளைக்கும் என்கிறார் காரியாசான். இனிச் சிறு பஞ்சமூலம் பாடலை நோக்குவோம்.

நாணிலான் சால்பும், நடையிலான் - நன்னோன்பும்

ஊணிலான் செய்யும் உதாரதையும் - ஏணிலான்;

சேவகமும்; செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்;

நாவகமே நாடி நகை.

நாணொ கூடிய சால்பினராய், ஒழுக்கம் பேணி, விரதம் காத்து, முயன்றுழைத்துப் பிறர்க்கும் கொடுத்துண்டு, நூல் பல கற்றுக் கவிபாடி வாழ்வோம்.

## மனநோய்க்கு மூலம்

நமது வாழ்வில் பல்வேறு நோய்கள் உண்டாகின்றன. நோய்களை இரு கூறுபடுத்தலாம். அவை உடலைப்பற்றியன. மற்றையது உளத்தைப்பற்றியன. உளம் - உள்ளம், மனம். திருக்குறள், உணவு மிகுந்தாலும், குறைந்தாலும் வாத, பித்த, சிலேட்டுமங்கள் நோயை உண்டாக்குமென்று கூறுகின்றது. தொடர்ந்து அளவை அறிந்து உண்பானுக்கு மருந்து வேண்டுவதில்லை என்று விரிக்கின்றது.

நோயையும் அதன் காரணங்களையும் அதைப்போக்கும் உபாயங்களையும், அறிந்து தவறாதபடி பரிகரித்தல் வேண்டும். நோய்களைப் போக்க இன்று பல மருந்து வகைகள் உண்டு. மருத்துவத்துறை விஞ்ஞான வழியில் மிகமிக வேகமாக வளர்ந்துள்ளது. உடல்நோய்களை அன்றி உளநோய்களைப் பற்றியெல்லாம் மிக நுண்ணியதாக ஆய்வுகளை நடத்துகிறார்கள்.

உணவு நிலையில் அன்றி வேறும் பல வழிகளில் மக்கள் நோய்வாய்ப்படுகின்றனர். இன்று தேவைகள் பெருகிவிட்டன; வாழ்க்கை வளங்கள் மிகுந்துவிட்டன. எல்லோரும் எல்லாவற்றையும் பெற இயலாதிருக்கின்றது. தோல்வி, துயர்ங்கள் அதிகரித்துவிட்டன. மனநோயாளர் அளவு பெருகிக் கொண்டு போவதாகச் செய்திகள் கூறுகின்றன.

எங்கள் புலவர் காரியாசான் உளநோய் உண்டாதற்குரிய காரணிகள் - மூலங்களை - ஆராய்ந்து தாங்கண்ட முடிவுகளை எம்முன் வைத்துள்ளார். அவை அரம்போற் கிளை, அடங்காமனைவி, அடங்காதன செய் அடிமை, மரம போல் மகன், நஞ்சனைய வஞ்சர் அயலிருப்பு என்பனவாம்.

முதலில் அரம்போற்கிளையை எடுத்துக் கொள்வோம். அரம் என்பது ஊரக்கான் ஆயகருவி. அராவப் பயன்படுகிறது. இரும்பினை அழிக்கப் பயன்படுகின்றது. கிளை உறவினரைக் குறிக்கின்றது. 'தல்' ஈறு கெட்டதொழிற் பெயர். கிளைத்தல் - நெருங்குதல். இஃகுது ஆகுபெயராய்த் தன்னொடு நெருங்கி - கூடி, வாழ்வாரை உணர்த்துகின்றது. அவர் தாய் வழியினரும், தந்தை வழியினரும் ஆவர். 'கிட்ட இருந்தால் முட்டப்பகை; அகல இருந்தாற் சகலரும் உறவு' என்பது முதுமொழி. ஒருவன் கல்வி, செல்வ வளம் பெற்றிருக்கும் வழி. உறவினர் சிலர், அழுக்காறு கொள்வதும் உண்டு. அதனால் அருந்துயர் விளையும். மனத்துயர் மிகும். மனநோய் ஏற்படும்.

அடுத்தது கட்டுக்கடங்கா மனைவி. ஒருவனது இல்லாளிடத்தே இல்லறதுக்குரிய நற்குண நற்செயல்கள் இல்லாவிடின், செல்வம் முதலிய பிற வளங்கள் மிக்கிருந்தும் பயன்படாது போகும். புகழ் புரிந்த இல்லாள் - மனைவி இல்லாதவனுக்கு சிங்கேறு போன்ற பீடு நடையில்லை. 'பெண்டிர்கழகு எதிர் பேசாதிருத்தல்', 'குலமகட்கழகு கொழுநனைப் பேணுதல்', 'துடியாப் பெண்டில் மடியின் நெருப்பு' போன்ற ஆப்த வாக்கியங்கள் நாமறிந்தனவே! தனக்கு அடங்கா மனைவியால் மனநோய் ஏற்படாதிருக்க முந்தையோர் 'கூறாமற் சன்னியாசம் கொள்' என்றனர்.

தொடர்வது அடங்கா அடிமை. அங்கு அடிமை வேலையாளைக் குறிக்கும். பாரதியார் வேலையாளைச் சேவகன் என்கிறார். சேவகனைப் பற்றி நிரம்பக் கூறியுள்ளார். 'கூலி மிகக் கேட்பார்; வேலைமிக இருந்தால் வராது தன்வீட்டில் நின்றிடுவார். ஓயாமல் பொய் சொல்வார். ஒறு சொல்ல மற்றொன்று செய்திடுவார். வீட்டுக்காரருக்கு வேண்டாதவருடன் தனியிடத்தில் பேசுவார். உள்வீட்டுச் செய்திகளை ஊரம் பலத்தே உரைப்பார். வேலைக்காரரால் பட்ட

சிரமமோ பெரிது' என்கிறார். எங்கள் புலவரும் அடங்காதென செய்யும் அடிமையால் அகம் வேதனையுறுமென்கிறார். மனநோய் உண்டாகும்.

அடுத்து மரம் போல் மகன். ஒரு தந்தை நற்புதல்வனைப் பெறுதல் அவன் பெறும் பேறுகள் அனைத்தினும் மேலானதாகும். தந்தைக்கு மகன் செய்யக் கூடிய உதவி 'இவனை மகனாகப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ?' என அவன் கல்வி, கேள்வி, அறிவொழுக்கங்களில் சிறந்து விளங்குவதாகும். மேலோர் சபைநடுவே ஒருவர் நீட்டிய ஓலையை - வாசிக்கத் தெரியாது நின்றவனையும் ஒருவர் குறிப்பை அறிந்து நடக்கமாட்டாமல் நின்றவனையும் 'மரம்' என்று கூறினர்.வள்ளுவரும் 'மரம்' குறித்து கூறுவதை அறிவோம். மரம் போன்ற மக்களால் மனநோய் மிகுந்தானே!

இறுதியாக நஞ்ச வஞ்சர் அயலிருப்பு. 'அயலோ தாயோ' என்றொரு தொடர் மொழியை அடிக்கடி கேட்கின்றோம். அயலோர் தூயோராய் இருந்து விட்டால் 'இன்பந்தான்'. சில வேளைகளில் நஞ்சவஞ்சம் கள்வரும் அயல் வீட்டாராகி விடுவர். அவர்களும் மனநோய்க்கு வித்தாகி விடுவர். இனிப் பாடலைப் படிப்போம்.

அரம்போல் கிளை; யடங்காப் பெண்; வியக்கத் தொண்டு

மரம்போல் மகன்; மாறாய் நின்று - கரம் போலக்

கள்ளநோய் காணும் அயலைந்தும் ஆகுமேல்

உள்ளநோய் வேண்டா உயிர்க்கு.

(கரம் - நஞ்சு, கள்ளம் - வஞ்சனை உள்ளம் [மனம்])

நல்ல கிளைஞருடன் பெண்ணரீமை மாறா இல்லா ளொடும் இனிய ஊழியருடனும் நற்புதல்வர்களுடனும் வஞ்சமிலா அயலாரோடும் இணைந்து மன அமைதி பேணுவோம்.

## காரியாசான் கண்ட நாய்கள்

நாம் அறிந்த விலங்குகளில் நாயும் ஒன்று. பேரருளாளர்கள், தம்மை நாயென்ம் நாயினும் கடைப்பட்டவர் என்றும் கூறுவர். திருநாவுக்கரசு சுவாமிகள் 'நாயினும் கடைப்பட்டேனை நன்னெறி காட்டி ஆண்டாய்' என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'நாயேன் பலநாளும் நினைப்பின்றி' என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் 'நாயான நத்தம்மை ஆட்கொண்ட நாயகனை','நாயிற் கடைப்பட்ட நாயேனே' என்றும் எல்லாம் கூறுவர்.

ஒருவர் மற்றொருவரை, வெட்கமற்ற - நாணமற்ற - நாய் என்று திட்டுவதனையும் காண்கின்றோம். நன்றி அறிதலை உடைய நாய் அதன் பழக்கப்பண்பால் கேவலம் இகழவும் படுகின்றது.

எங்கள் புலவர் காரியாசான் ஆறறிவு படைத்த மனிதருள்ளும் ஐந்து நாய்களைக் காட்டுகின்றார். நாணிலாதான்; நன்கு நள்ளாதான், பெரியயரைப் பேணாதான், பிறர் சேவகன், பணமின்றிப் பரத்தையர் வதியில் திரிவோன் இவரெல்லாம் நாய்களாம்.

நாண் என்பதற்கு முன்பும் விளக்கம் அறிந்தோம். மகளிர்க்குரிய நால்வகைக் குணங்களில் ஒன்றாகிய நாண் வேறு. இங்கு குறிப்பிடப்படும் நாண் வேறு. பிந்திய நாண் மக்கள் அனைவருக்குமே பொதுவாக இருக்க வேண்டிய நாண். அது 'ஒருவர் தமக்கு தகாத கருமங்களைச் செய்ய வெட்கப்படுதல்' என்பதாகும் பெரியராயினார் இழிந்த கருமங்களைச் செய்ய நாணுவர். உணவும் உடையும் முதலாயின எல்லோர்க்கும் பொது. நன்மக்களுக்கு நாணம் சிறந்த அணிகலமாகும். பண்டையோர் பொதுமக்களுக்கு அன்றி பாராளும் வேந்தருக்கும் அதனைச் சிறந்த அணிகலமாக்கினர்.

புறப்பாடலுள் ஒரு செய்தி வருகின்றது. கிள்ளிவளவன் என்னும் வேந்தன், கருவூர்க் கோட்டையை முற்றுகையிட்டிருக்கிறான். ஆங்கு கருவூர் மன்னன் அடைபட்டிருக்கிறான். காவன் மரங்களை வெட்டும் ஓசை செவியில் நன்கு படுகின்றது. பாவம்! போருக்கு வராது உள்ளே அஞ்சி இருக்கின்றான். அத்தகைய வேந்தனுடன் சண்டையிடுவது தூயவரீருக்கு நாண் தருவதாகும். ஆலத்தூர் கிழார் எனும் புலவர் 'சிலைத்தார் முரசங்கறங்க - மலைத்தனை என்பது நாணுத்தகவுடைத்தே.' (புறம் 36) என்று பாடுகிறார். வலியர் மெலியரை வருத்துவது வெட்கம் விளைவிக்கும்.

நன்கு நள்ளாதானை நோக்குவோம். நன்கு நள்ளாதான் என்பது இனிதே நட்புக்கொள்ளாதவன் எனும் பொருளது. சிலர் ஊழ் வலியான் பல்வளமும் படைத்தவிடத்து பிறரை மதிப்பதும் இல்லை. நண்பு பூண்பதுவுமில்லை. தனித்தே இருக்க விழைகின்றனர். மனம் கலந்து பழகும் தன்மை இல்லாரது வாழ்க்கை, குளப்பரப்பானது கரையில்லாதது, நீர்நிறைந்தாற் போன்றது என்று வள்ளுவர் பெருமான் கூறுவர். நண்பர் இல்லாதார் வாழ்க்கை, குளப்பரப்பானது கரையில்லாது, நீர்நிறைந்தாற் போன்றது என்று வள்ளுவர் பெருமான் கூறுவர். நண்பர் இல்லாதார் வாழ்க்கை மணம் அற்ற மலர் போன்றது. மிகப்பெரிய ராமன் ஏழைமை வேடன் குகனுடன் நண்பு பூண்டான். குகனைத் தம்முடன் பிணைத்து, ஐவரானோம் என்று அகமிக மகிழ்ந்தான்.

பெரியாரைப் பேணுதல் என்பது தந்தை, தாய், தம்முன் நிகரில் குரவர் முதலியோரைப் பேணுதலாகும். பெரியோர் தம்மை அடைந்தாரைத் துயர் தீர்த்து நல்ல வண்ம் வாழ வைப்பார். தீ நெறியின்று நன்னெறிக்கண் வாழவைப்பர். திருவள்ளுவதேவர் பெரியாரைப்பேணித்தமராகக் கொள்ள வேண்டும் என்று ஆணை மொழிகின்னறார். இனி பெரியார் என்பதற்குத் தவத்தாற் பெரிய துறவியரையும் வலிமை மிக்க வேந்தரையும் கூட இணைத்துக் கொள்ளலாம்.

நகுசன் என்பான் இந்திரப்பதம் பெற்றிருந்தான். அதனால் கர்வங் கொண்டான். இருடியர் ஒரு சமயம் அவனைச் சிவிகையில் சுமந்து சென்றனர். நகுசன், விரைந்து செல்லுங்கள் என்னும் பொருள்படச் ‘ஸர்ப்ப ஸர்ப்ப’ என்று கூறினான். இருடியர் அதனைப் பொருள் ஆக்கினர். அகத்தியர் பாம்பாகும்படி சபித்தார். இந்திர பதமும் இழந்தான்.

இனி சேவகரை எடுப்போம். ஈங்குச் சேவகராவர் பிறர்க்கு ஊழியம் செய்வோர். தமக்கென ஒரு கொள்கையில்லோர், ஏவின செய்வார். அவரும் நாய்கள் தாம் என்கிறார்.

இறுதியாகக் கையில் பணம் இன்றிப் பரத்தையர் வதீயில் திரிவோன், அதாவது கைத்து இல்லான்; பூண்முலையார் சேரி திரியும் கைத்து இல்லானும் நாயே! பொது மகளிரை, வள்ளுவர் பெருமான் வரைவின் மகளிர் என்பர். பொது மகளிர் ஒருவனை அன்புபற்றி அன்றிப பொருள்பற்றியே விரும்புவர். அவர் அழகு, சொல், செயல் மூன்றானும் ஆடவரை வஞ்சிப்பர். கீழ் மக்கள் பொதுப் பெண்டிரையும் கள்ளினையும் சூதினையும் பெரிதும் விரும்புவர். புலவர் பருத்தி விற்கும் கடையில் வறிதே கிடக்கும் நாயென இவரை சற்றுக் கூடுதலாக விமர்சிக்கின்றார்.

இனிப் பாடலைப் படிப்போம்.

நாணிலன் நாய்; நன்கு நள்ளாதான் நாய்; பெரியார்ப்

பேணிலன் நாய்; பிறர் சேவகன் நாய்; - ஏணில்

பொருந்திய பூண்முலையார் சேரிகைத் தில்லான்

பருத்தி பகர்வுழி நாய்.

‘கைத்து இல்லான் - கைப்பொருள் இல்லான்; ஏண் - உயர்வு; மனநிலையுமாம்.’

பல்லுயிர்க்கும் தாய் அன்னார்

பழந் தமிழ் புலவோர் அனைத்து மக்களும் அறத்தொடு கூடிய நல்வாழ்வை மேற்கொண்டு இன்பங்கான வேண்டுமென்று விரும்பினர். அமையம் வாய்க்கும், வழியெல்லாம், அறத்தொடு கூடிய நல்லொழுக்கத்தை வற்புறுத்தினர். வள்ளுவப் பெருந்தகையார், ‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்’ என மொழிந்து வைத்தார்.

சங்ககாலச் சான்றோர்களும் அவர் பின்வந்த பெரியோர்களும் 'ஆற்றின் ஒழுக்கு அறண் இழுக்கா இல்வாழ்வை' மக்களிடையே கண்டு களிப்பெய்துதலைத் தம் தலையாய கடனாகக் கொண்டிருந்தனர்.

சங்கம் மருவிய கீழ்க்கணக்கு நூல்களைப்பற்றி முன்பு தெரிந்திருக்கின்றோம். அவற்றுள் ஏலாதி என்பதும் ஒன்று. அதனை இயற்றியவர் கணி மேதையார். அவர் கணிமேதாவியார் என்று அழைக்கப்படுவதும் உண்டு.

செந்தமிழ் மாந்தர் சித்த மருத்துவத்துறையில் ஏற்றம் படைத்து நின்றவர். அவர் கண்ட உயரிய மருந்துகளுள் ஏலாதி என்பதும் ஒன்று. தங்கம் முதலிய பொருள்களைக் கொண்டு அதனை இயற்றுவர். ஏலாதி கொடிய கொடிய உடற்பிணிகளைப் போக்கவல்லது. எங்கள் கணிமேதையார் உடற்பிணிக்கன்றி உயிர் பிணிக்கும் மருந்து கூறுகிறார். அவர் பலபல உயிர்களுக்கு தாயன்னாரைப் பற்றி என்ன கூறுகின்றார் என்று காண்போம்.

தாற் என்னும் சொல் மிகமிக உயர்ந்தது. 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை' என்று பால வயதில் படித்தோம். மணிவாசகப் பெருமான் இறைவனைத் 'தாயேயாகி வளர்த்தனை போற்றி' என்று வாய்மொழிகின்றார். தொடர்ந்து, 'தாயாய் முலையைத் தருவானே' என்றும் 'தாயிற் சிறந்த தயவான தத்துவனே' என்றும் பிறவாறுமெல்லாம் கூறவார். மூவர் முதலிகளும் இறைவனைத் தாயாகவே கண்டனர். பிற சான்றோரும் தாய்க்கு மகத்துவம் நல்குவர். நாம் காணும் தங்ககுடும்பத்துடன் மட்டும் பெரும்பாலும் நின்று விடுகின்றனர். பரம்பரை என்னும் கயிறு இற்று விடாமல், புதல்வரை ஈன்று புறந்தந்து பணிபுரிகின்றனர். தாயானவள் அன்பின் கொள்கலம். அருளின் விளக்கம். தன் குழந்தைக்காக அவள் பத்தியம் காத்து மருந்துண்கிறாள். சேய்குற்ற வருத்தம் பொருளாய் ஏங்குகின்றாள். சேய் சிரித்தால் தான் சிரிக்கின்றாள். நிற்க. புலவர் கணிமேதையார், ஓருயிர்க்கன்றி பல்லுயிர்க்கும் தாயன்ன ஒருவரை எம்முன் நிறுத்துகின்றார். ஆம் அவரிடத்திலே, நிறையுடைமை, நீர்மையுடைமை, கொடையுடைமை, பொறையுடைமை, பொய்மையொடு புலால் மறுத்தல் ஆதிபொருவரும் குணநலங்கள் குடிகொண்டு இருக்குமாம்.

நிறையுடமை என்றால் என்ன? ஆசிரியர் நக்கீரர் 'காப்பன காத்து, கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்ம்' என்பர். இதனை எளிமையாகக் கூறுவதாயின் உள்ளத்தை தீய வழிகளில் செல்லவிடாது தடுத்தல் என்று கூறலாம். இவ்வரிய குணத்தை எவரும் எந்த நேரத்திலும் வாழ்விலும் கடைப்பிடித்தல் வேண்டும்.

நீர்மை, உடமையைக் காண்போம். நீர்மை, தன்மை அது இனியசுபவாம். இனியசுபாவம் என்பது அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் நீக்கி வாழ்வதாம். அழுக்காறாத இவை மனத்தை மாசுபடுத்தும். ஒருவர் செந்தண்மை பூண்டொழுக மனமாசற்றிருத்தல் வேண்டும். இனி நீர்மை என்பதற்கு ஒப்புரவு என்று பொருள்கோடலும் உண்டு.

அடுத்துவருவது கொடையுடமை. கொடையென்பது ஈகை, அது வறியார்க்கு ஒன்று கொடுத்து மகிழ்தலாகும். இந்நிலை முன்னைத் தவத்தாலேதான் வரும் என்பர். 'இரப்பார்க் கொன்று ஈயாமை அச்சம்' என்று நாலடியார் கூறும் பண்டைய கொடை வள்ளல்கள் ஈகைத்திறத்தால் பார் உள்ளளவும் பாராட்டப்படுவர்.

இனி, பொறையுடைமையை நோக்குவோம். ஒருவன் தனக்குப் பிழை செய்த வழி அதனைப் பொறுத்தல் - தாங்கிக் கொள்ளுதல் பொறையுடைமையாகும். தன்னைத் தோண்டுவோரை நிலம் தாங்குகின்றதே! அதே போல் தன்னை இகழ்வாரை பொறுக்க வேண்டும் என்பது நூல் துணிபு. 'பொறுத்தார் உலகாழ்வார்' என்பது பொன்மொழி.

பொய் பேசுதலும் புலன் மறுத்தலும் தீது பயப்பன என்பது நாம் அறிந்தனவே! வள்ளுவர் பெருமான் நிறையக் கூறியுள்ளார். பொய்யாமை என்னும் அறத்தினை கடைப்பிடிக்கம் ஒருவன் பிற அறங்களைச் செய்ய வேண்டுவதில்லை என மேலோர் கூறுவர்.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லாஉயிரும் தொழும்' என்பது தமிழ் மறையாகும். எவரொருவர், நிறை, நீர்மை, கொடை, பொறை, வாய்மை, புலால் மறுத்தல் முதலியன உடையராய் இருக்கின்றாரோ அவர், தாயை ஒத்தவராவர். இனி பாடலை நோக்குவோம்.

நிறையுடைமை, நீர்மை உடைமை கொடையே

பொறையுடமை பொய்மை புலாற்கண் - மறையுடமை

வேயன்ன தோளாய்! இவையடையான் பல்லுயிர்க்கும்

தாயன்னன் என்னத்தகும்.

தேவாதி தேவன் ஆவோர்

தேவாதி தேவன் என்றதும் உங்களுக்கு ஆதியங் கடவுளின் எண்ணம் எழலாம். அப்படி ஒன்றும் இல்லை. அனைத்துப் போகங்களும் துய்த்து வாழும் இந்திரனைத்தான் அத்தொடர் குறிப்பிடுகின்றது. இந்திரன் நூறு யாகங்களைச் செய்தே அனைத்து வளங்களும் நிறைந்த அப்பதவியைப் பெற்றனன் என்பர்.

பூதலத்து வாழும் மனிதர்கள் எரியோம்பும் யாகாதிகளை இயற்றாது, மேலான குணநலன்களை ஓம்பி, இந்திர போகங்களை எய்தலாம் என்பது ஒருதலை.

உலகம் விசித்திரமானது. மக்களிடையே ஒழுக்க மேம்பாடு இல்லாதவர்களும் கூட வாழக் காண்கிறோம். அவர்கள் தான் அசுரர்கள். ஒழுக்க சீலம் உள்ளவர்களும் இல்லாமல் இல்லை. அவர்கள் சுரர்கள். ஆம் தேவர்கள். ஒழுக்க சீலம் உடையாரை, யோகாதிகள் தாமே வந்து சேரும். அவர்கள், 'இந்திரராகிப் பார் மேல் இன்பமுற்று இனிது' வாழ்வர்.

ஒழுக்கம் எல்லாச் சிறப்பினையும் தரும். அது உயிரினும் மேலானதாக பாதுகாக்கப்படுதல் வேண்டும். ஒழுக்கமிலா வாழ்வு பழி, பாவம், பகை, அச்சம் முதலிய அனைத்தையும் வளர்க்கும். ஒழுக்கம் உடையோர் வழுக்கியும் தீயவற்றை எண்ணார்; சொல்லார்; செய்யார்.

மக்களுட் சிலர் நாளெல்லாம், தம் குடிப்பெருமை, குலப்பெருமைகளை கூறித்திரிகின்றனர். தவத்தோர் அதனைக்கேட்டு அருவருப்பு அடைகின்றனர். 'சாதியாவதேதடா..... சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே' என்று சாடுகிறார்கள். 'இறைச்சி தோல் எலும்பிலே இலக்கமிட்டு இருக்குதோ' என்று நகையாடுகின்றனர். 'நல்ல குலமென்றும் தீயகுலமென்றும் சொல்லள வல்லால் பொருளில்லை' என்று நாலடியார் நவிலுகின்றது.

புறநானூற்றில் ஒரு செய்தி வருகின்றது. மண்ணாளும் வேந்தனையும் கல்லா ஒருவனையும் சமன் செய்து காட்ட முற்படுகின்றது. '....உண்பது நாழி. உடுப்பவை இரண்டே, பிறவும் எல்லாம் ஓரொக்குமே' என்று குறிப்பிடுகின்றது. எங்கள் ஔவைப்பாட்டியார் 'நீதி வழுவாநெறி முறையில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என்று ஈகைப்பண்பை வைத்து உயர்வு தாழ்வு காட்டுகின்றார்.

சிலர், நாளெல்லாம் பிறரிடத்தே ஊனம் - குறை, குற்றம் காண்பதனையே தொழிலாகக் கொண்டிருப்பதனையும் காண்கின்றோம். யாரையும் நிறை சொல்ல நெஞ்சம் ஒருப்படுவதில்லை. குறை, குற்றம் காண்பதனைஅன்பினால் வெல்லமுடியும். திருத்தக்கதேவர் எனும் புலவர் 'அன்பு உண்டாயின் தீயனவும் நல்லனவாகும்அன்பில் வழி நல்லவும் கூடத் தீயவாகும்' என்பர்.

வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்

தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்

ஒரும் வையத் தியற்கையன் றோவெனா

வரீ வேல் நெடுங் கண்ணி விளம்பினாள்

என்பது சீவக சிந்தாமணி.

தக்கோர் தாம் பெருஞ் செல்வர் எனவும் காணி நிலம், ஆளடிமை அத்தும் உடையவர் எனவும் செம்மாந்து தற்புகழார், அவர் நிறை நீரவர். எந்த நிலையிலும்

தம் பொருள், வாழ்வு, இளமை முதலியவற்றை வெளிப்படுத்த மாட்டார். உடையது விளம்பி உறுதுயர் அடையார்.

மேலோர் என்றும் ஈந்துண்பர் - வறியோர்க்குக் கொடுத்துத் தாமும் உண்பர். இந்திரர் அமிழ்தம் இயைந்த போதும் அதனைத் தனித்து உண்ணார்.

பெருஞ்சித்திரனார் கடைச் சங்கப்புலவர், அவர் குமணவள்ளலிடம் பெரும் பொருள் பெற்று வந்திருந்தார். தம் திருமனையாரிடம் கூறுகின்றார். 'என்மனைக் கிழத்தியே! இதோ குமணன் தந்த பெரும் பொருளைக் கொண்டு வந்துள்ளேன் நின்னை விரும்புவோர், நீ விரும்புவோர், நம் சுற்றத்தினர், முன்பு எம் கடும் பசி தீர மீளப்பெறுதல் குறித்துப் பொருள் தந்தோர், மற்று இத் தன்மையர், இவர் என்று கருதாது என்னோடும் ஆராயாது, நாம் வல்லாங்கு - திறமையுடன் - வாழ்வோம் என்றும் எண்ணாது எல்லோர்க்கும் கொடு! கொடு!! என்கிறார். இங்ஙனம் அவர் ஈந்துவக்கும் சிறப்பு எத்தகையது! பண்புடையாராலே தான் உலகு மண்புக்கு மாயாது வாழ்கின்றது. நிற்க.

சுருங்கக் கூறின் தம்குலம், குடிப்பிறப்பு என்பனவற்றைப் பெருமையாக எடுத்துக் கூறாமலும் பிறர் குறைகளைக் கூறாமலும் உடைமைகளையும் இளமையையும் விளம்பாமலும் பிறருக்குக் கொடுத்துண்டு வாழப்பழகுதல் வேண்டும்; ஒழுகுதல் வேண்டும். அங்ஙனம் யாரொருவர் ஒழுகுவாரோ அவருக்கு அனைத்துப் போகங்களும் வந்து குவியும். அவரைத் தேவாதி தேவனாக நாம் தெளிந்து கொள்ள வேண்டும்.

இனி ஏலாதிப் பாடலை நோக்குவோம்.

உரையான் குலன் குடிமை ஊனம் பிறரை

உரையான் பொருளொடுவாழ்(வு) ஆயு - உரையானாய்ப்

பூவாதி வண்டு தேர்ந் துண்குழலாய் ஈத்துண்பான்

தேவாதி தேவானத் தேறு.

(ஊனம் - குறை, குற்றம்; ஆயு - வயது [இளமை] ஆயுள் )

ஆகவே இவ்வுயரிய பண்புகளைக் கடைப்பிடித்து இந்திர போகம் எய்துவோம்.

'தேவரும் விரும்பும் செய்கையோர்'

தேவர் மனிதர் முதலியோர் எழுவகைப் பிறப்பினுள் இடம் பெறுகின்றனர். தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன நீர்வாழ்வன தாவரம் முதலியவற்றை எழுபிறப்பு என்று நூலோர் குறிப்பிடுகின்றார்கள். இந்நாளில் அசையும் பொருள்கள் அனைத்தையும் விலங்கினுள்ளும், அசைவில் பொருள்கள் அனைத்தையம் தாவரம் என்னும் பிரிவினுள்ளும் அடக்குவர். சரம், அசரம் எனவும், இயங்கியற் பொருள் நிலையியற் பொருள் எனவுமெல்லாம் கூறுவர்.

தேவர் என்பார் யார்? அவர் சிறந்த மேம்பட்ட குணசீலங்களைக் கொண்ட மேலோர் ஆகலாம். பௌராணிகர் தேவரை இருதிறத்தினராகக் கூறுவர். ஒரு வகையினர் ஜன்மதேவர். மற்றவர் கன்ம தேவர். ஜன்மதேவர் சிருட்டி காலத்தே உலகிற்கு உதவுவதற்காக உண்டாக்கப்பட்டவர். கன்ம தேவர் மனிதருள் புண்ணிய விசேடத்தால் சுவர்க்கம் புகுந்த தேவகதி அடைந்தவர். எவ்வாறெனினும் அவர்கள் மேலானவர்; சிறந்தவர்; கொழுந்தையர். மாநிலத்து மக்களின் இனிய வாழ்வை வளர்க்க முயல்பவர்.

மக்கள் என்பார் யார்? அவரும் இருதிறத்தினர்களாகவே காணப்படுகின்றனர். ஒரு திறத்தார்- மக்கள். இன்னொரு திறத்தார் - மாக்கள். ஆசிரியர் தொல்காப்பியனார், ‘மாவும் மாக்களும் ஐயறிவுடையர்’ என்பர். மாக்கள் உருவத்தால் மனிதரே போல்வார் எனினும், செயல்களால் விலங்குகளை ஒப்பர். மக்களாவர் புலனறிவு ஐந்துடன் ஆராய்ந்தறியும் பகுத்தறிவும் படைத்தவர். பகுத்தறிவு மனிதனை விலங்கு நிலையில் இருந்து மேனிலைக்குக் கொண்டு செல்கின்றது. அப்போது தான் மக்கள் மேம்படுகின்றனர். தக்கன இன்னன; தகாதன இன்னன என்று ஆராய்ந்து வாழ்கின்றனர்.

மக்கள் மேற்கொள்ளும் வாழ்வியலும் இருதிறத்தனவாம். அவற்றை இல்லறம் என்றும், துறவறம் என்றும் வகுத்துக் காண்கின்றோம். வள்ளுவர் உள்ளத்தின்படி, இல்லற வாழ்வே அறம் என்று கொள்ள வேண்டும். இல்லற வாழ்வினர்க்குத் தலையாய உடமைகள் இருக்கக் காண்கின்றோம். பிரமசாரி, வானப் பிரத்தன், சந்நியாசி, ஆதாரமானோரால் கைவிடப்பட்டவர், திக்கற்றவராய்ச் செத்தவர், முதலிய அறுவருடன், தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், தான் என்னும் ஐந்திடத்தையும் பேணும் கடப்பாடும் அவர்க்குண்டு.

இப்போது நாம்பிறிதும் ஒன்றை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டி உள்ளது. பிறக்கும்போதே மனிதருள் சிலர் குறைபாடுகளுடன் பிறக்கின்றனர். நூலோர் அவற்றை எண்பேர் எச்சம் என்பர். சூடாமணி நிகண்டு -

‘குறளொடு செவிடு மூங்கை, கூன், மருள் குருடு மாவே

உறும் உறுப்பிலாப் பிண்டம் ஓதிய எண்மெய் எச்சம்’ என்று வகைப்படுத்திக் காட்டுகின்றது.

குறள் - குறளர்; செவிடு - செவிடர்; மூங்கை - ஊமை; கூன் - கூனர்; மருள் - அறிவின்றி மயங்கி இருப்பது; குருடு - குருடர்; மா - விலங்கு வடிவாய் பிறப்பது;

உறுப்பில்லாப் பிண்டம் - தசைத்திரள். இவர்கள் எல்லாமும் கூட இல்லறத்தாரால் பேணப்படற்குரியராம்.

தாயுமானாரடிகள், 'எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே' என்று வேண்டுவதும் செவியிற் கேட்கின்றது. மேலும் மணிமேகலையார் உலக அறவியல் - தரும அம்பலத்தில் - நின்று அட்சய பாத்திரம் கொண்டு,

'ஊரூர் ஆங்கண் உறுபச உழந்தோர்;

ஆரும் இன்மையின் அரும்பிணி உற்றோர்;

இடுவோர் தேர்ந்து ஆங்கு'

இருப்போர், பலருக்கு உணவளித்துக் காப்பது நெஞ்சத் திரையில் தெரிகிறது.

இனி நாம் ஏலாதி நூலுக்கு வருவோம்; அதன் ஆசிரியர் ஒரு செய்தியை வெளியிடுகின்றார். நாம் முன்னே அறிந்து கொண்ட தொழுந்தகைய தேவரால் விரும்பப்பட வேண்டுமாயின் செயற்பாலவற்றைக் கூறுகிறார். யாது செய்ய வேண்டுமாம்?

முடவர்களுக்கும், குருடர்களுக்கும், ஊமைகளுக்கும் யாரையும் தஞ்சார்பில் இல்லாதவர்கட்கும், நூலறிவு அற்றவர்களுக்கும் எல்லாம் பசிப்பிணி நீங்க வயிற்றுக்குச் சோறு கொடுக்க வேண்டுமாம். அங்ஙனம் செய்வோர் தேவரால் பெரிதும் விரும்பப்படுவார்களாம்.

இனி ஏலாதிப் பாடலைக் காண்போம்.

காலில்லார், கண்ணில்லார்; நாவில்லார், யாரையும்

பாலில்லார், பற்றிய நூலில்லார் - சாலவும்

ஆழப்படும் ஊணமைத்தார் இமையவரால்

வழீப்படுவார் விரைந்து.

(வழீப்படுதல் - விரும்பப்படுதல்)

ஏழை எளியார்க்கு உணவளித்து அவர் மகிழ நாமும் மகிழ்ந்தின்புறுவோம்.

யாரைச் சார்ந்து ஒழுகவேண்டும்

உலகவாழ்வு ஒரு பயணம். அது தனித்து இயலமுடிவதில்லை. ஏதோ ஒருவகையில் ஒருவர் மற்றும் ஒருவருடன் சார்ந்தே வாழ வேண்டி இருக்கின்றது. அனைத்து மக்களின் குணநலன்களும் ஒன்றுபட்டன அல்ல; ஆளுக்காள் வேறுபட்டு இருக்கக் காண்கிறோம்.

உலகம் விரோத இரட்டைகளைக் கொண்டது. சிறிது - பெரிது; நன்று - தீது; பகல் - இரவு; மேன் மக்கள் - கீழ் மக்கள்... இப்படியே அடுக்கிக் கொண்டு செல்லலாம். மேலோர் உளராயின் கீழோரும் இருக்கத்தானே வேண்டும்? ஆம். மேலோர் சார்பு மேன்மை தரும்; கீழோர் சார்பு கேடு தரும். இஃது எல்லோரும் அறிந்ததுதானே! மேலோர் - சீரியர் - மேம்பட்ட குணநலங்களைக் கொண்டிருப்பர். கீழோர் - பூரியர் - இழிந்த குணநலங்களைக் கொண்டிருப்பர். ‘பூரியோர்க்கில்லைச் சீரிய ஒழுக்கம்’ என்பது ஆன்றோர் வாக்கு.

சீரியோரின் - மேலோரின் - சிறந்த பண்புகள்தாம் எவை? ஏலாதி நூலுடையார், பெருமை, புகழ், அறம், சீற்றமின்மை, நூலுணர்ச்சி, சால்பு என்று இன்னன்னவற்றையெல்லாம் கொண்டிருப்பர் என்கிறார். அவர் குறிப்பிடும் பண்புகளை - குணநலங்களை - சிறிது காண்போம்.

பெருமை:- பெரியாரது தன்மை. தமிழ்ச் சான்றோர் செயற்கரும் செயல், தருக்கு - கருவம் இன்மை, பிறரிடம் குற்றங்காணாப் பெட்பு.... என்றெல்லாம் சுருக்கமாகக் கூறுவர். பெரியோர் பணிவுடையோராயும் இன்சொல் இயம்புவோராயும் இருப்பர். தம்மினும் பெரியாரைத் தமராகக்கொண்டு ஒழுகுவார். இது வள்ளுவர் பெருமான் திருவுள்ளம்.

இனி புகழ் என்பதை எடுத்துக்கொள்வோம். எமது நினைவில் கீர்த்தி என்னும் பொருளே தோன்றும். பழந்தமிழ் மாந்தர், புகழ் கிடைக்குமெனின் உயிரையும் கொடுப்பர்; பழிகிடைக்குமெனினோ உலகம் முழுவதும் கிடைத்தாலும் அதனை கொள்ளார். மண்ணின் மேல்வான் புகழை நடவே விழைந்தனர். புலாலுடம்பு மறைந்து விடலாம். ஆனால் புகழ் உடம்பு ஒருபோதும் அழிந்து விடுவதில்லை.

அறம் என்றதும் தருமம் என்ற சொல் எமது நினைவில் வரும். அறம் என்பதற்கு பழைய உரைகாரர், நூல்களில் விதிக்கப்பட்டவற்றை செய்தலும் விலக்கப்பட்டவற்றை செய்யாது ஒழுகுதலும் என்றும் பொருள் கூறுவர். இனி, பெரியோர் மேற்கொண்டொழுகும் ஆசாரங்களும் கூட அறத்தின் பாற்படும்.

திருவள்ளுவ தேவர், ஒருவன் தனது மனத்தினிடத்துக் குற்ற மற்றவனாய் இருத்தலே அறம் என்பர்; மேலும் அவர் பொறாமை, பேராசை, கோபம், இன்னாச்சொல் நீங்கிய நிலைதான் மாசற்ற நிலையென விளக்கமும் கூறுவார். நல்ல நினைவும், நற்சொல்லும், நற்செயலும் எல்லாம் அறமே!

இனிச் சீற்றமின்மை என்பதனை எடுத்துக்கொள்வோம்; இது வெகுளி இன்றி வாழ்வதாகும். ஏலாதி உடையார் வெகுளியைச் - சீற்றத்தை - மேலும் ஏன்

கூறினார்? அதனுடைய கொடுமையை நோக்கியே என்போம். சீற்றம் சேர்ந்தாரைக் கொல்லியென்பது திருவள்ளுவர் உள்ளம். பெரியோர் பிறர் தமக்கு 'இணரெரி தோய்வு இன்னா செய்தக்கண்ணும் சினம் கொள்ளார்.' ஒருவர் பிறர் மேற் சினம் கொள்ளின் அது அவர்க்கே தீதாய் முடியும்.

நூலுணர்ச்சியை நோக்குவோம். கல்வியைப் பிற்றைநிலை முனியாது கற்றல் வேண்டும் என்பது பெரியோர் ஆணை. கற்றல் வேண்டும், கேட்டல் வேண்டும் அவற்றின்படி ஒழுகுதல் வேண்டும். கற்றோரே கண்ணுடையார். கல்வி அழக மேலான அழகு. கல்வியாலான அறிவு இறுதிவாராமல் காக்கும் கருவியாகும். அறிவுடையார் துன்பத்தால் துயருறார். அவர் சகல சம்பத்துக்களையும் உடையவராகவே மதிக்கப்படுவர்.

முன்பெல்லாம் சால்பு பற்றி அறிந்திருக்கின்றோம். நற்குணங்கள் அனைத்தும் நிறைந்த ஒரு நிலைதான் சால்பு. சால்புடையோர் பிறருக்குத் தீமை செய்யார். தமக்குத் துன்பம் செய்தார்க்கும் இனியவே செய்வார். சால்பு நிறைந்தவர் ஊருக்கு ஒளி விளக்காவர். எல்லாரும் இன்புற்றிருக்க நினைவதே அல்லாமல் வேறு ஒன்றும் அறியார்.

எவரும் இங்ஙனம் கூறப்பட்ட பெருமை, புகழ், அறம், சீற்றமின்மை, நூலுணர்ச்சி, சால்பு முதலிய அருங்குணஙகளைக் கொண்ட பெரியோர்களையே சார்ந்து ஒழுகுதல் வேண்டும். அங்ஙனமின்றி இவ்வருங்குணங்கள் அற்ற கீழோரைச் சார்ந்து ஒழுகுதல் ஆகாது! ஆகாது!! அங்ஙனம் கீழோரைச் சார்ந்து ஒழுகுவரே ஆமாகில், பாவம், பழி, பகை, சாக்காடு, அச்சம் என்பன தாமாகவே வந்துசாரும். அதாவது, தவ ஒழுக்கங்களால் மேம்பட்ட மேலோரது சாபமொழி, எவ்வாறு தப்பாது சென்று வருத்துமோ அவ்வாறு கீழோர் தொடர்பால் பழிபாவம் முதலியன வந்து வருத்தும். இனி ஏலாதிப்பாடலைப் பார்ப்போம்:-

பெருமை புகழ் அறம் பேணாமை சீற்றம்

அருமைநூல் சால்பில்லார் சாரின் - இருமைக்கும்

பாவம், பழிபகை சாக்காடே, கேடு அச்சம்

சாபம் போல் சாரும் சலித்து.

எனவே நாம் என்றும் மேலோரைச் சார்ந்து, மூடர் உறவு கேடு தரும் என்று எண்ணி, எமது வாழ்க்கைப் பயணத்தை இனிது கொண்டு செல்லுவோமாக.

என்றும் வேண்டும் இனியவை நான்கு

நாம் சங்கமம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கின்றோம். அவற்றுள் இனியவை நாற்பது என்பதும் ஒன்று. அது நாற்பது வெண்பாக்களால் ஆயது. அதன் ஆசிரியர் பூதஞ்சேந்தனார். அவர் பூதன் என்னும் பெரியோனின் மகன் என்று கூறுவர். ஒவ்வெரு வெண்பாவிலும் வாழ்வியலுக்கு இன்றியமையாத இனிய கருத்துக்கள், ஏன் கோட்பாடுகள் நான்கு மட்டும் கூறப்படுகின்றன. அவை எல்லாக் காலத்துக்கும் ஏற்புடையனவாகவே இருக்கின்றன.

முதற்கண் 'ஏவது மாறா' என்று தொடங்கும் பாடலை எடுத்துக் கொள்வோம். அப்பாடலில் புதல்வர், கல்வி, பயிர்த்தொழில், நண்பு கொள்ளல் முதலியன கூறப்படுகின்றன. அவை குறித்துச் சிறிது சிந்திப்போம்.

ஒரு குடும்பத்தின் உயர்ந்த உறுப்பினராக விளங்குபவர் புதல்வர். திருவள்ளுவதேவர், 'தம் பொருள் என்பர் தம்மக்கள்' என்பார். அவர்கள் பிறரால் பழிக்கப்படாதவராய் இருத்தல் வேண்டும். பூதஞ்சேந்தனார் புதல்வர்களை கிளைமை என்கிறார். ஞானசம்பந்தப்பெருமான் புதல்வர்களைக் கிளை என்றே வழங்குகின்றார். 'நஞ்சணியும் கண்டனுக்கு ஆட்செய்தால் நம் கிளை கிளைக்கும்' என்று அருளுகின்றார். நாலடியாருள்ளும் 'கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி' என்று கூறப்படுகின்றது.

புதல்வர்களின் எச்செயல் இனிமை பயக்கும் என்பது வினா. ஆசிரியர் 'ஏவது மாறாமை' என்கிறார். அதாவது தாய், தந்தையர் மற்றும் உள்ளோர் இதைச் செய் என்று கூறியபோது அதனை மறுக்காது குறிப்பறிந்து செய்தலாகும். இதனையே அவ்வை மூதாட்டியாரும் 'ஏவாமக்கள் மூவா மருந்து' என்கிறார். இதைச் செய்யென்று ஏவமுன்னே குறிப்பறிந்து செய்யும் மக்களை, சாவாமைக்குக் காரணமாகிய மருந்து - தேவாமிர்தம் - என ஒருபடி மேலே சென்று குறிப்பிடுகின்றார். இதனையே வள்ளுவரும் 'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்' என்கிறார். இங்கு 'பாடறிந்தொழுகும் பண்பு' பிரகாசிக்கின்றது; பளிச்சிடுகின்றது.

அடுத்துப் புலவர் காணும் இன்செயல், 'நவைபோகான் நாளும் கற்றல்' ஆகும். கல்வியின் சிறப்புப் பற்றி நாம் நன்கு அறிந்திருக்கின்றோம். 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் வேண்டும்' என்பது பெரியோர் வாக்கு. இங்கு கல்வி குறித்து நாலடியார் என்னும் நூல் கூறுவதை நினைவு கூர்தல் நன்றாகும்.

இம்மை பயக்குமால் ஈயக்குறைவு இன்றால்

தம்மை விளக்குமால் தாம் உளராக் கேடின்றால்

எம்மை உலகத்தும் யாம் காணோம் கல்விபோல்

மம்மர் அறுக்கும் மருந்து.

(தாம் உளரா - தாம் உயிர் உள்ளவராய் வாழும் வரை; மம்மர் - மயக்கம்)

இனி அடுத்து ஆசிரியர் காணும் இன்செயல் ‘ஏருடையான் வேளாண்மை’ - பயிர்த் தொழிலாகும்.

உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோராம். உண்டிக்குரிய தானியாதிகளை உழவர் தருகின்றார்கள். அவர்கள் எருதினைக் கலப்பையிற் பூட்டி உழுது பயிரிடுகின்றனர். ஒவ்வொருவரும் தத்தமக்கென எருதை வைத்திருக்க வேண்டுமாம். அப்போதுதான் உழவுத் தொழிலை திறம்பட இயற்றலாமாம். ஏர் என்பது இங்கு உழு தொழிலைச் செய்யும் எருதினையே குறிக்கின்றது. நிகண்டிலே ஏர் என்பது அழகினையும் பெற்றத்தினையும் (எருதினையும்) குறிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்துள்ளது, தான் செல்லும் திசையில் நட்புக் கொள்ளுதலாகும்.

நாம் யாதானுமொரு காரணத்தின் பொருட்டு எமது ஊரை விட்டுப் பிறிதோர் ஊரக்குச் செல்கின்றோம். நிச்சயமாக அங்கு நாம் ஒரு நண்பரை ஆக்கிக் கொள்ளவேண்டும். இது வரலாறு கண்ட உண்மை.

கோவலன் கண்ணகியாருடன் மதுரை சென்றகாலை அங்கு மாதரி என்னும் மங்கை நண்பு பூண்டு தனது மகளை ஐயையைக் கண்ணகியாருக்கு அடித்தொழிலாட்டி ஆக்கித் தனிவடீு தந்து ஆதரித்த செய்தியும் நாம் அறிந்ததே.

இனி இனியவை நாற்பதில் வரும் பாடலை நோக்குவோம்.

ஏவது மாறா இளங்கிளைமை முன்இனிதே;

நாளும் நனைபோகான் கற்றல் மிகஇனிதே;

ஏருடையான் வேளாண்மை தானினிது ஆங்கினிதே

தேரின்கோள் நட்புத் திசைக்கு.

(ஏவது : ‘ஏவு’ முதனிலைத் தொழிற்பெயர்; ‘அது’ பகுதிப் பொருள் விகுதி; ஏர் - உழும்மாடு; தேரின் - ஆராயின்)

நாம் புதல்வோரைக் குறிப்பறிந்தொழுகவும் கல்வியைக் கற்கவும் செய்து பயிர் வளர்த்து நண்பு பேணி வாழ்வோமாக!

கபிலர் கூறும் இன்னாதன சில

பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒரு சிலவற்றுள் கூறப்பட்டுள்ள வாழ்வியற் கோட்பாடுகள் குறித்துக் கடந்த சில வாரங்களாகச் சிந்தித்து வருகின்றோம்.

அவ்வரிசையில் இன்று இன்னா நாற்பது என்னும் நூலுள் வரும் ஒரு செய்யுள் குறிப்பிடும் இன்னாதன - துன்பந்தருவன - வெளியிடும், துன்பத்திற்குரிய மூலங்களை காண்போம்.

இன்னா நாற்பது, கடவுள் வாழ்த்து முதலாக நாற்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டது. ஒவ்வொருபாடலும் ஒருசில இன்னாதனவற்றை அட்டவணைப்படுத்தி வெளியிடுகின்றது. 'இன்னா' எனுஞ் சொல் பெரும்பாலும் துன்பம் என்னும் பொருளிலேயே பயின்று வருகின்றது. மேலும் 'தகுதி அற்றது', 'நன்றற்றது' என்னும் பொருளும் சில இடங்களில் குறிப்பிடுதலைக் காண்கிறோம்.

அனைத்து மக்களும் இன்பத்தையே விழைகின்றனர். துன்பத்தின் காரணங்களை அறிந்து கொண்டால் ஏற்ற பெற்றி ஒழுகி, வருமுன் காத்து, இன்பம் பெறலாமன்றோ!

இன்னா

நாற்பது நூலின் ஆசிரியர், கற்றார் போற்றும் கபிலர் பெருமான். இவர் சங்கப் புலவர்களுள் முன்னணியில் வைத்து எண்ணப்படுபவர். எட்டுத்தொகையுள்ளும் பத்துப் பாட்டினுள்ளும் இவர் பாடிய பாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. கற்றுணர்ந்த சான்றோர்கள், 'இன்னா நாற்பது' நூலை இயற்றியவர் வரே என்றும் அறுதியிட்டுக் கூறுவர்.

கற்றோர் போற்றும் கபில தேவர், புறநானூற்றுள்ளே தம்மை 'யானே பரிசில் மன்னும் அந்தணன்' என்றும் 'அந்தணப் புலவன்' என்றும் கூறியிருக்கின்றார். ஒரு சமயம் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் வேந்தன், அவர் கையைப்பற்றி ஆரா அன்பின் நும்கை மெல்லியவாமால் என்று காரணம் கேட்டு நின்றான். கபிலர், 'ஆமாம், உண்டு வருந்ததுதல் அல்லது பிறர்தொழில் அறியேன்' என்று விடை பகர்ந்தனராம். பாடும் பணியே பணியாகக் கொண்டவர் அவர்.

சங்கப்புலவர் பலரும் இவரைப் பெரிதும் பாராட்டுவர். 'செறுத்த செய்யுள் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' என்று மேலும் 'புலனழுக்கற்ற அந்தணாளன்' என்று வருவன ஒருசில எடுத்துக்காட்டுக்களாம்.

வரையா வள்ளன்மையால் வையமுற்றும் புகழ்நிறுவிய பறம்புமலைக் கோமானாகிய வேள்பாரி இவரை ஆருயிர்த் தோழனாகக் கொண்டொழுகியமை நாமறிந்ததே!

எடுத்துக்காட்டாக இன்னா நாற்பதில் வரும் ஒரு செய்யுளை நோக்குவோம், பெரியாரோடு என்று தொடங்கும் பாடலை எடுத்துக் கொள்வோம். இப்பாடலில் துன்பந்தருவன நான்கு வருகின்றன. அவை பெரியார் தொடர்பைக் கைவிடுதல், அரியவை செய்தும் என்று ஆர்ப்பரித்தல், அன்பிலாரிடத்துத் தமது துன்பங்களைக் கூறுதல், பெரியாருக்குத் தீங்கு விளைவித்தல் என்பன.

பெரியார் என்றால் யார்? உருவத்தினால் பெரியாவரா? இல்லை! இல்லை!! கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்த நல்லோரையே பெரியார் என்கின்றோம். அவர் அறத்தின் திறமனைத்தும் அறிந்திருப்பர். பெரியோரை மூத்தோர் என்றும் கூறுகின்றோம். அவர் வெறும் வயதில் மட்டும் மூத்தவர் அல்லர்; அறிவானும், சீலத்தானும் காலத்தானும் மூத்தவர் என்று கொள்ளுதல் வேண்டும்; அவர் நீதியையும், உலகியலையும் நன்கு உணர்ந்திருப்பர்; பெரியார் தொடர்பு, அரியவற்றுள் எல்லாம் அரியதாகும். திருவள்ளுவதேவர்,

'பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே

நல்லார் தொடர்கை விடல்'

என்று கூறுவர்; துர்ச்சனர் பதினாயிரம் பேரைப் பகை கொள்ளுவதிலும் கொள்ளாதது, நல்லோர் தொடர்பைக் கை விடுதலாகும். ஒருவர் என்றும் தம்மினும் பெரியாரை, அறிவு முதலியவற்றால் மிக்காரைத் தமராகக் கொண்டு ஒழுகுதல் வேண்டும். பெரியார் தொடர்பைத் துண்டித்தல் துன்பம் தரும்.

சிலர் தம்மாற் செய்தற்கரியவற்றைச் செய்து முடிப்போம் என்று நாப்பறை கொட்டுவர்; சொல்லால் முழக்குவதில் ஒரு சுகமும் இல்லை. திருக்குறள் இதனை, 'சொல்லுதல் யார்க்கும் எளிது; சொல்லிய வண்ணம் செய்தல் அரிது' என்று கூறும்; புறநானூறு 'ஒல்லாததை ஒல்லும்' என்றும் கூறுவது, இரப்போரையும் ஏனையோரை வருத்தும் - வாட்டும் என்று குறிப்பிடும். (ஒல்லாதன் = இயலாதன்)

அடுத்து வருவது, தாம் உற்ற துன்பங்களை அன்பிலாரிம் கூறுவது. ஆசிரியர் 'பரியார்க்கு' என்று கூறுவர். பரிதல் - இரங்குதல்; அன்பினாலே இரக்கம் உண்டாகும் - அதுவே ஆண்மை நேயமும், தாயுமானாரடிகள் 'எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவுநின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே' என்றருளவர்.

இறுதியில் வருவது பெரியார்க்குத் தீங்கு செய்தல், திருவள்ளுவதேவர், இதனை சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். காட்டகத்துச் செல்லும் ஒருவன், ஆங்குத் தீயாற் சுடப்பட்டானாயினும், ஒருவகையில் உய்தல் கூடும். ஆனால் பெரியாரைப் பிழைத்தொழுகுவானாயின் எவ்வகையானும் உய்யானென்று கூறுவர். இனிப் பாடலைப் படிப்போம்.

பெரியோரோ டியாத்த தொடர் விடுதல் இன்னா,

அரியவை செய்தும் எனவுரைத்தல் இன்னா

பரியார்குத் தாமுற்ற கூற்றின்னா, இன்னா

பெரியார்க்குத் தீய செயல். (செ.26)

(குற்றியலிகரம் அலகு பெறவில்லை)

ஆவவே நாம் பெரியார் தொடர்பைப் பேணி, அது செய்வோம் இது செய்வோம் என்று பறைசாற்றாது, கருமத்தைச் செயலில் காட்டி, அன்புடையாருடன் அளவளாவி, பெரியார்க்குத் தீங்கு செய்யாது வளமான வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

அறஞ் செய்து அருளுடையீர் ஆமின்!

பழந்தமிழ் கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார் என்பது ஒன்று என அறிவோம். இது நாலடி நானூறு எனவும் வழங்கப்படும். இந்நூல் தனி ஒருவரால் ஆக்கப்பட்டது அன்று. பல பல புலவோர்களின் பாடல்களின் தொகுப்பு. அவர்கள், சமண நெறியினர்.

இந்நூலின் தோற்றங்குறித்து ஒரு கதை வழங்கி வருகின்றது. பெரும் பஞ்சம்- வற்கடம் - காரணமாகப் புலவோர் பலர் ஆதரிப்பாரைத் தேடிப் பாண்டி நாடு போந்தனராம். பாண்டி மன்னன் அவர்களை நன்கு ஆதரித்தனனாம். பஞ்சம் நீங்கிற்று. அவர்கள் தத்தம் ஊர் செல்ல விரும்பினராம். பாண்டியன் உடன்பாட்டானில்லை.

அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி ஒவ்வோர் வெண்பாக்களை எழுதித் தத்தம் இருக்கையின் கீழ் இட்டு யாரும் அறியாமல் சென்றனராம். அப்பாடல்களின் தொகுப்பே நாடி நானூறாம்.

நந்தமிழர் சிறந்த நூல்களுக்கு ‘ஆர்’ என்னும் விகுதி தந்து வழங்கும் பண்பினர். நாலடி நானூற்றின் சிறப்பு நோக்கி நாலடியார் என இதனை அழைப்பாராயினர்.

நம்மிடையே ‘நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி’ என்னும் தொடர் வழங்கி வருவதனை அறிவோம். நாலு - நாலடியார். இரண்டு - திருக்குறள். இவ்விரு நூல்களையும் பயின்றோர் தமிழ் நூல்கள் கற்றறிந்தோராகக் கருதப்படுபவர். பழைய தமிழ் உரையாசிரியர்கள் நாலடியாரின் வரும் செய்யுள்களை மேற்கோள்களாகக் காட்டி சென்றுள்ளனர். இனி நாம் குறித்த விடயத்துக்கு வருவோம்.

மக்கட் பிறவி அரிதினும் அரிதாகும். அவ்வரிய பிறவி கிடைத்தபொழுது அதனைப் பயன்படுத்தி உயற்பாலது எம் தலையாய கடனாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் ‘வாய்த்தது நந்நமக்கோர் பிறவி மதித்திடுமின்’ என்று திருவாய் மொழிந்துள்ளார். நாலடியாரும் யாக்கையை - உடம்பைப் பெற்றவர், அதனான் ஆயபயனை நுகர்ந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடும்.

ஒருவர் அடையவேண்டிய பொருள்கள் நான்கென நூலோர் கூறுவர். அவை அறம், பொருள், இன்பம், வடு என்பனவாம். இவற்றைத் தரும, அர்த்த, காம, மோட்சம் எனவும் கூறுவர். அறம் - தருமம் என்றும் கூறப்படுகின்றது.

முன்பெல்லாம் அறம் என்பது குறித்து அறிந்திருக்கின்றோம். இங்கு மீண்டும் அதனை எடுத்துக்கூற வேண்டி இருக்கின்றது. புலவோர் இதனை வழி மொழிதல் அனுவாதம் என்றெல்லாம் கூறுவர். அறம் என்பதற்கு இதுதான் பொருள் என்று கூறுதல் இயலாது. எனினும் 'மனித வாழ்வில் கொள்ளத்தக்கனவும், தள்ளத்தக்கனவும் இவை, இவை என வரையறை செய்வதே அறம்' எனலாம். வள்ளுவப் பெருந்தகையார் மனம், மொழி, உடல் எனும் மூவிடத்தும் தூயனாதலையே அறம் என்று கூறுவர்.

அறத்தை, ஒழுக்கம் பற்றிய அறம், பொருள் ஈடல் பற்றிய அறம், தொகுத்தல் பற்றிய அறம் மற்றும் இன்பம் பற்றிய அறம் என்றெல்லாம் பிரித்துக் காணலாம். எனவே நாம் யாண்டும் நல்லொழுக்கத்தினைப் பேணி அறத்தில் நின்றும் பிறழாது வாழவேண்டும் என்பது இனிதே புலனாகிறது.

கந்த புராணத்தில் காசிபர் உபதேசப் படலம் என்று ஒரு பகுதி வருகின்றது. அங்கு அறம் - தருமம் குறித்து பேசப்படுவதை இங்கு தெரிந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்.

தருமம் என்று ஒரு பொருள் - பண்டம் - உண்டு. அஃது இம்மை மறுமை இன்பங்களை இலகுவாக எய்த வைக்கும் அப்பண்டம் உணர்தற்கு அரியது. தருமத்தைப் போற்றினால், அன்பு சேரும்; அருள் என்னும் குழவி அணையும். அன்பும் அருளும் கிடைத்தால் தவம் என்னும் மாட்சிமை எய்தும். மேலும், அறிவு சேரும். அறிவு சேரவே சிவனெனும் செம்பொருளை உயிர் உடையும். மேலும், தொடர்ந்து பிறவிப்பிணி தீரும்; மூவகைத் தளைகளும் அகலும்; பேரின்பம் மேவும்; அறத்தின் திறம் எடுத்துரைக்க அரியதாகும்' என்பது அது.

'அறத்தினும் பேணாவிடின் யாது நிகழும்? உதித்தெழும் சூரியனை, அளவு கருவியாகிய - நாழியாகக் கொண்டு பிரதி தினமும், கூற்றுவன், உங்கள் வாழ்நாள்களை அளவிட்டு உண்டு தீர்ப்பான். ஐயகோ, மண்மிசை மக்களாய் பிறந்தும் பிறவாதீர் ஆவிர் என்று நாலடியார விடை தருகின்றது.

இனி, பாடலைப் படிப்போம்.

தோற்றஞ்சால் ஞாயிறு நாழியர் வைகலும்

கூற்றம் அளந்து நும் நாள்உண்ணும் - ஆற்ற

அறஞ்செய்து அருளுடையீர் ஆகுமின யாரும்

பிறந்தும் பிறவாதார் இல்.

எனவே நாம் ‘தக்க இன்ன, தகாத இன்ன’ என்றறிந்து, இன்சொல் விளைநிலனாய், ஈகையே வித்தாக, வன் சொற்களை கட்டி, வாய்மை எருவிட்டு, அறத்தின் வழி ஒழுகி ஆக்கையாற் பெற்ற பயனைத்துய்ப்போமாக.

அறத் திறம் வேண்டா அருங்குணத்தார்

காந்தியடிகள் உலகம் கண்ட மகாபுருடர். அவர் சத்தியம், அகிம்சை என்னும் இரண்டையும் தம் இரு கண்களாகக் கொண்டவர். மகாகவி பாரதியார் அவரை ‘வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம் பாழ்பட்டு நின்ற பாரத தேசத்தை வாழ்விக்க வந்தீர்’ என்று வாழுத்துவர்.

காந்தியடிகள் ஒருமுறை ஜப்பான் நாடு சென்று மீண்ட காலை, மூன்று சிறு பொம்மைகளைக் கொண்டு வந்தனராம். இம்மூன்றினுள் ஒன்று கண்ணை மூடியபடியும், மற்றது செவியைப் பொத்தியபடியும், ஏனையது வாயை மூடியபடியும் அமைந்திருந்தனவாம். அப்பொம்மைகள் துறவரத்தாருக்கன்றி இல்லறத்தார்களுக்கும் பொறியடக்கம் அவசியம் என்பதனை நினைவூட்டுவனவாக இருந்தன.

நம்மிடம் ஐம்பொறிகள் உண்டு. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவாகும். புலன்களும் ஐந்துண்டு. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன அவை. ‘ஐந்தவித்தா’ என்று கூறக் கேட்கின்றோம். அதாவது புலன்களில் செல்கின்ற ஐந்து அவாக்களையும் அடக்கியாளும் திறம் அது.

எவரும் பொறிகளாகிய ஐந்து யானைகளையும், தத்தம் புலன்கள் மேல் செல்லாமல், திண்மை என்னும் அங்குசத்தால் அடக்கிக் காக்க வேண்டும் என்பது மேலோர் ஆணை. இது வாழ்வியலுக்கு மிக மிக இன்றியமையாததாம்.

மேலும் பொறை என்பது யாது என்று காண்போம். ஒருவன் பிழை செய்த வழி தாம் அவனைத் தண்டிக்க முற்படாது பொறுத்துக் கொள்வதாகும். அதனை மறந்து விடுவதே மேலானதென்பது வள்ளுவர் உள்ளம். வலிமையில்லாத ஒருவர், ஆற்றலின்மையின் பொறுத்துக் கொள்ளக்கூடும் மிக்க பேராற்றல் உடையார் பொறுத்துக் கொள்ளுதல் மேலான பொறுமையாகும். விறல் மிக்க மன்னர் முதியாரைத் தண்டிக்க மாட்டார் என நூல்கள் கூறும். (சிந்தா 2261) அதுவும் பொறையின் பாலதே.

இனி நாலடியார் என்ன கூறுகின்றது என்று நோக்குவோம்.

இளமையும் எழிலும் மிகுந்த ஒருவன் ஒழுக்க நெறியில் வழுக்காது அடங்கி இருத்தலே சிறந்த அடக்கமாம். மேன்மேலும் வளர்ந்து கொண்டிருக்கும் அளவற்ற செல்வளம் இல்லான் கொடையே சிறந்த கொடையாம். அனைத்தையும் அழிக்கவல்ல பேராற்றல் படைத்தோன் சினங்கொள்ளாது, பிறர்செய்த பிழையைப் பொறுத்துக் கொள்கின்ற பொறுமையே பொறை என்று பேசுகின்றது.

வயதில் முதிர்ந்தோர் வலிமையின்மையின் அடங்கி இருக்கலாம். யாரும் விழையாத அவலட்சணமுடைய ஒருவன் அடங்கி இருக்கலாம். அளவற்ற செல்வம் உடையோன் மிகச் சிறியதொரு பகுதியை பிறர்க்கும் கொடுக்கலாம். உடல்வலி அற்றவன் பொறுமை காத்தல் கூறவேண்டுவதில்லை.

இளையான் - இளமை என்னும் பண்படியாகப் பிறந்த ஆண்பாற் பெயர். அவர் குழவிப் பருவத்தினர் அல்லர். கற்றுக் கோடாலும் அதனை உள்ளத்து அமைத்தலும் வல்லவர்.

இனி நாலடியார் செய்யுளை நோக்குவோம்.

இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்

இல்லான் கொடையே கொடைப்பயன் - எல்லாம்

ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்

பொறுக்கும் பொறையே பொறை.

நாம் அடக்கம் பேணி, வறியார்க்கு ஈந்து, சினங்கொளாது, பொறுமை காத்துச் செவ்வனம் வாழ்வோமாக!

அருங்குணம் ஆற்றன் மிகுமிடம்

உலகம் விசித்திரமானது; பழந்தமிழ் புலவர் ஒருவர் படைத்தற் கடவுளை பண்பிலாளன் என்று பழிக்கின்றார். ஏன் என்று வினவுகின்றீர்களா? ஆமாம். ஒரு வீட்டிற் சாக்காடுப் பறை ஒலிக்கின்றது. மற்றொரு வீட்டில் மணப்பளை ஒலிக்கின்றது. மணங்கண்ட மாது பூம் பொட்டும் புனைந்திருக்கின்றாள்.

பிணங்கண்ட மாது கட்டிய கூந்தலை விரித்துக் கண்ணரீ வடிக்கிறாள். இவ்வுலகு தீது என்று தொடர்கின்றது. (புறம் 199). திருவள்ளுவ தேவர் உலத்து இயற்கை வேறுபட்டவை என்கிறார். சிலர் செல்வராய் இருக்கின்றார்கள். வேறு சிலர் அறிவுரையராய் இருக்கின்றார்கள்.

இளைஞருள்ளே எழில் நலமும் பிற வசதிகளும் உள்ளோரைக் காண்கின்றோம். அதேவேளை எழில் நலமும் பிறவசதிகளும் இல்லாரையும் காண்கின்றோம். ஒருபுறம் பொருள்வளம் உடையாரையும், மறுபுறம் பொருள் வளம் அற்றாரையும் காண்கின்றோம்.

மேலும் எதனையும் பொறுக்கும் வலிமை உடையாரையும், அதே சமயம் வலிமை அற்றாரையும் காண்கின்றோம். நிற்க.

வாழ்வியலுக்கு அடக்கம், கொடை, பொறை முதலிய அருங்குணங்கள் வேண்டப்படுகின்றன. அவ்வாறாயின் எவர் கொண்ட அடக்கம், எவர் கொண்ட கொடை, எவர் கொண்ட பொறை சிறந்தது, உயர்ந்தது என்று சிந்திக்க வேண்டியுள்ளது. நாலடியார் என்னும் நூல் இச்சிற்றாராய்ச்சியை நடத்தி முடிவு கண்டுள்ளது. முதலில் அடக்கம், கொடை, பொறை என்பன குறித்து சிறிது அறிந்து கொள்வோம்.

அடக்கம், அரிய குணநலங்களுள் ஒன்ற. சுருங்கக் கூறுவதாயின், ஒருவர் தமது மனம், மொழி, உடல்களால் வரம்பு கடவாது அடங்கி நடத்தல் எனலாம். அடக்கம் பிறழாமல் நடக்கும் ஒருவன் தேவருடன் இணைவான். பிறழ்ந்தவன் - அடங்காதவன் - நிச்சயமாகக் கீழ்நிலை - நரகத்தை - அடைவான். நிலையில் திரியாது ஒழுகுபவன் மலையிலும் மிகவுயர்ந்து நிற்பான். ஒரு பிறவியில் கைக்கொண்ட அடக்கம் எழுபிறவியுள்ளும் நிலைக்கும் என்பது வள்ளுவர் பெருமான் உள்ளம். ஒவ்வொருவரும் அறம் பொருளாக அடக்கத்தைக் கைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும்.

இனி, கொடையை எடுத்துக்கொள்வோம். சாதாரணமாக எல்லோரும் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்று எண்ணுகின்றோம். அஃதெப்போதும் வாய்த்து விடுவதில்லை. தன்னிடம் வந்து யாசித்தவர்களுக்கு இல்லையென்னாது கொடுத்தார் வரிசையில் பாரி முதலிய வள்ளல்கள் தனியிடம வகித்து இருந்தனர். குமண வள்ளலார் தன்னிடம் வந்த பரிசிலன் யாதும் பெறாது திரும்பிச் செல்வதனை விரும்பவில்லை. யாவற்றையும் இழந்த நிலையிலும் தன்பால் உளதாகிய தலையைத் தந்த செய்தியை, 'வாள் தந்தன்னே வாங்கருங் காவலன்' என்று உரத்த குரலில் புறப்பாட்டுப் பாடுகின்றது . (புறம் 165)

பொறிவழிபட்டார், 'இந்திரிய வயம் மயங்கி இறப்பதற்கே காரணமாம், அந்தரத்தே - மேலுலகுக்கு - சென்று பின் அருநாகில் வீழ்வர்' என்று மணிவாசக பெருமான் குறிப்பிடுவர். ஐம்புலக்கதவை அடைக்கும் உபாயம் கூட இறையருளாள் எய்தற்பாலதாம். பண்டையோர் புலனடக்கத்தைப் பிரமசாரிய நிலை

முதற்கொண்டு, ஏனைய கிருகப்பிரத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் முதலிய நிலைகளிலும் அவற்றை நன்கு பேணினர். அதனால் ஆரா இன்பம் துய்த்தனர்.

இனி நாலடியாருக்கு வருவோம். ஒருவன் தகது இன்னது, தகாதது இன்னது என நல்லொழுக்க வகையை உணர்தல் வேண்டும். அயலாரது இரகசியங்களைக் கேட்கமிடத்து அவன் செவிடனாய் இருத்தல் வேண்டும். அயலான் மனைவியைக் காணும் வழி குருடனாய் இருத்தல் வேண்டும். ஒருவரைக் காணாவிடத்து தீயசொற்களைச் சொல்லுதலில் ஊமையாய் இருத்தல் வேண்டும். அஃதாவது செவிடனாய்ச் செவி அடக்கியும், குருடனாய்க் கட்புலனை அடக்கியும், ஊமையாய் வாயை அடக்கியும் வாழுதல்வேண்டும். அப்படி வாழும் ஒருவருக்கு வேறு அறங்கள் வேண்டா. அவையே போதும். மூன்று பொறிகளை விதந்து கூறினரேனும் நாம் ஐந்து பொறிகளையும் கொள்ளுதல் வேண்டும்.

ஆசைகளை முதற்கண் மட்டுப்படுத்தி அவற்றைப் படிப்படியாக அகற்றிவிட வேண்டும். மேலோர் 'ஆசை அறுமின் ஆசை அறுமின்' என்று இறைவன் மாட்டுக்கூட ஆசையை அகற்ற வேண்டுமென்று மொழிவர்.

தாயுமானார் அடிகள் ஆசைக்கு அளவில்லை என்றும், குபேரனை ஒத்த பெருஞ் செல்வர் கூட. மேலும் செல்வத்தை ஈட்ட வேண்டும் என ஆசைப்படுபவர் என்றும், அதனாலே இரசவாத வித்தை இயற்றிப் பணத்தைப் பெருக்க எண்ணுவர் என்றும் குறிப்பிடுவர்.

பொறி புலன்களை அடக்கி ஒழுகுவார்க்கு வேறு அறம் வேண்டுவதில்லை. திருவள்ளுவ தேவர் 'மனத்தின் கண் மாசிலனாதல் அறம்' என்றும், அறவோர் - அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் நீக்கி ஒழுகுவர் என்றும் கூறுவனவெல்லாம் நினைவில் இருத்திக் கொளற் பாலனவாம்.

இனி நாலடியாரில் வரும் பாடலை நோக்குவோம்:-

பிறர்மறை யின்கட் செவிடாய்; திறனறிந்(து)

ஏதிலார் இற்கண் குருடனாய்த் தீய

புறங்கூறின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்

அறங்கூற வேண்டா அவற்கு.

(மறை - வெளிப்பட்டால் குற்றம் வருமென்று அஞ்சி பிறர்க்கு மறைத்து ஒருவன் சொல்லும் சொல்; மூங்கை - ஊமை)

எனவே நாம், புன் செயலில் ஓடும் புலன் வழிச் செல்லாது, அதனை மட்டுப்படுத்தி, ஆசை எனும் விலங்கை அகற்றி, வாழ்ந்து அறநெறி பேணுவோமாக!

துன்பம் தொடராமைக்கு வழி

வாழ்க்கை ஒரு மணிமண்டபம். அதன் அடித்தளம் செவ்விதாக அமைதல் வேண்டும். அப்போது தான் அது நெடிது நின்று நிலைக்கும்; இன்பம் பயக்கும். அடித்தளம் செவ்விதாக அமையாவிடில் மண்டபம் ஆட்டங்கண்டுவிடும்.

மெய்ப்புலவோர்கள், வாழ்க்கையின் அடித்தளம் குறித்துப் பெரிதும் ஆராய்ந்துள்ளனர். வள்ளுவர் பெருமான் தமது முப்பால் நூலில் அறத்துப்பாலில், இல்லறம் - துறவறம் என்னும் இருபயிற்சிக் கூடங்களை அமைத்துள்ளார். அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைகூறல் முதலிய இனியபண்புகள் பலவற்றை இல்லறத்திலும் அருளுடைமை, புலால் மறுத்தல், தவம், இன்னா செய்யாமை, கொல்லாமை, வாய்மை முதலிய உயரிய பண்புகள் பலவற்றைத் துறவறத்திலும் பயின்று பயிற்சிபெற வழிசெய்துள்ளார். நல்லோர் போற்றும் நாலடியாரிலும் இதே கொள்கை பின்பற்றப்பட்டுள்ளது.

சிவஞானசித்தியாரெனும் பொனூலும் -

ஒழுக்கம்அன் பருள்ஆ சாரம் உபசாரம் உறவு சீலம்

வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை

அழுக்கிலாத் துறவடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி

இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்.

என்று கூறும்,

அதாவது, ஒழுக்க முதலிய பதினாறும் அவைபோல் வனவாகிய நன்மைகள் ஒருவனுக்கு உளவாயின், இரங்குவானது பணியாகிய அம்முயற்சி அறமாய் முடியும்.

இங்கு ஒழுக்கம் எனப்பட்டது உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் - அது ஒப்புரவு; துறவு - பிறர்மனை விழைதல் முதலியவற்றைத் துறத்தல். அறிவு தக்கனவும் தகாதனவும் இவை எனப் பகுத்தறிதல், வந்தித்தல் - வணங்குதல், அருச்சித்தல் என்பன மூத்தாரிடத்துச் செய்யப்படுபவனவாகும்.

என்றும் துன்பம் அற்று இன்புடன் வாழ நாலடியார் இலகுவான வழி கூறுகின்றது. முதற்கண் அறிவது அறிய வேண்டுமாம். அடுத்து அடங்க வேண்டுமாம். பின்

அஞ்சுவது அஞ்ச வேண்டுமாம். உலகு உவப்பது செய்ய வேண்டுமாம்; பெறும் பயன்களால் இன்புற்று வாழ வேண்டுமாம்.

அறிவது அறிதல் என்று குறிப்பிட்டது அறிவுடைமையாகும். அறிவு, கல்வி, கேள்விகளால் வரப்பெறும். உண்மை உணர்வினாலும் எய்தப்படும். நீரையும், பாலையும் கலந்து வைத்தவிடத்து அன்னம், பாலை மட்டும் பகுத்துண்ணும் என்பர். நாமும் கற்றற்குரிய நல்ல நூல்களையே கற்றல் வேண்டும். அறிவு சமய சந்தர்ப்பங்களில் ஒருவனைக் காக்கும். அறிவுடையார் எல்லாம் உடையார் என்பது மேலோர் துணிபு, உணர உணரும் அறிவுடையார் போற்றப்படுபவர்.

அடங்குதல் என்பது பொறுமைக்குணமாகும். முன்பும் அறிந்திருக்கின்றோம். அது மெய், மொழி, மனங்கள், தீ நெறிக்கண் செல்லும்போது அடங்கு வாழ்தலுமாம். அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை நரகத்தே கொண்டு சேர்க்கும். பிரம்மச்சரிய நிலை அடக்கத்தை நன்கு பயிற்றுவிக்கின்றது. 'எல்லோருக்கும் நன்றாம் பணிதல்' என்பது நாம் அறிந்ததே.

இனி அஞ்சுவது அஞ்சல் குறித்து அறிவோம். அது பழி பாவங்களுக்கு அஞ்சுதலாகும். ஒருவர் தமது உடலால் மட்டுமன்றி நினைவு, செயல் முதலியவற்றாலும் தீவினை செய்யலாம். அறிஞர், நினைத்தலும் செய்தலோடு ஒக்கும் என்பர். பிறர் நம்மைக் கோபித்தபோதும் அவர்களுக்கு நன்மையையே செய்தல் வேண்டும். 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை. 'அஞ்சுவது அஞ்சல் அறிவர் தொழில்' என்னும் திருக்குறளும் இங்கு நினைத்தற்பாலதாம்.

இனிமேல் வருவது, உறுவது உலகு உவப்பச் செய்தலாகும். தாஞ்செய்யுங் கருமங்களை எல்லாம் உலகத்தார் மகிழும்படி செய்தலாகும். இதனை ஒப்பரவுள் அடக்கலாம். பண்டை உரையாசிரியர்கள் ஒப்பரவு என்பதற்கு உலக நடையினை அறிந்து ஒழுகுதலாகும் என விளக்கம் தருவர்.

'புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே ஒப்புரவின் நல்ல பிற' என்னும் திருக்குறளை நினைவு கூருவோம். ஒப்புரவு உடையவனே உயிருள்ளான்; அஃதற்றவன், செத்தாருள் வைக்கப்படுவான்.

பெறுவதனால் இன்புற்று வாழ்தலை எடுத்துக் கொள்வோம். போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து என்பதை நாம் அறிவோம். எந்த விடயத்திலும் எப்போதும் நாம் திருப்தி அடைதல் வேண்டும். காந்தி அடிகளார் சிக்கனமே சிறந்த நாகரிகம் என்பர். உழைப்பில் ல்ல, ஒறுப்பனவில் தான் பொருள் வளர்ச்சி தங்கி உள்ளது. ஆசையை மட்டுப்படுத்த வேண்டும். பல பொருள்களையும் விரும்புதல் சிறுமை என்று கூறப்படும். காலை அகலவையாதே என்பது குறிப்பு மொழி. வாழ்க்கையை மட்டுப்படுத்தி வாழ வேண்டும். பழம்புலவோர்கள் அடிக்கடி பெற்றது கொண்டு அமைந்து சுற்றத்தையும் பேண வேண்டும் எனவும் இடித்துரைப்பர். இனி, நாலடியார் செய்யுளை நோக்குவோம்.

அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி

உறுவ துலகுவப்பச் செய்து - பெறுவதனால்

இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்

துன்புற்று வாழ்தல் அரிது.

வாழ்வில் இன்பம் நிலைபெற வேண்டும். எனவே ஒவ்வொருவரும் கற்றுக்கேட்டு மெய்யுணர்வு வாய்க்கப் பெறுதல் வேண்டும். ஆமை போல் ஐந்தடக்கிப் பொறுமை காத்தல வேண்டும். எவ்வெவற்றுக்கு நாம் அஞ்ச வேண்டுமோ அவ்வவற்றுக்கு அஞ்சி ஒதுங்குதல் வேண்டும். எவர்க்கும் இனியனவே இயற்ற வேண்டும். பெற்றது கொண்டு பேராசை தடிந்து வாழ வேண்டும். இப்படி வாழுவோமேயானால், துன்புற்று வாழும் நிலை ஒருபோதும் வாராது. வாராது அரிது - இல்லை என்னும் பொருளில் வந்தது.

ஆவின் நிறம்போல் அறநெறிபலவாம்

பசுக்கள் பலபல நிறத்தன. அவற்றில் பால் வெண்மை நிறத்தது. அறநெறிகளம் பலப்பல உள; அவற்றின் முடிவும் ஒன்றேயாம். நமது நாட்டிலே இந்து தருமம், பௌத்த தருமம், இஸ்லாம் தருமம், கிறீத்துவ தருமம் எனப் பல்வேற நெறிகள் இருத்தலை அறிவோம். ஒவ்வொரு நெறியினரும் தத்தமக்கு ஒவ்வோர் முதல்வனைக் கொண்டுள்ளார்கள். அம்முதல்வன் இறைவன் என்று அழைக்கப்படுகின்றான்.

அண்மைக்கால கவிஞர் ஒருவர், ‘அல்லா என்பார் சில பேர்கள், அரனரி என்பார் சிலபேர்கள், வல்லான் அவன் பர மண்டலத்தில் வாழும் தந்தை என்பார்கள்; சொல்லால் விளங்கா நிருவாணம் என்றும் சிலபேர் சொல்வார்கள். எல்லோரும் இப்படிப் பலபேசும் ஒரு பொருள் இருக்கவே செய்கின்றது. நிந்தை பிறரைப் பேசாமல் நினைவிலும் கெடுதல் செய்யாமல் அதை வந்திப்போம்; சுகமாய் வாழ்ந்திடுவோம் என்று கூறி அமைந்தார். பழந்தமிழ்த் தொகைநூல்களுள் ஒன்றாய புறநானூற்றில் வரும் ‘ஏற்று வலனுயரிய.....’ என்று தொடங்கும் பாடல் மூலம் பண்டைத் தமிழ் மாந்தர் சிவனையும், பலராமனையும், திருமாலையும், முருகனையும் வழிபட்ட செய்தியினை அறிகின்றோம். நந்தமிழர் கேடும் ஆக்கமும் பிறர் தரவாரா, நோதலும் அது தீர்த்தலும் தாமேவருவன, சாதல் புதுவதன்று. வாழ்தல் இனிதென மகிழ்ந்திலர். பேராற்றில் நீரின்வழியே செல்லும் மிதவை போல் அரிய ஊழின் வாழ்வு அமையும் என்று தெளிந்திருந்தனர்.

தமக்கென்றே தனி அறத்தை வகுத்து, மனத்தின்கண் மாசின்றி, அழுக்காறு அவா வெகுறி இன்னாச் சொல் நீக்கி வாழ்ந்தனர். வற்றா இன்பம் கண்டர்.

பிற்காலத்தே, சமயவாதிகள் தத்தம்மதங்களே தலையாயவை என்று அரற்றி மலையும் நிலை உண்டாகியது. தாயுமானார் அடிகள் கூறுவது போல, "சமய கோடிகளெலாம் தந்தெய்வம் மேலானது; எந்தெய்வம் மேலானது" என்று எதிர்வழக்கிடும் நிலை உருவானது. முரண்பாடுகள் விரிந்தன.

கிறீத்துவ வருடம் 1893இல் அமெரிக்க நாட்டுச் சிக்காக்கோவில் சர்வதர்ம மகாசபை கூடியது. அங்கு சுவாமி விவேகானந்தர் தமது பேருரையில், உபநிடதங்களில் பயிலும் ஓர் அரிய சுலோகத்தின் வாயிலாகச் சமயப் பொதுமையை விளக்கினார்.

அது வருமாறு:-

"பல்வேறு இடங்களில் நின்றும் புறப்படும் நதிகள் வெவ்வேறு வழியோடிவரினும், அவை ஒரே கடலிற்போய் சங்கமமாவது போல, விருப்பு வேறுபாட்டால், மக்கள் பற்றும் மார்க்கங்கள் வேறுபடினும், அவர்கள் முடிவில் உனது பொற்பாத கமலங்களையே அடைகின்றனர்" என்பதாகும்.

கீதாசாரியனும், பார்த்தனை விளித்து எவர் எவர் என்னை எந்தெந்த விதமாக ஆராதித்தாலும், அவர்கள் மனவிருப்பின்படி நான் அவர்களை அடைகின்றேன் என்று கூறியருளுதலும் காண்க.

இனி, சைவமாம் சமயம் கூறுவதையும் காண்போம்.

சிவஞான சித்தியார்:-

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வம் ஆகி ஆங்கே

மாதொரு பாகனார் தாம் வருவர்"

என்றும் -

திருக்கைலாய ஞான உலா:-

"ஓவாதே எவ்வுருவில் யாரொருவர் உள்குவார்

உள்ளத்துள்"

அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பார் என்றும் -

கந்தபுராணத்தில்:-

"யாதொரு பொருளை யாவர் இறைஞ்சிடினும் அதுபோய் முக்கண்

மூர்த்தியை அடையும் அம்மா”

என்றும் குறிப்பிடுதலைக் காண்கின்றோம். அனைத்தும் ஓரிடைத்தையே அடைகின்றன. நிற்க.

இதே கருத்தினைக் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடருடம் இராமாயணம் பாலகாண்டம் ஆற்றுப்படலத்தில் ‘கல்லிடை’ என்று தொடங்கும் பாடலில் சரயு நதி வெள்ளம் பல நிலையை அடைதலைக் குறிப்பிடும் போது -

“பரம்பொருள் ஒன்றேயாய் இருப்பது போல, சரயு நீர் வெள்ளம் ஒன்றேயாயிருந்தும், பல சமயத்தவர் ஆராய்ச்சிக்குட்பட்டு அப்பரம்பொருள், பல படியாகச் சொல்லப்படுவது போல் ஏரி, தடாகம், முதலிய பல இடங்களில் பொருந்திப் பல பெயருடனே வழங்கலாயிற்று” என்று கூறுகின்றார்.

இனி, பதிணென் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாய நாலடியாருக்கு வருவோம். அங்கு -

“பசுக்கள் வெவ்வேறு நிறத்தை உடையனவாய் இருந்தாலும், அப்பசுக்கள் தந்த பால், வெண்ணிறத்தனவே அன்றி வெவ்வேறான நிறத்தை உடையவை ஆகமாட்டா. அந்தப் பால் போல தருமமானது ஒரே தன்மையுடையதாம். அத் தருமத்தின் வழிகள் இவ்வுலகத்தில் பல ரூபங்களைக் கொண்டிருத்தல் பசுக்கள் போலாகும்” என்று கூறப்படுகின்றது.

இனி பாடலைப் படித்துப் பாருங்கள்.

ஆவே(று) உருவின ஆயினும் ஆபயந்த

பால்வே(று) உருவின அல்லவாம் - பால்போல்

ஒரு தன்மைத் தாகும் அறநெறி ஆபோல்

உருவ பல கொளல் ஈங்கு.

என்பது அது.

இறுதியாக மணிவாசகத்தில் இருந்து ஒரு வாசகம்:-

திருச்சிற்றம்பலம்

அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙண்

பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே

பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற

பொய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்.

## சான்றோர் நாடும் செல்வர்

வாழ்வில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் மேலான இடத்தினை வகிக்கின்றன. பொருளும் இன்பமும் அறத்தின் அடிப்படையில் வளர வேண்டும். பொருளை எடுத்துக் கொள்வோம்:- தமிழ் மாந்தர் கல்வி, செல்வம் என்னும் இரண்டினையும் பொருள் என்றே கொண்டனர்.

கல்வி என்பது கற்றற்குரிய நூல்களைக் கற்றலும் கற்றபடி ஒழுகுதலுமாகும். வள்ளுவப்பெருந்தகையார் கேள்வியினையும் கேடற்ற விழுச்செல்வம் என்பர். கல்விச் செல்வம் தாயத்தார், கள்வர், வலியோர், ஆட்சியாளர் என்றின்ன பேர்களினால் அபகரிக்கப்பட மாட்டாது. பொருள் செல்வம், பொன்னும் பொருளும் மற்றும் வளங்களுமாம். பொருள் செல்வம் இன்றி தனி மனிதனோ அரசுகளோ மேம்படுதற்கு வழியில்லை. மேம்படவும் முடியாது. பொருள் செல்வத்தை சம்பாதிக்கும் போதும் அதைக்காக்கும் போதும் பாதுகாப்புக் குறைந்த போதும் துன்பம் உண்டாகும். ஏன்? அஃது அழிவடைந்தாலும் கூட துன்பம் எய்தும்.

பொருள் செல்வம் இன்றி வாழ்தல் இயலாது; முற்றும் துறந்த முனிவர்களும் கூடப் பொருள் செல்வத்தை நாடுகின்றரே! ‘முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்’ என்பது பெரியோர் வாய்மொழியாகும். ‘செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும் நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்’ என்று மணிவாசகப் பெருந்தகையர் செல்வத்தைத் துன்பம் என்கிறார்.

செல்வத்துப் பயன் ஈகையாகும்; ஈதல் இசைபட வாழ்தல் இரண்டுமே மக்கட் பிறப்பெடுத்தவர் செயல்றபால செயலாம். ‘செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்’ என்பதும் நாம் அறிந்ததே. நல்ல உடைகளை உடுக்காமல், நல்ல உணவுகளை உண்ணாமலுமே தமது உடலைவருத்தி நல்ல தருமங்களைச் செய்யாமலும் ஏழைகளுக்குக் கொடாமலும் மேலும் மேலும் பொருள் ஈட்டுவோர் நிச்சயமாய்த் தாம் தேடிய செல்வத்தை இழந்து விடுவர். தேனீக்கள் தேனை

வைத்து இழந்து விடுவதைக் காண்கிறோம் அல்லவா? வேறு யாரும் தானே அனுபவிக்கின்றனர்.

இனி உண்ணும் பொருளும் உணவு வெரு மெய்ச்சுகமும் தன தானியங்களை பிறருக்குக் கொடுத்து மகிழ்ச்சி, அடையும் திண்ணிய நிலையையும் ஒருவன் பெற்றுக் கொள்ள பெருமாதவம் வேண்டுமாம்.

சான்றோராயினார், எல்லாச் செல்வரிடத்தும் பொருள் வேண்டிச் செல்வதில்லை. 'பெட்பின்றி யாதலை யாம் வேண்டேம்' என்று புகழும் பெரியோர்களும் உளர். தக்காரிடமே செல்வர் தகவிலரிடம் செல்லார்.

புறப்பாட்டில் இருந்து ஒரு செய்தி; கொங்கண நாடு என்று ஒரு பிரதேசம் உண்டு. அங்கு கொங்கணங்கிழான் என்னும் பெரியோன் ஒருவன் இருந்தான். அவன் பெருஞ்செல்வம் படைத்தவன் அல்லன். பிறர்க்கும் கொடுத்து அவர் மகிழும்போது தானும் மகிழும் திண்மையாளன். ஒரு சமயம் மோசிகீரனார் என்னும் பெரும்புலவர் அவனிடம் பரிசில் வேண்டி வந்தார். கொங்கணங்கிழான் எண்ணுகின்றான் 'இவரோ பெரும் பேராளர். இவருடைய தகுதிக்குத் தக இவருக்கு கொடுப்பதற்கு பெருவளம் இலனே' என்று கவன்றான். அதனை உணர்ந்த மோசி கீரனார் கூறுகிறார்:-

"மகிப, திரை அலைக்கும் கடலினது கரைக்கண் சமீபத்துச் செல்லின் அங்கு உள்ளார் யாரிடமாவது உண்ணும் நீர் எங்கு கிடைக்கும் என்று பெரியோர் வினவுவர். அதுபோல் அரசர் பக்கத்திருப்பவும் குற்றந்தீர்த பெரியோரையே தேடி வந்தேன். யான் பெற்றது சிறிதளவாயினும் யான் இகழ மாட்டேன். நின்னையே நினைந்து வந்தேன்" என்று கூறினார்.

இனி நாங்கள் நாலடியாருக்கு வருவோம். அங்கு நன்றியில் செல்வம் என்னும் ஒரு பகுதி வருகின்றது. நன்றியில் செல்வம் என்றால் என்ன? சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுத்தல் இல்லாததும் கேடு தருவதுமான செல்வம், அதனது இயல்பு அங்கு கூறப்படுகிறது.

கடலில் நிறைந்த நீர் உதவாது விடுகின்றது. காரணம் உவர்ப்பாயிருத்தலாகும். அதுபோலக் கீழ் மக்கள் செல்வம் பெரிதாயினும் உதவாமைக்கு காரணம் உலோபத்தனமாகும். உலோபிகளிடம் பெரியோர் செல்லார்.

இனி பாடலை நோக்குபோம்.

மல்கு திரைய கடற்கோட்(டு) இருப்பினும்

வல்லூற்(று) உவர்இல் கிணற்றின்கண் சென்றுண்பார்

செல்வம் பெரிதுடையர் ஆயினும் சேட்சென்று

நல்குவார் கட்டே நசை.

ஆம்! மிகுந்த அலைகளையுடைய சமுத்திரத்தின் கரையில் தாம் இருந்தாலும் மனிதர்கள் வலிமையான நீர்ச்சுரப்புடைய உப்புத் தன்மையில்லாத கிணற்றினித்திலே சென்று நீரைக்குடிப்பர். அதுபோல அயலிலுள்ள கீழோர் செல்வம் பெரிது உடையராயினும் பெரியோர் அவரை அணுகாமல் தொலைதூரம் சென்று நன்னீரை உண்ணவே விளைவர்.

நாமும் அயலில் இருக்கின்றாரே என்று துச்சணை அணுகி உதவிபெறாமல், உதவி சிறிதளவாயினும் தொலைவில் உள்ள சர்ச்சரிடத்தே உதவி பெறுதல் சிறப்புடைத்தாம்.

ஒருவர் பொறை இருவர் நட்பு

இத்தொடரில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாய பழமொழி நானூறு என்னும் நூலில் இருந்து ஒரு சில பாடல்கள் குறித்து நோக்குவோம். இந்நூலை எமக்கு உதவியவர், முன்னுறை அரையர் என்னும் புலவர் பெருமான். ஆசிரியர் ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வோர் பழமொழிகளை வைத்து நயம்படக் கூறிச் செல்கின்றார். தமிழர்களிடையே வழங்கி வந்த பல பழமொழிகள் இந்நூலில் பயின்று வருகின்றன.

ஆய்வாளர், ஒரு நாட்டின் பண்பாட்டை நாம் அறிந்துகொள்ள அந்நாட்டில் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படுமென்பர். சுருங்கக் கூறின் தமிழ் மாந்தரின் மன இயல்புகளை நன்கு புரிந்துகொள்ள முடியும் எனலாம். நாவன்மை படைத்த சான்றோர், தமது பேச்சினையும் உரை நடையினையும் பழமொழிகளைக் கையாண்டு மேம்படுத்தியிருக்கின்றனர்.

ஒரு நகரத்தில் வசதியும் உறவினர் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அவரது வீட்டு முகவரி எம்மிடம் இருக்கலாம். வதீயின் பெயர்கள் ஆங்காங்கு தொங்கவிடப்பட்டிருக்கும். பெயர்ப் பலகையைப் படித்து குறிப்பிட்ட வீட்டினை அடைகின்றோம். அதனையொப்பப் பழமொழிகளும் எம்மை இன்ப மாளிகைக்கு அழைத்துச் செல்கின்றன.

இன்றைய கட்டுரையில் பழமொழி நானூற்றில் வரும் ‘ஒருவர் பொறை இருவர் நட்பு’ என்னும் பழமொழி குறித்துச் சிறிது நோக்குவோம். மக்களுள்ளே, நண்பர், பகைவர், நொதுமலர் என்னும் முத்திறத்தினரைக் காண்கின்றோம். நண்பர், பகைவர் நாமறிந்தவை; நொதுமலர் பற்றும் பகையும் இல்லவர், நட்பினை நண்பு, கேண்மை, தோழமை என்றெல்லாம் கூறுவர். மனைக்குப் பாழ் வாணுதல் இன்மை என்பர்; அதுபோல நண்பரை இன்மையும் வாழ்வுக்குப் பாழ் எனலாம்.

திருவள்ளுவதேவர் தெய்வத் திருக்குறளில் நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீநட்பு, கூடாநட்பு என நட்பினைப் பற்றி விரிவாக எடுத்துக்கூறியிருக்கின்றார்.

அவற்றுள் ஒருசில துளிகளை இங்கு திரட்டித் தருகின்றோம். அறிவுடையார் நண்பு பிறைமதி போல் வளர்ந்து செல்லும். அது பழகப்பழக இன்பம் தரும். முகமலர்ச்சி கொண்டு நண்பினை அளத்தல் சாலாது. நட்டார் இருவரதும் உள்ளத்துணர்ச்சி ஒன்றுபட்டதாய் இருத்தல் வேண்டும். உடுக்கை இழந்தவன் கைபோல நட்டார்பால் துன்பங்கண்ட போது விரைந்து சென்று நீக்குதல் வேண்டும். நட்புக்கொள்ளும் வழி, புணம், குலம், குடிப்பிறப்பு, சுற்றம் இவற்றை ஆராய்ந்தே செய்தல் வேண்டும். சொல்லொன்று செயலொன்றாய் இருப்பவர் நட்புக் கனவினம் இன்னாதாகும்.

இனி ஒத்த காதலர்களுக்கு ஓதப்படும், சாவிற் காதல், நோவிற் நோதல், ஒண் பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனி வேட்டல், பிரிவு நனி இரங்கல் முதலிய பண்புகளையும் மெய்யன்பர்களிடையே காணலாகும்.

கோப்பெருஞ் சோழன் முடியுடை மன்னன்; பிசிராந்தையார் என்பவர் பாவேத்ர், இருவோரும் உணர்ச்சி ஒத்திருந்தனர்; கோப்பெருஞ்சோழன் ஒரு சமயம் வடக்கிருந்தான். உயிர் நீத்தற்கு விரதமிருந்தான். அவன் சான்றோர் சிலருக்குத் தனது இனிய நண்பன் பிசிராந்ததையும் அங்கு வருவார். அவருக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அவ்வாறே பிசிராந்தையாரும் ஆங்கு வந்து வடக்கிருந்தார். அந்த வியத்தகு பான்மையை, பொத்தியார் என்னும் புலவர் ‘வருவன் என்ற கோனது பெருமையும்; அது பழுதின்றி வந்தவன் அறிவும் வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தென்றே’ என்று கூறுகிறார். சாவிற் சாதல் என்ற பண்பிற்கு இயையக் கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் விளங்கினர்.

இனி பழமொழிப் பாடலுக்கு வருவோம். ஆசிரியர் நட்புப் பூண்டொழுகும் இருவருள் ஒருவராவது பொறுமையை மேற்கொண்டு ஒழுகுதல் வேண்டும். அது அவர்கள் நட்பு நீடித்து நிற்பதற்கு வழி செய்யும் என்கிறார். இருவருமே பொறுமை இல்லாதவராய் இருப்பின் அவர்கள் நட்பு நீடித்து நிற்காது. ஆகவே இருவருள் ஒருவராவது பொறுமை பூண்டிருத்தல் வேண்டுமாம். திருவள்ளுவதேவரும், நட்டார் செய்த தீமையைப் பழிக்கு அஞ்சி நானும் பொறுமை உடையானது நட்பினை விலை கொடுத்தும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பர்.

சிந்தாமணி நடையார், ‘வாரம் பற்றுழித் தீயவும் நல்லவாம், தீர்க்காய்ந்துழி நல்லவும் தீயவாம் என்பர்’ வாரம் - அன்பு, பழமொழி நானூற்றுப் பாடலைப் படிப்போம்.

தம்தீமை இல்லாதார் நட்டவர் தீமையையும்

எம்தீமை என்றே உணர்பு தாம் - அந்தண்

பொருதிரை வந்துலாம் பொங்கு நீர்ச் சேர்ப்ப

ஒருவர் பொறையிருவர் நட்பு.

கடற்கரையில் உளதாம் ஊரனே! ஒருவர் பொறுக்கும் பொறுமையால் இருவரது நட்பு நிலைபெறும். நண்பு பூண்டார்க்குத் தீமை செய்யாத ஒருவர், நண்பர் செய்த தீமையையும் தம்மால் செய்யப்பட்ட தீமையே என்று பொறுத்துக் கொள வேண்டும் என்பது பாட்டின் பொருளாகும்.

பொறுமை காத்து நண்பு பேணுவோம்.

அறிமடமும் சான்றோர்க்கு அணி

பண்டைத்தமிழர், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முலாகப் பண்பட்ட வாழ்வை நடத்தி வருகின்றனர். அவர்தம் நாடு, குன்றா விளையுளும் குற்றமில் உழவோரையும் கொண்டிருந்தது. அங்கு அறந்தவறாச் சான்றோரும், ஈத்துவக்கும் செல்வந்தரும் நிறைந்திருந்தனர்.

சான்றோர் எனப்படுவோர், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்பன மிக்கோராய் இருந்தனர் சங்ககாலப்புலவோர், சங்கச் சான்றோர் என்று போற்றப்படுவது நாம் அறிந்த செய்தி ஆகும். அவர்தம் வரிசை மிகமிக நீண்டது.

கடைச்சங்கப்புலவோர்களை இறையனார் களவியலுரைகாரர் கடைச்சங்கம் இருந்து தமிழாராய்ந்தார், சிறு மேதாவியார், சேந்தம் பூதனார், அறிவுடையானார், பெருங்குன்றூர்கிழார், இளந்திருமாறன், நல்லந்துவனார் மருதனின் நாகனார் நக்கீரர் முதலாக நாற்பத்தொன்பதின்பர் என்றும் கவியரங்கேற்றினார் நானூற்று நாற்பத்தொன்பதின்பமர் என்றும் கூறுவர்.

ஈத்துவக்கும் திண்மை கொண்ட வேந்தரும் வேளிறாம் குறுநிலமன்னரும் பல்லோர் வாழ்ந்தனர். அவர்கள் இடத்தே, கொடைநல்கும் விடயத்தில் அறிமடம் மிக்கிருந்தது. அஃதாவது அறிந்தும் அறியார் போன்றிருத்தல். ஒரு சம்பவம் அதனை விளங்கிக்கொள்ளப் போதுமானதாய் இருக்கும்.

ஒரு சமயம ஔவையார் எனும் புலவர், விறலியர் பலாவர, நாஞ்சில் வள்ளுவனது நாட்டிற்குச் சென்றிருந்தார். விறலியர் தாமிருந்த இல்லத்தின் அயலில் முளைத்திருந்த கீரை இலைகளைப் பறித்துக் கறியமுது ஆக்கினார். கீரையின் மேல் இடுவதற்கு அரிசி வேண்டியிருந்தது. ஔவையார் நாஞ்சில் வள்ளுவனிடம் சென்று அரிசி வேண்டினார். அவன் பெரும் மலை போல்வதொரு யானையை அளித்தான். அது தெளிவு இல்லாத கொடையாகும். ஔவையார், நாஞ்சில் வள்ளுவனை, 'மன்ற மடவன்' நிச்சயமாக அறிந்தும் அறிவிலாதவன்,

'பெரியோர் தந்தகவும் வந்தோர்தகவும் சீர்தூக்கிச் செய்வது இயல்வு என்று அமைதி காண்கின்றார்.

புரவலர் வரிசையில் போற்றற்குரியோராக அறிமடம் பூண்டோராக நாம் கடைஎழுவள்ளல்களைக் காணலாம. பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் புறப்பாட்டில் (157) பறம் பிற்கோமான்பாரி, வல்வில்லோரி, மறப்போர் மலையன், கொடும்பூண் எழினி, பெருங்கல் நாடன்பேகன், மோசிபாடிய ஆய், கொள்ளரோட்டிய நள்ளி என்னும் எழுவரையும் நம்முன்னே நிறுத்துகின்றார்.

ஆய் ஆய் அண்டிரன் எனவும் படுவான் யாதொரு பயனும் கருதாது பிறர்க்குக் கொடுத்து மகிழ்தலைக் கடனாகவுடையான் வளங்குறைந்த காலத்து பாம்பு தந்த நீலப்பட்டாடையை நினுக்குத் தந்தவர்.

எழினி இல்லையென்றால் எவர்க்கும் தந்தவன் நள்ளி கண்டீரக்கோ எனவும் படுவன் தன்னுடையந்தார்க்கும் பொன்னணியும் நெடுந்தேரும் தந்து மகிழ்ந்தவன்.

அதியமான் நெடுமான் அஞ்சி உண்டோரை, நெடுங்காலம் வாழவைக்கும் அரிதிற்கிடைத்த நெல்லிக்கனியை ஔவையாருக்குத் தந்து புகழ் நிறுவியவன்.

பாரி, மாரி நிகர் வண்கையன், முல்லைக்கொடிக்குத்தேரைத் தந்தவன் புலவோர் இவனை சிறுவீழ்ல்லைலக்கு பெருந்தேர் நல்கிய அறிமடம் பூண்ட அண்ணல் என்பர்.

பேகன், கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய காவலனாவான்.

ஓரி, இவன் அடைந்தார்க்கெல்லாம் அள்ளி அள்ளி அளித்த அருள்திறலாளன். இவரெலாம் கொடை மடம் பட்ட கோமான்கள்.

இனி, பழமொழி நானூற்றில் வரும் பாடல் ஒன்றை நோக்குவோம்.

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்

தொல்லை அளித்தாரைக் கேட்டறிதும் - சொல்லின்

நெறிமடற் பூந்தாழை நீடு நீர்ச் சேர்ப்ப

அறிமடமும் சான்றோர்க்கு அணி.

செறிந்த மடல்களை உடைய, அழகிய தாழைகள் பொருந்திய, கடல்நாடனே, முல்லைக்குத் தேரையும் வாடையால் வாடிய மயிலுக்கு தனது போர்வையையும் முன்னாளிலே கொடுத்தவர்களை கேள்விவாயிலாக அறிந்தாம். ஆராய்ந்து பார்க்கும்போது சான்றோருக்கு அறிமடமும் அழகு தரும் ஆபரணம் போலும்.

அறிமடம் அறிந்தும் அறியாது போன்றிருத்தல் பாரி தேர்ச்சில்லில் படர்ந்த முல்லைக்கும், வாடைக்குளிரில் நலிந்த மயிலுக்கும் அவைகளின் துன்பந்தீர வேறு பொருள்களை கொடுப்ப அறிவாராயிருந்தும் உயர்வுடையதம் பொருள்களைக் கொடுத்துச் சென்ற பான்மை போற்றற்பாலதாம்.

நாம் எண்ணுதனதானியங்களை ஈந்து உவக்கும் திண்ணிலை எய்தப் பெற்று இன்பம் துய்த்து வாழ்வோமாக.

சீரினை நல்கும் சிறந்த பத்து

பதினெண்கணக்கு நூல்களின் தொடரில் இன்று, முதுமொழிக்காஞ்சி என்னும் நூலில் வரும் சிறந்தன பத்து என்பது குறித்துச் சிந்திப்போம். முதுமொழிக்காஞ்சி என்னும் நூலை இயற்றியவர் மதுரைக் கூடலூர் கிழார் என்னும் நற்றமிழ்ப் புலவர். இவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்று போற்றப்படுகின்றார்.

கூடலூர் கிழாரைப் பற்றிப் பல பல செய்திகள் தெரிய வருகின்றன. சான்றோருட் சிலர், இப்பெயரினர் இருவர் இருந்ததாகவும் கூறுவர்.

பழந்தமிழ் நூல்கள் அகம், புறம் என்னும் இரு திணைகள் பற்றிக் கூறுவதை அறிவோம். அக உள்ளத்தின் கண் நிகழும் ஒழுக்கம் என்று சுருக்கமாகக் கூறலாம். இது கைக்கிறை, ஐந்திணை, பெருந்திணை என ஏழு பிரிவினவாகக் கூறப்படும். புறம் என்பது புறத்தே நிகழும் ஒழுக்கம். அதனை ஆசிரியர் தொல்காப்பியர், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழு வகைத்தென்பர். பின்வந்தோர் கரந்தை, நொச்சி முதலியவற்றையும் சேர்த்துக் கொள்வர். வேறு பொதுவியலும் கூறுவர். காஞ்சித்திணை உலக நிலையாமையைப் பற்றிக் கூறும்.

முதுமொழிக் காஞ்சி என்பது, காஞ்சித் திணையுள் வரும் துறைகளுள் ஒன்று. அதனைப் புறப்பொருள் வெண்பாமாலை உடையார், மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி என்பர். முதுமொழிக் காஞ்சியாவது, அறிவுடையோர், குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம், பொருள், இன்பத்தை அறியச் சொல்லுதல் என்று கூறுவர். ஆசிரியர் முதுமொழிக்காஞ்சி நூலுள் முதற்கண் அறத்தில் பாற்படும் - சிறந்ததெனச் செப்பப்படும் - சிறந்த பத்தினை - விடயங்களை - கூறுகின்றார். இவ்விடயங்கள் நிலையிலா வாழ்வில், ஒருவரை அறம்பிறழாவழியில் வாழ்ந்து புகழுடம்பு நிறுவி வாழ வழிவகுக்கும் சால்பு மிகுந்த சான்றோனாக்கும். இனி, சிறந்த பத்தினுள் வரும் விழுமியங்களை நோக்குவோம். அவை:- ஓதுதலும் ஒழுக்கமும், காதலும் கண்ணஞ்சப்படுதலும், மேதையும் கற்றது மறவாமையும், வண்மை, வாய்மை, உடைமை, இளமையும்

பிணியின்மையும், நலனும் நாணும் உடைமை, குலனும் கல்வியும் உடைமை, கற்றலொடு கற்றாரை வழிபடுதல், பகை செறுதலினும் தன்னைப் பெருகச் செய்தல், செல்வ நலம் பெருகுதலும் சிறுகாதிருத்தலும் என்பனவாம்.

ஓதுதல் - கற்றல்; ஒழுக்கம் - நல்லொழுக்கம்; காதல் - அன்பு; கண் அஞ்சப்படுதல் - பிறர் மதிக்கும்படி நடத்தல்.

அதாவது, நினைவு, சொல், செயல் முதலியவற்றில் மேம்பட்டு விளங்குதல், மேதை என்பது நுட்ப புத்தி உடையராய் இருத்தல், நுட்ப புத்தியிலும் கற்றவற்றை மறவாதிருத்தல் மேலதாகும். இளமையிலும் நோய் நொடியற்றவனாய் இருத்தல் மேலானதாகும். அழகுடைமையினும் நாணுடைமை சிறந்ததாகும். நாணம் - வெட்கம், நாணில்லாதரது இயக்கம், கயிற்றால் இயக்கப்படும் பாவை இயங்குவது போலாகும் என்று திருவள்ளுவதேவர் கூறுவது நாணின் அவசியத்தை நன்கு புலப்படுத்தும். நற்குடிப் பிறப்பு சிறந்த பண்புடன் கூடியிருக்கும். கல்வி உடையார் கண்ணுடையரெனக் கொள்ளப்படுவர். வண்மை, வாய்மை வாழ்விற்கு இன்றியமையாதனவே. கற்றாரை வழிபடுதல் சிறந்த குணமாகும். பகையை அழிப்பதில் காலத்தைச் செலவிடாது தன்னை உயர்த்துதலில் முயல வேண்டும். செல்வம் அற்கா இயல்பிற்கு அன்றோ! நிலைக்காத தன்மையது. அது பிற்காலத்தே சுருங்காவணம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இவையனைத்தும் நிறைந்தோர் சான்றவர் அன்றோ! தமிழகத்தில் சான்றோர் பலர் வாழ்ந்தனர். அவர் தமக்கென முயலாம் பிறர்க்குரியாளர்.

இவ்விடத்தே நாம் பிசிராந்தையாரை நினைவு கூர்தல் மிகவும் பொருத்தமாக இருக்கலாம். அறிஞர் சிலர் பிசிராந்தையாரிடம் “சான்றீர்! யாங்கள் உங்களை நீண்ட காலமாகக் கேள்வியுறுகின்றோம். உங்கள் வாழ்நாளும் பலவாயினவே! உங்களுக்கு நரை உருவாக வேண்டுமே! அவை சிறிதும் காணப்படவில்லையே, என்னோ காரணம்?” என்று வினவினர்.

“அன்பரீர்! நரைதிரைகட்குக் காரணம் முதுமையன்று; மனக்கவலையே காரண்ம. எனக்கு மனக் கவலை கிடையாது. என் வீட்டிலோ, ஊரிலோ, நாட்டிலோ கவலை உண்டாதற்குரிய நிலைகள் இல்லை. என் மனைவி, மக்கள் அறிவு நிரம்பியவர்கள், என் ஏவலாளர் குறிப்புப் பிழையாது ஒழுகுவர். எங்கள் ஊரில் ‘ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்’ பலர் உளர். நாட்டு வேந்தனும் அறமல்லது செய்யான்” என்று கூறினார்.

“சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்

தாங்காது மன்னோ பொறை”

என்பது தமிழ் வேதம். சான்றாண்மை குன்றாவண்ணம் வாழ வேண்டும்.

நாமெல்லாம் சிறந்த பத்தினுள் சிலவற்றையேனும் குறிக்கோளாகக் கொண்டு அறத்தின் வழி ஒழுகி பொருளும் இன்பமும் துய்ப்போமாக.

திருவள்ளுவர் பெருமான் காட்டும் மரங்கள்

தெய்வத் திருக்குறள், தமிழ் இலக்கிய வானில் தன்னிகரற்ற இளவள ஞாயிறு என்ன இலங்கா நிற்கின்றது. தமிழ்ச் சான்றோர், இவ்வரும்பெரும் நூலை, பதினெண்கீழ்க் கணக்குள் ஒன்றாகக் கொண்டனர். திருக்குறள் அன்றல்ல, இன்றல்ல என்றுமே இனிய வாழ்விற்கு வழிகாட்டியாக இயங்கா நிற்கும்.

தமிழ் மொழி மாந்தருக்கன்றி, பிறமொழி மாந்தருக்கும் கூட இது வழிகாட்டியாகப் பிறங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இன்று ஆசிய மொழிகளில் மட்டும் அன்றி ஐரோப்பிய மொழிகள் சிலவற்றிலும் கூட மொழி பெயர்க்கப்பட்டுப் பீடுநடை போடா நிற்கின்றது.

திருக்குறளின் பெருமை குறித்து பண்டும் இன்றும் உள்ள தமிழ்ச் சான்றோர்கள் பலபடப்புகழ்ந்து கூறி உள்ளனர். இன்று மேற்கு நாட்டு அறிஞர் பெருமக்களும் அதனை வெகுவாகப் புகழ்தலைக் கேட்கின்றோம். தமின்னை குதூகலிக்கின்றாள்.

இலக்கியம், தத்துவம், மருத்துவம், இசை ஆகிய கலைகளில் பெறுதற்கரிய கலாநிதிப்பட்டம் பெற்றவர் சேர்மனிய நாட்டுப் பேரறிஞர் ஆர்பர்ட சுவிட்சர் என்பார் அவர் சேர்மன் மொழியில் திருக்குறளைப் படித்துவிட்டு 'இந்தியத் தத்துவ வளர்ச்சி' என்னும் தமது நூலில் பின்வருமாறு கூறியுள்ளதாக அறிகின்றோம்.

'திருக்குறள் எளிதாகக் கைக்கொள்ளக் கூடிய அறங்களைக் கூறுகின்றது. மானிடருடைய தனிவாழ்வுக்கு வேண்டிய தனி ஒழுக்கத்திற்கும், உலகத்தோடு ஒட்ட நடந்துக் கொள்ள வேண்டிய பொதுவாழ்வுக்குத் தேவையான பொது ஒழுக்கத்துக்கும் பலவகையான உடையினவாகவும் அறிவுக்குப் பொருத்தம் உள்ளனவாகவும் இருக்கின்றன' - என்பதாம். மேலும் இரசிய நாட்டு மொழி பெயப்பின் மூலம் பல இரசியப் பேராசிரியர்களும் புகழ்ந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இத்தொடரில், பெருநாவலர், பொய்ய மொழியார் மரங்களைக் காட்டி மக்களுக்கு உணர்த்தும் விழுமியங்கள் ஒரு சிலவற்றைக் காண்போம்.

தேவர் திருவள்ளுவர் எம்மை அழைக்கின்றார். அவருடன் செல்கின்றோம். நீர்வளம் அற்ற காட்டாந் தரையை அடைகின்றோம். அங்கு நீரற்று வாடி வதங்கி நிற்கின்ற வற்றல் மரத்தைக் காண்பிக்கின்றார். அன்பில்லா மனை வாழ்வும் இதனை ஒப்ப அமையும்; சிறப்பெய்தாது சிதைந்து போகும் என்கிறார். அவருடைய திருவாயில் இருந்து,

“அன்பத்தில்லார் உயிர்வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரம் தளித்தற்று"

என்னும் அருமைக் குறள் முகிழ்க்கின்றது.

சிற்றூர் ஒன்றுக்குச் செல்கின்றோம். அங்கு ஊர் நடுவண் ஒரு மரம் நிற்கின்றது. அம்மரத்தில் கனிகள் நிறையக் காணப்படுகின்றன. பலரும் அதனைப் பறித்து உண்டு உண்டு அனுபவிக்கின்றார்கள். ஆம், பறவை இனங்களும் தான் கொத்தி உண்டு சுவைக்கின்றன. உபகாரியாம் ஒருவனிடம் செல்வம் சேர்ந்திருந்தால் எப்படி இருக்கும்? என்னும் வினாவை எழுப்பி விடை கூறுகின்றார்.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தாற்றால் செல்வம்

நயனுடையான்கண் படின்"

என்று பாடுகிறார். எமது பயணத்தில் ஒரு சாரில் மூலிகைத் தோட்டம் ஒன்று தென்படுகின்றது. சில மரங்களின் இலைகள், சில மரங்களின் பட்டைகள், சில மரங்களின் வேர்கள் மட்டும் மருந்துக்குப் பயன்படுவதுண்டு. எனினும் மற்றும் ஒரு சில மரங்களின் அனைத்துப் பகுதிகளும் பயன்படுவதும் உண்டுதானே! அந்த மரத்தைக் காட்டி,

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்

பெருந்தகையான் கண்படின்"

சென்று செப்பி வைக்கிறார். தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றோம். எங்கிருந்தோ, கண்ணோட்டம் என்றால் என்ன எனும் வினா எழுகின்றது. தம்மோடு பழகியவரைக் கண்டபோது உண்டாகும் தாட்சணிம் - இரக்கம் என்று விடையும் வருகின்றது. கண்களைப் பெற்றிருந்தும் கண்ணோட்டம் இன்றி வாழ்பவர்களும் நம்மிடையே உண்டுதானே என, ஒருவர் பேசுவது காதில் விழுகின்றது. பெருநாவலர் உடனே, அவர்கள் நடமாடும் மனிதர்கள் தான். ஆயினும் மரத்துக்குத்தான் ஒப்புக்கூற வேண்டும் என்று மொழிகின்றார். திருக்குறன் பிறக்கின்றது.

"மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு

இயைந்து கண்ணோடா தவர்"

என்பது அது.

வழியின் அருகே தொழிலாளர் மிக்க முயற்சி உடன் வேலை செய்வதைக் காண்கின்றோம். ஒருசிலர் ஊக்கம் அற்றவர்களாகவும் இருந்தனர். எப்படியென்று பொய்யா மொழியாரை வினவுபவர் போன்று சிலர் நின்றார்கள். உடனே,

"உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்

மரம் மக்களாதலே வேறு”

என்னும் குறட்பா எமது காதில் ஒலிக்கின்றது.

தொடர்ந்து வள்ளுவர் பெருமான் எங்கள் முன்னே, மிக்கபுத்திக் கூர்மை உள்ள ஒருவரைக் காட்டுகிறார். அவரிடம் பிறர் இயல்பு அறிந்து நடக்கும் பெருங்குணம் இல்லாவிடின் அவரும் கூட மரம்தான் என்னும் பொருளில்,

“அரம் போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்

மக்கட் பண்பில்லாதவர்”

என்னும் குறட்பாவைக் கூறியருளினார்.

எல்லோரும் தரிப்பிடத்துக்கு வந்து விட்டோம். ஒட்டி உலர்ந்த தேகம்; வறியவன் ஒருவன், செல்வச் சீமானிடம் ஏதோ கேட்கின்றான். அவன் ‘இல்லை இல்லை’ என்று இயம்புகின்றான். ஏழை திரும்புகிறான், வள்ளுவர் பெருமான அதனைக் காண்கின்றார். இச்செல்வன் ‘மரந்தான்; மரத்திலும் நச்சுமரம் ஆவான்’ என்னும் பொருளமைய,

“நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள்

நச்சுமரம் பழுத்தற்று”

என்னும் குறள் அமுதை எமது செவியில் வார்க்கின்றார்.

நாமெல்லாம், அன்பை வளர்த்து, பிறர்க்குப் பயன்பட்டுக் கண்ணோட்டம் பேணி, ஊக்கத்தை ஓம்பி, பிறர் இயல்பறிந்து ஒழுகி, எல்லோராலும் விரும்பப்பட்டு, இன்பமாக வாழ்வோமாக!

## திருக்குறளில் நிலம்

அன்று பழந்தமிழ் அறிஞர் ஒருவர், ‘தெள்ளு குறட் செந்தேன் செவிகுளிரப் பெய்தமுகில் வள்ளுவர் பாதமலர் வாழியரோ’ என்று வாழ்த்தினார். திப்பியம் நிறைந்த திருக்குறளில் இருந்து கடந்தவாரம் வள்ளுவர் கண்ட மரங்கள் குறிததுச் சில செய்திகளைத் தெரிந்து கொண்டோம். இவ்வாரம் நிலத்தை வைத்துக் கொண்டு அவர் புகட்டும் அரிய நீதிகள் சிலவற்றைக் காண்போம்.

நிலத்தைப் பற்றி நினையும்போது, ஔவையாரின் புறப்பாட்டு ஒன்று நினைவுக்கு வருகின்றது. ஆம். ஔவையார் நிலத்தினை நாடு, காடு, பள்ளம், மேடு என்று

எல்லாம் வகைப்படுத்துகிறார். நிலத்தின் மாண்பு அங்குவதியும் ஆடவரைப் பொறுத்தது என்கிறார். 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லைவாழி' என்று வாழ்த்துகின்றார். பாடலைப் படித்துப் பாருங்கள்.

நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே.

என்பது அது. உழைப்பினாலே தான் நிலம் உயருகின்றது. சங்ககால மக்கள் ஆடவர்களுக்கு வினையை உயிரெனக் கருதினர். (வினை - தொழில்)

தமிழ்நூலார் நிலத்தின் மாண்பினை வகைப்படுத்திக் கூறியுள்ளனர். அது, பிறரால் அறியப்படாத உருவத்தின் பெருமை உடையது; கலங்காத வலிமை உடையது. தன்னை அடுத்த மனிதர் தோணடுதல் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமை உடையது; பருவத்திலே, உழவர் செய்யும் முயற்சி அளவிற்குத்தக்க பயனைத்தருவது என்று கூறுவர். நல்லாசிரியர்களையும், நிலத்துடன் ஒப்பிட்டுக் கூறுவர்.

மாமன்னரிடம் இருக்க வேண்டிய பொறை, சூழ்ச்சி, வலி, தெறல் அளி முதலியவற்றிற்கு நிலம், விசும்பு, வளி, தீ, நீர் முதலியவற்றை ஒப்பிட்டுக் கூறுவர்.

இனி வள்ளுவர் பெருமானிடம் செல்வோம். அவர் நிலத்தை 'நல்லாள்' என்று அருமை பெருமையுடன் குறிப்பிடுகின்றார். அவர் பல இடங்களில் நிலத்தினை எடுத்தாளுகின்றார். அவற்றுள் ஒரு சிலவற்றை இனிக் காண்போம்.

நிலமகளின் சிரிப்புடன் தொடங்குவோம். ஏன் சிரிக்கின்றாள்? 'யாம்வறியோம்' என்று சிலர் சோம்பேறி வாளா இருக்கின்றார்களாம். ஐயகோ, அவர் 'தம்மை நல்ல நிலைமையில் வைப்பவரும், நிலைகலங்கித் தம்மைக் கீழ்ப்பட நிலையில் சேர்க்கின்றவரும், தம்மைத் தாழ்நிலையில் இருந்து மேலே மேலே உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்பவரும் தாமே என்பதை அறியார் போலும்' என்று தான் சிரிக்கின்றாள் (நாலடியார்). உழுது பயிர்செய்து பிறர்க்கும் உதவி உண்டிருக்கலாம்தானே (குறள்).

நமது வாழ்நாளில் நாம் தனித்து வாழ்தல் இயலாதன்றோ! பலரோடும் மனங்கலந்து பழகும் தன்மை இன்றியமையாதது அன்றோ! அந்நிலையில் நாம் மேதகு குணம் உடையாரொடு கூடிக்கொள்ள வேண்டும். 'மூடர் உறவால் கேடுவிளையும்' அன்றோ. நிலத்தின் தன்மைக்கேற்ப நீரின் இயல்பு மாறுவது போன்று, சேர்ந்தார் இயல்பு, என்ன தான் கூறினும் தொற்றி விடுவது நிச்சயமாகும் (குறள்).

இனி நாம் ஒருவரைக் குணநலம் உடையாரோ அற்றவரோ என்று எப்படி அறிவது? புலித்தோல் போர்த்த பசுக்களும் இருப்பார்கள் அன்றோ! நிலத்தின் தன்மையை அதனிடைத் தோன்றும் முளைகாட்டும். அதுபோல ஒருவரின் பேச்சு அவரது குடிப்பிறப்பை - குணநலத்தை - எடுத்துரைக்குமாம் (குறள்).

பூமகள், தாவரம் சங்கமம் (நிலையாக இருப்பன), அசைவன - எனும் இரண்டுவகைப் பொருள்களையும் சுமந்துகொண்டு இருக்கின்றாள். அவை அவளுக்குச் சுமைகள் இல்லையாம். வள்ளுவர் பெருமானின் கண்டுபிடிப்பு அது. கொடுங்கோல் மன்னவனும் கற்றறிவில்லா மந்திரிகளும்தான் அவளுக்குப் பெரும் சுமையாம்; பெரும்பாரமாம் (குறள்).

மேலும், பூமி பொறுக்க முடியாத மற்றும் சுமையை எம்முன் வைக்கின்றாள். குணநிறைவுடைய சான்றோர், தமது தன்மை மாறுபடுவாரேயானால் இருநிலம், பெரிய பூமி - தாங்காது என்னும் பொருளில்,

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலத்தான்

தாங்காது மன்னோ பொறை (குறள்).

என்று அற்புதமான குறளமுதை எங்களுக்குத் தருகின்றார். பலரும் சான்றவர் என்பதன் விளக்கத்தை அறிய ஆசைப்படலாம். உங்கள் முன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியாரை நிறுத்துகின்றோம். அவர்தம் வாய்மொழியைக் கேளுங்கள்.

'இவ்வுலகம் உண்டேகாண். அது மாண்புக்கு மடிவதில்லை. ஆம். இந்திரர் அமிழ்தம் இயைந்த போதும் அதனை இனிதென்று கொண்டு தனித்து உண்பதிலர்; யாரோடும் வெறுப்பிலர்; பிறர் அஞ்சத்தகும் துன்பத்துக்கு, தாமும் அஞ்சி அது தீர்த்தற் பொருட்டு சோம்பி இருத்தலும் சிலர். புகழ் எனின் உயிரும் கொடுக்குவர். பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளார் தமக்கென முயலாது பிறர்பொருட்டு முயல்வார். இவரே சான்றோர். இவர் இருத்தலினாலேதான் உலகு நிலை பெற்றிருக்கின்றது' என்பது அது. (புறம்)

நாம் சிலரைக் காண்கின்றோம். அவர்கள் பிறரைவிட அதிகமாகப் பொருளைச் சம்பாதிப்போம் என்று பொருள் சம்பாதிப்பதை மாத்திரமே விரும்பி வாழ்கின்றார்கள். பொய்யா மொழியார் அவர்களும் நிலமகளாருக்குச் சுமையாகவே உளர் என்று கூறுகிறார். குறளைப் படித்துப்பாருங்கள்.

ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர்

தோற்றம் நிலக்குப் பொறை.

என்பது அது. (ஈட்டம் - சம்பாதித்தல்; இசை - புகழ்; பொறை - சுமை)

முயற்சி பேணி பிறர்க்குதவி நல்லாரோடு இணங்கி குணநலம் காத்துச் சான்றோண்மை பேணி வாழ்வாங்கு வாழ்வோமாக.

பேதையர்க்கு உதவுவோம்

ஆன்றவிந்து அடங்கிய கேள்வியினராய தமிழ்ப் புலவர் ஒருவர் ஒருகதை கூறினார். சிலர் ஒன்று கூடினராம். ஓராமையைக் கையகப்படுத்திக் கொண்டார்களாம். பெரிய 'அண்டா' ஒன்றை எடுத்துக் கொண்டார்களாம். அவ்வண்ணடாவை அடுப்பில் ஏற்றினராம். தீ மூட்டினராம். நீர் கதகதப்பாய் இருந்ததாம். அதனுள் ஆமையை இட்டனராம். ஆமைக்கும் இளஞ்சூடு இன்பம் தந்ததாம். ஆமை பாவம். தான் மாண்டு மடியப் போவதை எண்ணவில்லையாம். அற்பவேளை இன்பத்தில் சுகம் கண்டதாம். இதுதான் பேதையர் வாழ்க்கை என்று கோடிட்டுக் காட்டினார். பாட்டையே படித்துப் பாருங்கள்.

கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை

நிலையறியாது அந்நீர் படிந்தாடி அற்றே

கொலைவில் பெரும் கூற்றம் கோட்பார்ப்ப ஈண்டை

வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.

(பெரும் கூற்றம் - இயமன்; கோள் பார்ப்ப - உயிர் கொண்டு போகும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்ப; வலை - சம்சார பந்தம்; செம்மாப்பார் - மடவோர்.)

மக்களுள் இருபாலார் இருக்கின்றோம். ஒரு பாலார் அறிவுடையார், இன்னொரு பாலார் அறிவு இல்லாதவர். அவர்களை உலகம் பேதையர், மடவோர் என்றெல்லாம் பேசுகின்றது.

அறிவு அனைவருக்கும் இறுதி வாராமல் காப்பது. பகைவர்களாலும் கூட அழிக்க இயலாதது. முன்பு அறிவைப் பற்றி அறிந்திருக்கின்றோம். அறிவு என்பது என்ன? மனத்தினைப் போன போன போக்கில் விடாது, தீநெறியை விலக்கி, நன்னெறிக்கண் சேர்ப்பதாகும் என்று சுருக்கமாகக் கூறி விடலாம். அது கல்வி கேள்விகளால் எய்தப்படுவது. வருமுன் காக்கும் அறிவுடையாருக்கு, அஞ்சுவதும் இல்லை. அஞ்சவருவதும் இல்லை.

இனி பேதைமை குறித்தும், அதனையுடைய பேதையர்கள் குறித்தும் திருவள்ளுவதேவர் கூறுவனவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

பேதைமை என்மு தான் என்ன? அறியாமை, மூடத்தனம் என்றெல்லாம் கூறிவிடலாம். தேவர்,

“பேதைமை என்பது ஒன்று யாது எனின்

ஏதங்கொண்டு ஊதியம் போக விடல்”.

என்று கூறுகிறார். அதாவது பேதைமை எல்லாக்குற்றங்களிலும் மிக்க ஒன்றாகும். அதுதான் யாது என்று வினவினால், தனக்குக் கேடு தருவனவற்றைக் கைவிடுதலாகும் என்பர். பேதையர் வறுமை, பழி, பாவங்களைக் கைக்கொள்வர். செல்வம், புகழ் என்பவற்றைக் கை விடுவர். பேதைமை பற்றித் திருவள்ளுவர் பெருமான் கூறும் கருத்துக்களைச் சுருக்கித் தருகின்றோம்.

பேதைமாந்தர் தமக்குத் தகாத ஒழுக்கத்தின்கண் மனத்தைச் செலுத்துவர்; பழிபாவங்களுக்கு நாணார்; தள்ளத் தக்கனவற்றையும் கொள்ளத்தக்கனவற்றையும் ஆராய மாட்டார்; கண்ணோட்டம் இன்றிக் கடுகடுத்துப் பேசுவர்; குடிப்பிறப்பு முதலியவற்றைப் பாதுகாக்க மாட்டார்; படித்தும் பிறருக்கு உபதேசித்தும் தாம் அடங்க மாட்டார். அவர் யாதா மொன்று செய்யத் தலைப்பட்டால் அக்காரியமும் கெடும்; அவரும் கூடக் கெடுவர். பேதைக்குச் செல்வம் வந்தால் அயலார் விலாப்புடைக்க உண்பர். ஆனால் உறவினர் பசியால் வாடுவர். செல்வம் வந்துற்றகாலைத் தாறுமாறாகக் கெடுதலையே செய்வர். சீவகசிந்தாமணி ஆசிரியரும் பேதைமை குறித்துக் குறிப்பிடுகிறார். அவர், ‘அறியாமை என்கின்ற, வித்திடமாகத் தீவினை எனும் வேதனை மரங்கள் பிறந்து, தோற்றி, ஆசை என்கின்ற வேலை வழ் விட்டு, தான் முற்றி, பெறாததன் மேற்செல்லும், காதலும் பெற்று, அதன் மேற்செல்லும், களிப்பும் என்னும் கொம்பர்களை விட்டு, அவலத்தைப் பூத்து, கவலையைக் காய்த்து, மரணத்தைத் தருகின்ற கையாற்றினை இவ்வுடம்பு நுகரும்படி, பழுத்துத்தந்து, பின்னும் அங்ஙனம் காய்த்தற்கு அம்மரந்தான் நிற்கும்’ என்னும் பொருளமைய,

“பேதைமை என்னும் வித்திற்கு பிறந்து பின் வினைகள் என்னும்

வேதனை மரங்கள் நாறி வேட்கை வேர் வழ்த்து முற்றிக்

காதலும் களிப்பும் என்னும் கவடு விட் (டு) அவலம் பூத்து

மாதுயர் இடும்பை காய்த்து மரணமே கனிந்து நிற்கும்”

என்ற பாடலை பாடியுள்ளார்.

பேதை மாந்தர் அறியாமை காரணமாகத் தவறுகள் விடலாம். தவறுகளை மன்னித்து, அவர்கள் இடத்தில் அன்பு கொண்டு வாழவேண்டும். அன்பினால் தீயவும் நல்லவாம் அன்றோ! மடவோரைக் காய்தல் இன்றி உவந்தணைத்தல் சால்புடையார் கடன் அன்றோ? ஆன்மநேயமும் அதுவன்றோ?

மேலும் நாவுக்கரசப் பெருந்தகையாரிடம் செல்வோம். அவர் பேதைமை தீர வழி சொல்லுகிறார் கேட்போம்.

பெருகலாந் தவம் பேதைமை தீரலாம்

திருகலாகிய சிந்தை திருத்தலாம்

பருகலாம் பரம் ஆயதோர் ஆனந்தம்

மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே.

பிறந்த குடியைப் பேணி வாழ்வோம்

உலகம் பரந்து பட்டது. பலகோடி மக்கள் இங்கு வாழ்கின்றனர். எல்லோரும் இனிது வாழவேண்டும் என்ற விழைகின்றனர். ஆனால் எங்கு பார்த்தாலும் போட்டி, பொறாமை, சண்டை சச்சரவு, சூது - வாது, உட்பகை என்பன கொழுந்துவிட்டு எரிகின்றன. சாந்தி, சமாதானம் துளியும் இல்லை. மக்களின் உயிரையும் உளத்தையும் கொடிய அந்தகார இருள் முற்று முழுதாக மூடிக் கிடக்கின்றது. வாழ்க்கைப்படகு திக்குத்திசை தெரியாது ஓடிக்கொண்டு இருக்கின்றது.

தெய்வத் திருக்குறள் நல்வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகக் காட்சியளிக்கின்றது. தமிழ் இனத்துக்கு மட்டுமல்ல. அனைத்துலக மக்களும் அதன் வழியில் நின்று உய்தி கூடவேண்டும்; சுபீட்சம் அடைதல் வேண்டும். ஆம். இது அவசியமும் அவசரமுமாகும். ஓதற்கு எளிதாய், உணர்தற்கு அரிதாகி,வேதப்பொருளாய் உள்ளுதொறும் உள்ளுதொறும் உருக்கும் வள்ளுவர் வாய்மொழி வழி நடப்போம்.

திருக்குறளில் முப்பெரும் பால்கள் இருப்பதை அறிவோம். அறத்துப்பால் இல்லற துறவறங்கள் இனிதின் இயல வழி காட்டுகின்றது. அன்பும் அருளும் அறமும் அங்கு வித்தி விளைக்கப்படுகின்றன.

பொருட்பாலில், அரசியல், அதன் அங்கம் மற்றும் கூறப்படாது ஒழிந்தன வெல்லாம் பேசப்படுகின்றன. சுருங்கக் கூறுவதாயின் அது அரசர்க்குரியனவற்றையும் அமைச்சர்க்கு உரியனவற்றையும் அமைச்சர்க்கு உரியனவற்றையும் நாடு முதலிய பொதுப்பகுதிகளையும் நட்பின் பகுதிகளையும், பேதைமை முதலிய துன்பியலின் பகுதிகளையும் வாழும் மக்களின் இயல்பாகிய

குடியியலையும் கூறா நிற்கின்றது. குடி உயர்ந்தார் அன்றோ கோனும் உயர்வான்? வள்ளுவப் பெருந்தகையார் குடிமக்களை உயர்த்த குடிமை, குடிசெயல்வகை என இரு இயல்களை அமைத்து மேலான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்.

குடிமைப் பண்பு உடையவர்களே குடிகள் எனப்படுகின்றனர். குடிமை என்பது தான் என்ன? ஒழுக்கம், அஃதாவது குடி மக்களாய் உள்ளாரது ஒழுக்கம் என்போம். ஆசிரியர் தொல்காப்பியனார் ‘குடிமை’ என்னும் சொல்லை எடுத்தாள்கின்றார். ‘எல்லாச் சொல்லும் பொருள் குறிப்பனவே’ என்னும் அவர், ‘மொழிப் பொருட்காரணம் விழிப்பத்தோன்றா?’ என்றும் கூறுவர். உரைகண்ட பேராசிரியர் குடிமை, குடிப்பிறந்தாரது தன்மை என்றும் அது ஊராண்மை எனவும் குறிப்பிட்டார். ஊராண்மையாவது உபகாரியாம் தன்மை எனவும் விளக்குவர்.

நற்குடிப் பிறந்தாரிடத்து இயல்பாகவே கருத்தும் சொல்லும் மாறாச் செம்மையும், பழி பாவங்களுக்கு அஞ்சும் பண்பும் குடிகொண்டிருக்கும். செம்மை செப்பம் எனப்படும். ‘சொற்கோட்டமில்லது செப்பம்’ என்பர் வள்ளுவர் பெருமான்.

மேலும் நற்குடிப்பிறந்தார் இயல்புகள் சிலவற்றைக் காண்போம். அவர்கள் ஒழுக்கம், வாய்மை, நாணம் பேணுவர். நாலடியாரில் வரும் பாடல் ஒன்று மேலும் விளக்கம் தருகின்றது.

‘இனநன்மை, இன்சொல், ஒன்றுஈதல் மற்(று) ஏனை

மனநன்மை என்றிவை எல்லாம் - கனமணி

முத்தோ(டு) இமைக்கும் முழங்குவரித் தண்சேர்ப்ப

இற்பிறந்தார் கண்ணே உள’

என்பது அது.

(இனநலம் - நல்ல நண்பரை உடைமை; மனநலம் - மனத்தூய்மை)

குடிப்பிறந்த ஒருவர் ‘கோடியளவு பொன் பெறினும் ஒழுக்கத்துக்குக் கேடானவற்றைச் செய்யார்.

வள்ளுவர் வாக்கில் அது,

‘அடுக்கிய கோடி பெறினும் குடிப் பிறந்தார்

குன்றுவ செய்தல் இலர்’

என்று வளர்கின்றது.

தொல்குடிக்கண் தோன்றிய நல்லோர் வளஞ்சுருங்கிய காலத்தும் தமது தன்மையில் நின்றும் நீங்கியதில்லை அன்றோ? இளையான் குடிமாறர், குங்குலியக்கலயர் முதலியோர் முறையே அன்னமிட்டமை, தூபமிட்டமை இதற்கு நேரிய எடுத்துக்காட்டுக்கள் அன்றோ!

நாலடியார் -

'உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்' கொள்கையிற் குன்றார் - அரிமா (சிங்கம்) கொடியாகப் படர்ந்திருக்கும் புல்லைத் தின்பதில்லையே!' என்று கூறும்.

'வழங்குவது உள்வழ்ந்தக் கண்ணும் பழங்குடி

பண்பின் தலைபிரிதல் இன்று' என்னும் வள்ளுவர் வாசகம் படிக்கப்படிக்க இனிக்கும்

அன்றோ!

'நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தக் கண்ணும்

இல்லையென மாட்டார்' அன்றோ!

இராமாயணம் அயோத்தியா காண்டத்தில் கம்பநாடரும் நற்குடிப்பிறந்தார் தமது ஒழுகலாற்றுக்கு மாறுபட நடவார் என்று ஓதுவர்.

மேலும் குடிப்பிறந்தானை அவனது ஈரநெஞ்சினைக் கொண்டும் வாய்ச்சொல்லினைக் கொண்டும் அறியலாகுமன்றோ!

அன்றெல்லாம் குடிப்பிறந்த மேல் மக்கள் சான்றோர், அந்தணர், அருந்தவத்தோர், தம்முன், தந்தை தாயார் என்னும் இவர் தம்மிடைப் புகுந்த வழி, இருக்கையில் நின்று எழுந்து வந்து இன்சொற் பேசிப் பணிவுடைமை காட்டுவர். இன்று சமுதாயம் மாறிவிட்டது; குடிமை தீர்ந்துவிட்டது; மக்கள் மாண்பு மறைந்து விட்டது.

ஒவ்வொருவரும் தாம் பிறந்த குடியை உயரச் செய்தல் வேண்டும். இது ஒரு மகத்தான கடமையாகும். அதனை எந்த நிலையினும் தவறவிடுதல் ஆகாது. பெருமை பெருமை என்று பலகால் பேசுகின்றோம். அந்தப் பெருமையுள்ளும் சிறந்தது ஒன்று கூறுகிறார் வள்ளுவர் பாருங்கள்!

'கருமம் செய ஒருவன் கைதா வேன் - என்னும்

பெருமையில் பீடு உடையதில்'

அஃதாவது, குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்யச் சோர்வடையேன் என்று ஒருவன் முயலும் முயற்சிப் பெருமையே மேலான பெருமை என்பதாம். ஒருவர்

தமது ஆள்வினை, ஆன்ற அறிவு என்பவற்றால் நிச்சயமாகத் தமது குடியை உயர்த்த முடியும் என்பது வள்ளுவர் மதம்.

தெய்வம் இருக்கின்றதே அது, நல்ல குடிமகனைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றதாம். அவன் என்குடியை மேம்படுத்துவேன் என்று முயற்சிக்கின்றானாம். தெய்வம் ஆடையை வரிந்து கட்டிக் கொண்டு ஓடோடி வந்து அவனுக்கு முன் நின்று உதவுகின்றதாம். அற்புதம்! அற்புதம்!!

'குற்றம் இலனாய்க் குடி செய்து வாழும் நல்லோனை'

உலகத்தார் அவனுக்குத் தாம் சுற்றமாக இருக்க வேண்டும் என்று சுற்றிக் கொள்வராம்.

ஆம். இன்மை எனும் ஒரு பாவி எம்மை எதிர்நோக்கி நிற்கின்றான். அவன் மிகவும் கெட்டவன். அவன் மறுமை இன்பத்தையும் இம்மை இன்பத்தையும் அழித்து விடுவான். குடியை - நமது குடும்பத்தை - நாம் உயர்த்த முயலும் செயல்களுக்கு, முட்டுக்கட்டை ஆகியும் விடுவான். ஆள்வினை உடைமையோடு அவனை வெல்வோம். அத்தீயோன் பிறந்த குலத்தை, பேராண்மையை, சிறந்த கல்வியை எல்லாம் மாய்ப்பான். அவனுக்கு இடமளிக்காது இருப்போம்!

வள்ளுவப் பெருந்தகையார், விடுக்கும் கட்டளையைச் சிரமேற்கொண்டு நம் சிந்தனையை நிறுத்துவோம். பிறந்த குடியைப் பேணி பெருமையுடன் வாழ்வோம். சரி! சரி!! வள்ளுவதேவர் என்ன சொல்லுகிறார்?

துன்பமாகிய கோடரிபுகுந்து, தனது அடியினை வெட்டிச்சாய்க்க, ஒருபற்று இன்றி, நற்குடியாகிய மரம் வீழா நிற்கும். நற்குடிக்கண் வந்த உத்தம புதல்வன், மிண்டு கொடுத்து மரத்தைத் தாங்க வேண்டும் என்பது அது.

குறளைப்படியுங்கள். மனத்தில் இருத்துங்கள்.

'இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்துஊன்றும்

நல்லாள் இலாத குடி'

வாழி வள்ளுவர் வாய்மொழி.

காணின் குவளை கவிழ்ந்து நிலம் நோக்கும்!

ஒரு குரல் கேட்டது. அன்புக்குரிய மாணவர் ஒருவரின் குரல். ஆம். “நாளிதுவரை, பழந் தமிழ் நூல்களில் கூறப்படும் அறம், பொருள் என்ப பற்றி, கூறி வந்துள்ளீர்கள். ‘காதல் இருவர் கருத்து ஒருமித்து, ஆதரவு பட்டதே இன்பம்’ என்று ஔவை மூதாட்டி கூறினாரே! காதல் இன்பம் பற்றிச் சிறிது கூறமாட்டீர்களா?” என்று வினவினார் ‘நன்று’ என்று கூறி அமைந்தேன்.

பழந்தமிழ் இலக்கியங்களை, அகப்பாட்டு, புறப்பாட்டு என இருதிறப் படுத்தலாம். அகப்பாட்டு ஒத்த அன்பினராய தலைவன் தலைவியரிடத்தே நிகழும் இன்ப ஒழுக்கம் பற்றி எடுத்துரைக்கும். (அகம் - உள்ளகம்). புறப்பாட்டு புறத்தே நிகழும் ஒழுக்கம் பற்றிப் பேசும். கல்வி, செல்வம், நாடு, அரசு, வீரம் என்ப எல்லாம் அதனுள் இடம்பெறும். (புறம் - வெளிப்புறம்)

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில், சில அகத்தினை குறித்தும், சில புறத்திணைக்குறித்தும் மற்றும் சில இரண்டும் குறித்தும் வரும். திருவள்ளுவ தேவர் அறம், பொருள், இன்பம், மூன்றினையும் குறித்துக் கூறியுள்ளார். அகத்து நிகழும் இன்பத்தினைக் களவு, கற்பு என இரண்டாக வகுத்துக் கொண்டு சுவை சொட்டச் சொட்டச் சொல்லியுள்ளார்.

களவு - தலைவனும், தலைவியும் பிறர்கொடுக்கவும் அடுப்பவும் இல்லாமல் ஊழ்வசத்தால், தாமே எதிர்ப்பட்டு இணைந்து வருவதைக் கூறும். கற்பு - தலைவன், தலைவியை வேள்விச் சடங்கோடே கொடுப்ப கொள்ளுவதைக் கூறுவதாகும். கொடுக்கும்பொழுது, ‘இவளை இன்னவாறு பாதுகாப்பாய்’ எனவும் ‘இவற்கு நீ இன்னவாறே குற்றேவல் செய்து ஒழுகு’ எனவும் செந்தீக்கடவுள் சாட்சியாக அந்தணர், அறிவர், சான்றோர் அவையில் கற்பிக்கப்படுவதென விளக்கம் தருவர், நிற்க.

காதற்காட்சி ஒன்றைக் காண்போம். காதல் புரிந்து களவொழுக்கத்தில் நின்றவன், பெருந்தகை ஒருவன், சென்று கொண்டு இருக்கின்றான். தொலைவில் நாவல் மரத்தின் கீழே ஆணும், பெண்ணுமாகிய இரு நண்டுகள் நிற்பதைக் காண்கின்றோம். அண்மையில் வந்து விட்டான். வண்டை ஒத்த நாவற் கனி ஒன்றை அந்த ஆண் நண்டு பெட்டை நண்டுக்கு ஊட்டுவதைக் காண்கின்றானாம். ஐயகோ! அவன், பேய் பிடித்தவன் போல் நின்றானாம். ஏன்? தனது காதலிக்குத் தான் அப்படி ஊட்டவில்லை என்பதுதானாம் ஏக்கத்துக்குக் காரணம்.

மற்றுமொரு காதலனின் மற்றுமொரு செய்தியைக் கேளுங்கள்.

அழகி ஒருத்தி நூலை எடுத்துப் பகிர்வு செய்து கொண்டால் எப்படி இருக்கும். மிக நுண்ணி இடையினள் அவள். பாவம் காதலன். பொய்போல் இடை முறிந்து படுமே என்று கருதி அணிகலங்களைப் பூட்டி அழகு பார்க்க மாட்டானாம். மெல்லடி நோதல் அஞ்சி மலரின் மேலேதான் மிதிப்ப விடுவானாம். போகட்டும். வண்டு அவளைத் துன்புறுத்தும் என்று பயந்து கூந்தலில் மலர் சூட்டமாட்டானாம். எவ்வளவு அற்புதம்! இவர் தாம் காதல் இருவர்.

இனி, திருவள்ளுவ தேவரிடம் வருவோம். திருக்குறளில் 'நலம் புனைந்துரைத்தல்' என்று ஓரதிகாரம் வருகின்றது (112). நலம் புனைந்துரைத்தல் என்பது தலைமகன் தலைமகளது அழகினை புனைந்து சொல்லுவது ஆகும். மணக் குடவர், புனைந்துரை எனினும் பாராட்டு எனினும், கொண்டாட்டு எனினும், மகிழ்ச்சி எனினும் எல்லாம் ஒக்கும் என்பர்.

அகத்திணையுள்ளே, இயற்கை புணர்ச்சி என்று ஒரு பகுதியுள்ளது. அஃதாவது ஊழ்வலியால் தலைவன், தலைவியர் கொடுப்போர் அடுப்போரின்றி இருவரும் தம்முட்கூடும் கூட்டமது. இனி, இப்பகுதி காட்சி, ஐயம் தெளிதல் முதலியவாக விரிந்து செல்லும். புணர்ச்சி என்றது சந்தித்தல், இணைதல் என்போம். தலைவன் ஒருவன் இயற்கை புணர்ச்சி இறுதியிலே, மிக மென்மையான அனிச்சம் பூவை பார்க்கிறான். 'அனிச்சம்பூவே, வாழ்வாயாக; யாம் விரும்பும் நங்கை நல்லாளோ நின்னினும் மென்னரீமையவள் என்பதை புரிந்துகொள்' என்கிறார். அது வள்ளுவர் பொய் மொழி.

"நன்னரீர வாழி அனுச்சமே; நின்னினும்

மென்னரீள் யாம் வழீபவள்"

ஒருபோது தலைவன் தோழனுடைய உதவியால் தலைவியை காண்கின்றான். அயலில் குவளைப் பூக்களையும் காண்கின்றான். அவை மேல் நோக்கி விரிந்து நிற்கின்றன. தன் அருமைக் காதலியின் கண்ணுக்குத் தோற்ற இவை எங்ஙனம் இப்படி வெட்கமின்றி நிமிர்ந்து நிற்கமுடியும்? சரி சரி! கட்பார்வை பூக்களுக்கு இல்லைத்தானே! என்று ஆறுதல் அடைகின்றான். குறளைப் படித்துப் பாருக்ள்.

"காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்

மாணிழை கண்ணொவ்வேம் என்று"

களவொழுக்கத்தே ஈடுபட்டோர் பகற்கண்ணும் இரவின் கண்ணும் சந்திப்பதற்குத் தெரிவு செய்திருக்கும் இடம் 'குறி' எனப்படும். தலைவன் உணர்ந்ததாகவும் அமையும் மென்பர். இனி இரவுக் குறி, வீட்டின் அயலதாகி மினையோர் கிளவி (சொல்) கேட்கும் வகையதாய் அமையும் என்பர் (தொல்கா. 131)

ஒரு நாள் தலைவன், பகற்குறிக் கண்வருகின்றான். தலைவி தன்னை அனிச்சம் மலர் கொண்டு அலங்கிரித்திருக்கிறாள். பாவம் அவசரத்தில் அனிச்சம் பூவின் காம்புகளை ஒடிக்காமல் சூடிக் கொண்டாள். 'அம்மம்மா! காம்புகளின் பார்த்தால் இடை முறிந்து விடப்போகிறதே! என்ன ஆகுமோ! நெய்தற்பறை ஒலிக்குமே! என ஏங்குகின்றான் காதலன். குறளோவியத்தைக் காணுங்கள்.

"அனிச்சப் பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு

நல்லபடாஅ பறை"

என்பது அது. (கால் - காம்பு; நுசுப்பு - இடை; பறை தோல்வாத்தியம்)

மற்றொரு சமயம் இருவரும் இரவுக் குறிக்கண்ணே சந்திக்கின்றனர். வானத்தே விண்மீன்கள் சுடர்விடுகின்றன. சந்திரனும் தான் தன்னொளியைக் கொட்டுகின்றான். தலைவன் தன் காதலியின் திருமுகத்தெழிலைப் பருகுகின்றான். வானத்து மீன்கள், எம் தலைவியின் முகத்துக்கும் சந்திரனுக்கும் வேறுபாடு பெரிதாக இருப்பவும் இது முகம் இது மதி என்று அறியமாட்டாது கலங்கி நிற்கின்றனவே! என்று அங்கலாய்கின்றான். வள்ளுவர் வாக்கில்

மதியும் மடந்தை முகனும் அறியா

பதியில் கலங்கிய மீன்

என்று மலர்கின்றது.

மேலும் பிறிதோரிடத்தில் 'என் தலைவியின் முகம் போல நீ ஒளி செய்யமாட்டாய்! அவ்வாறு ஒளி செய்யவில்லையாயின் வாழி! என்று வாழ்த்துக்கின்றான். காதலியை மதி முந்தக் கூடாது என்பது அவன் ஆசை.

ஆசிரியர் தொல்காப்பியனார் ஆடவரிடத்து பெருந்தன்மையும் அறிவாற்றலும், மகளிரிடத்து அச்சமும், நாணமும் மற்றும் குணநலங்களும் இருக்க வேண்டும் என ஆணையிட்டமையும் பொய்யு வழுவும் தோன்றாமல் வாழவேண்டும் என்று கூறியமையும் எவரும் மனங் கொளற்பாலனவாம்.

## பேணவேண்டும் பெருங்குணங்கள்

பழந்தமிழ் இலக்கியப் பரப்பில் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்கள் மகத்தான இடத்தை வகிக்கின்றன. அவை அகம், புறம் என்னும் இருதிணைகளையும் அடித்தளமாகக் கொண்டவை. அகம் என்பதை இலகுவாகக் கூறின், வீட்டாட்சி என்றும், புறம் என்பதை நாட்டாட்சி என்றும் சொல்லிவிடலாம். அகத்திணையில் களவு, கற்பு என்னும் இரு ஒழுக்கங்கள் இடம் பெற்றிருத்தலை முன்பு தெரிந்து கொண்டோம்.

எட்டுத் தொகை நூல்களில் முதற் கண் நிற்பது நற்றிணையாகும். நற்றிணை நூல் நானூறு பாக்களினால் ஆனது. இப்பாடல்கள், களவு, கற்பு ஒழுக்கங்களைச் செஞ்சொல் ஓவியங்களாகச் சித்தரிக்கின்றன. மேலும், அவற்றுடன் ஆங்காங்கு வாழ்வியல் விழுமியங்களையும் மக்கள் அறிந்து ஒழுக வழி செய்கின்றன.

இனி, நற்றிணை நூலில் வரும் ஒரு சொல்லோவியத்தைக் காண்போம். தலைவனும், தலைவியும் கொடுப்பாரும் இன்றி அடுப்பாரும் இன்றி, தம்முள்ளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர், வதீயில், பெண்கள் பலரும் சிலரும் கூடுகின்றார்கள். தலைவன், தலைவியர் களவொழுக்கம் பற்றி ஒருவருக்கொருவர் வாயினால் ஒன்றும் பேசுகிறார்கள் இல்லை. கண்சாடை பண்ணி மூக்கிலே சுட்டு விரலை வைத்து ஊமைப் பேச்சினைப் பேசுகிறார்கள். தலைவி, உயர்ந்த குடியினளாம், மேம்பட்ட குடியினரை எட்டியும் சுட்டியும் சொல்லல் ஆகாதாம். எப்படியோ இதனைத் தோழிகண்டு விடுகின்றாள். போகட்டும், பேதை அல்லை! மேதை எங்குறு மகள் என்று அன்னை அலைக்கிறாள். ஒருநாள் தலைவன் வேலிப்புறமாக வந்து நிற்கின்றான். அவனைக் கண்டும் காணாதான் போன்று அவன் தலைவியை ‘அழைத்துச் செல்ல வேண்டும் அல்லது திருமணம் இயற வேண்டும்’ என்பது அவளது ஆசை. அதனை நேரே அவனுக்குக் கூறுவது நன்று அல்லவே! அவன் காதில் படும்படியாக ‘இவ்வூர் பழிசுமந்திடுக’ என்கிறாள். பாடலைப் படியுங்கள்.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி,

மூக்கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்தி,

மறுகின் பெண்டிர் அம்பல் தூற்றச்

சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப

அலந்தனன் வாழிதோழி கானல்

புது மலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவல்

கடுமாப் பூண்ட நெடுந்தேர் கடைஇ

நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கன் ஓடு

செலவயர்ந் திசினால் யானே

அவர் சுமந்து ஒழிகஇவ் அழுங்கலலூரே. (நற்றி. 149)

(மறுகு - வதீ; அம்பல் - பழிச்சொல் சிலர் அறிந்தது; வலந்தனள் - சுற்றினள்; சுவல் - தோள; கடையி - செலுத்தி; அலர் - பழிச்சொல் பலர் அறிந்தது; செலவு - உடன்போக்கு)

காதல் வாழ்வில் உயரிய பண்புகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதை தலைவன் கூற்றாக ஆசிரியர் குறிப்பிடுவதைக் காணுங்கள்.

“நயனும், நண்பும், நாணும் நன்குடைமையும்

பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்

நும்மினும் உடையேன் மன்னே....”

என வரும் (நள். 160)

இந்த உயரிய குணங்களை நாம் சிறிது அறிந்துகொள்வது பயனுடையதாகும். நயன் என்பதற்கு நன்மை, கொடை, மகிழ்ச்சி என்று பொருள் கூறலாம். ஆசிரியர் பரிமேலழகர் நீதி எனும்பொருள் கூறுகின்றார். நண்பு - சிநேகம். அதுவும் நன்னட்பு, தீ நட்பு என இருவகைத்தாதலையும் அறிவோம். நன்னட்பினர், 'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்ர் நானிநாகரிர்' என்னும் நற்றிணைப் பாடலாலும் அறியலாம். நட்பின் உச்ச நிலையில் நஞ்சு தந்தவரோடும் கூடத் தொடர்ந்து நண்பு பேணப்படும் என்க!

வாழ்விற்கு என்றும் அகநட்பே வேண்டற்பாலது; இனி நாண் என்பது மகளிர்க்குரிய குணமெனச் சிலர் கருதுவர்; இல்லை சான்றோராயினார், செய்யத்தகாதன செய்ய நாண்உறுவர். அதுவே இங்கு நாணெனப்படுகின்றது. பயன் என்பது யாதானுமோர் பிரயோசனம் கருதி இயற்றப்படும் செயல் எனலாம். பண்பு என்பது பெருமை, சான்றாண்மைகளில் வழுவாது நிற்றலாகம். 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்பது நாம் அறிந்ததே! பாடறிந் தொழுகல் - பிறர் இயல்பு அறிந்து நடத்தல் எனலாம். இவை எல்லாம் வாழ்க்கையை வளமுள்ளதாக்க இன்றியமையாதனவாகும்.

இவ்வாறாக மெய்ப்புலவோர், உயிர்க்கு உறுதி பயக்கும் நீதிகளை கட்டிப் பூசிக் கசப்பு மருந்ததைத் தருதல் போல அமையும் வாய்க்கும் வழியெல்லாம் தருவர். இவர்கள்தான் காலத்தால் அழியாத தெய்வக் கவிகள். இவர்கள் வழியில் நின்று நாம் வாழுவேமேயாகில் உலக வாழ்வு இனிக்கும்.

"மடவை மன்ற வாழிய முருகே"

இராம காதையைச் செய்யுள் வடிவில் தந்தவர் கம்பநாடர். இராமகாதை ஆரணிய காண்டத்தில் சூர்ப்பனகை படலம் வருகின்றது. இராம இலக்குவர்கள் கோதாவரி ஆற்றைக் கடக்கும் செய்தி கூறப்படுகின்றது. பாடலைப் படியுங்கள்.

புவியினுக்கு அணியாய் ஆன்றபொருள் தந்து புலத்திற்கு ஆகி,

அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவிச்,

சவியுறத் தெளிந்து தண் என்று ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்

கவியெனக் கிந்த கோதாவரியினை வரீர் கண்டார்.

ஆறு, சான்றோர் கவியுடன் ஒப்பிடப்படுகின்றது. பாடல் சிலேடை நயம்கொண்டு விளங்குகின்றது.

ஆற்றினை எடுத்துக்கொள்வோம். ஆறு பூமிக்கு அணிகலம், மணியும் பொன்னும் ஆரமும் அகிலும் ஆம் பொருள்கள் தந்து, விளை புலங்கள் வளர்த்து, புனித நீர்த்துறைகளைஉடையதாகி, ஐவகை நிலங்களினூடு, தெளிவடைந்து, குளிர்ந்து ஒழுகி நடக்கின்றது.

சான்றோர் கவியை - பாட்டினை - செய்யுளை எடுத்துக் கொள்வோம். கவிதையானது உவமை முதலிய பல்வேறு அணிகளை உடையதாகி, அறம், பொருள், இன்பமாம் பொருள்களைத் தந்து, அறிவை விளைத்து, அமிதொத்த அகப்பொருள் துறைகளை உடையதாகி, அன்பின் ஐந்திணைப்பாற்பட்டு, புணர்தல், பிரிதல் இருத்தல், இரங்கல், ஊடல் எனும் ஒழுக்கங்களை இசைத்து, தண்ணென்று இனிய நடையுடன் நடக்கும்.

'பாம்பறியும் பாம்பின் கால்' என்பார்கள். கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர், உண்மைக் கவிகளை, ஆழம்கண்டு அறிய வல்லவர் அன்றோ! அவரிடம் சான்றாமைக் குணம் குடிக்கொண்டிருக்கும். சங்ககாலப் புலவோர் எல்லாம் அத்தகையர் ஆவார். அவர்களைக் குறிக்கும் போது சங்கச் சான்றோர் என்றே அறிஞர்கள் வழங்குகின்றனர்.

கடந்த வாரம் சங்க இலக்கியங்களுள் ஒன்றாய நற்றிணை நாற்பது என்னும் நூலில் இடம்பெற்ற ஒரு செய்யுள் பற்றித் தெரிந்து கொண்டோம். இவ்வாரம் மற்றும் ஒரு செய்யுளை பற்றிச் சிந்திப்போம்.

பிறப்பு, குடிமை, அன்பு, அழகு முதலிய நற்குணங்கள் அமைந்த நங்கை நல்லாளைக் காண்கின்றோம். அவள், தன்னேரில்லாத் தலைவன் ஒருவனைக் காதலித்தாள். இருவரும் அன்புடன் பழகி வருகின்றனர்.

அவனும்தான், மலைவாணர் மகன். அம்மலைச் சாரலில் தெய்வத் தன்மை வாய்ந்த நீர்ச்சுனை ஒன்று உண்டு. அச்சுனையில் குவளை மலர்கள், இலைகளை விலக்கி மேலெழுது நிற்கின்றன. அப்பூக்களை யாரும் பறிப்பதில்லை. அருவி ஒலி எழுப்பி வழீகின்றது. அவ்வொலிக்கு இயைய அங்கு வசதியும் சூரரமகளிர் ஆடுவர்.

ஆம். தன்னேர் இல்லாத் தலைவன் சிலநாள்களாக அங்கு வராதொழிந்தான். கற்புக்கடம்பூண்ட தலைவி அவனைக் காணாமையால் மெலிவுற்றாள். பாலும் உண்ணாள்; பழமும் உண்ணாள்; மெலிவெய்தினாள்.

இந்நிலை கண்டாள் அன்னை. ஈன்ற வயிறு பொறுக்குமா? இல்லை! இல்லை!! அந்த முருகன் - அழகன் - இவளை அணங்செய்தனனோ - வருத்தம் இழைத்தனனோ - என வாடுகிறாள். பண்டையோர் வழக்கப்படி வேலனுக்கு வெளியாட்டயர்ந்தால் நோய் தீரும் என்று எண்ணினாள். வெறியாட்டு விழாவும் தொடங்கிவிட்டது. படிமத்தான் உருவேறி ஆடுகிறான். இந்நாள் வழக்கில்

கூறுவதாயின் சன்னதம் ஆடுகிறான், ஆருயிர்த்தோழி ஓடோடி வருகின்றாள். என்ன துணிச்சல்! நேராகப் படிமத்தானைப் பார்க்கின்றாள். துணிச்சலுடன் தொடருகிறாள். 'ஐய! முருகு! எம்தலைவிக்கு, நும்மால் வருத்தம் ஏற்படவில்லை. அதனையான் நன்கனம் அறிவேன். எந்தலைவன் வருகை தாழ்த்ததனாலேயே அவளுக்கு நோய் உண்டாயிற்று. இவ்வெறியாட்டயர் களத்துக்கு வந்த நீ, கடவுளாயினும் ஆகுக. நிச்சயமாக நீ மடவன் - அறிவிலி - வாழிய' என்று இகழ்ச்சிக் குறிப்புடன் கூறி வைக்கின்றாள்.

இனி நற்றிணைச் செய்யுளைப் படிப்போம்.

கடவுட் கற்சுனை அடையிறந் (து) அவிழ்ந்த

பறியாக் குவளை மலரோடு காந்தள்

குருதி ஒண்பூ உருகெழுக் கட்டிப்

பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்

அருவி இன்னியத்(து) ஆடும் நாடன்

மார்புதர வந்த படர்மலி அருநோய்

நின்அணங்(கு) அன்மை அறிந்தும் அண்ணாந்து

கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி,

வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்!

கடவுள் ஆயினும் ஆக

மடவை! மன்ற வாழிய முருகே.

(கல் - மலை; சுனை - நீர்நிலை; அடை - இலை; பறியா - பிடுங்கப்படாத [கடவுட்சுனை ஆதலின் பிறர் அதில் தீண்டார் என்க]; வரை - மலை; அடுக்கம் - சாரல்; சூர்மகள் - அச்சம் தரும் தெய்வப் பெண்; அருநோய் - காமநோய்; அணங்கு - வருத்தம்)

படிமத்தான் வேலேந்தி ஆடுதலின் வேலன் எனப்பட்டான். வெறியாட்டு என்பது, தெய்வம் ஆவேசித்து ஆடும் கூத்தாகும். இளம் மகளிர் நோயுற்றபோது அது தெய்வந்தர வந்ததென்று கருதி அன்னையர் விழாவெடுத்துப் படிமத்தான் வாயிலாக அதனைத் தீர்ப்பித்தல் பண்டை நாள் வழக்கம் என்பர். இனி, இப்பாடல் ஒரு குட்டி நாடகம் போன்று இருப்பதையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதில் வரும் கதை மாந்தர் தலைவன், தலைவி, நற்றாய், தோழி முதலியவர்களாகும். பாத்திரப்பண்புகள் நாம் உணர்ந்து இன்புறற்கு உரியனவாகும். தோழியின் ஆற்றலே ஆற்றல்!

தான் பொய்ப்பின் யான் என் செய்வன்?

கடந்த தொடரில், கடைச் சங்கச் சான்றோர் செய்தளித்த எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாய நற்றிணையில் வந்த செய்யுள் ஒறு குறித்துச் சிறிது தெரிந்து கொண்டோம். இன்று எட்டுத் தொகை நூல்களுள் இரண்டாவதாக விளங்கும் குறுந்தொகை என்னும் நூலுள் இருந்து, ஒரு செய்யுளைப் பார்ப்போம்.

நற்றிணை, குறுந்தொகை, நெடுந்தொகை (அகநானூறு) என்னும் மூன்று நூல்களும் பாடல்களில் வரும் அடிகளின் தொகை கொண்டே தொகுக்கப்பட்டுள்ளன. குறுந்தொகை 4 முதல் 8 அடிகளைக் கொண்டது. நற்றிணை 9 முதல் 12 அடிகளைக் கொண்டது. நெடுந்தொகை 13 முதல் 37 அடிகளைக் கொண்டது.

குறுந்தொகையில் நானூறு பாடல்கள் உண்டு. அவை அகத்திணையின் பாற்பட்டவை. அகத்திணை களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கங்களைக் கொண்ட வீட்டு ஆட்சியாகும்.

தமிழ்ச் சான்றோர் தமது மெய்யுணர்வால் 'அன்புப் பெருக்கம் ஒன்றே இம்மை இன்பத்தையும் வீட்டின்பத்தையும் தரவல்லது' எனத் தெளிந்தனர். அன்பை வளர்த்து ஆரா இன்பங்கண்டனர். "அன்பின் வழியது உயிர்நிலை" என்பது வள்ளுவர் வாய்மொழியாகும்.

இனி, குறுந்தொகையுள் வரும் ஒரு பாடலைக் காண்போம். அப்பாடல் நல்லிசைப் புலவராய கபிலர் பாடியதாகும்.

நங்கை ஒருத்தியும் நம்பி ஒருவனும் காதலித்தனர். காலம் உருண்டோடியது! நம்பி திருமணம் செய்யாது காலம் தாழ்த்தினன். நங்கை தன் ஆருயிர்த் தோழியை நாடினாள். தனது உள்ளத்துயர் அனைத்தையும் ஒன்றும் விடாது உரைக்கின்றாள்.

"ஆம். அவர் என்னை மணந்து கொள்ளாது ஒழியின் யான் யாது செய்வேன்? இக்களவொழுக்க பிறர் யாரும் அறியாமலே நடந்தது அன்றோ! தலைவர் சான்றோர் வரிசையில் உள்ளவர். ஒரு சமயம் அவர் பொய்த்து விட்டால் என்ன ஆவது? எதற்கும் சாட்சி வேண்டுமே!" எனச் சிந்திக்கின்றாள்.

"அவர் என்னை மணந்த பொழுது அங்கு சாட்சியாக யாரும் இல்லைத்தான். ஆனால், 'நின்னிற் பிரியேன்; பிரியில் தரியேன்; விரைவில் மணந்து

கொள்ளுவேன்' என்று தாம் கூறிய உறுதிமொழியை - சூளுறவை - பொய்த்தால் யான் யாது செய்வன்?" "ஆம்! ஆம்!! ஓடாநின்ற நீரில் தினையின் தாள் ஒத்த சிறிய சருகுகள் நின்றன. அவை சான்று கூறலாம்தானே! இல்லை இல்லை! அவை, ஆரல் மீன்கள் 'எப்போ வரும்', 'எப்போ வரும்' என்று இரையின் எண்ணத்திலேதான் நின்றன. அவை எப்படி சாட்சி சொல்ல முடியும்" என்று எண்ணி குருகு நாரை நின்றது என்று முடிக்கின்றாள்.

இனிப் பாடலைப் படிப்போம்

யாரும் இல்லைத் தானே களவன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ

தினைத்தாள் அன்ன சிறு பசுங் கால

ஒழுகு நீர ஆரல் பார்க்கும்

குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.

களவன் என்பதற்குக் களத்தில் இருந்தவன் என்று கொண்டு ஊரம்பலத்தில் இருந்து - அறங்கூறவையத்திலில் இருந்து - தீர்ப்பு வழங்கியவன் என்றும் கள்வன் என்றும் பாடம் கொள்ளின் "உள்ளங்கவர் கள்வன்" என்றும் பொருள் கூறலாம். ஆரல் - ஒருவகை மீன்.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம் சுமைதாங்காது அன்றோ! ஆதலால் தனது தலைவனுக்கு உண்டாகும் பழிக்குக் கூட நாணினாள் என்றும் கொள்ளக்கிடக்கின்றது.

வாய்மை பேணி நாமெல்லாம் வளம் பெறுவோம்.

"உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார்"

"உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார்" - இவ்வாறு கூறியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் சங்ககாலச் சான்றோருள் ஒருவர். இவர் புலமைநலம் மிக்கவர் மட்டுமன்றி, மாநிலம் காத்த மன்னவருள் ஒருவரும் ஆவர். முடியுடை மூவேந்தருள் சேரற் குடியில் தோன்றிய செம்மல். பெருங்கடுங்கோ என்னும் இயற்பெயரினர். பாலைத் திணையை நன்கு விளக்கிப்பாடும் பண்பினர். அதனால் பாலை பாடிய பெருங்கடுங்கோ எனப்பட்டார். கொடையும் வீரமும் மிக்க இவர்

யாவராலும் பாராட்டப்பட்டார். இள எயினியார் என்னும் புலவர் இவரைப் பற்றிப் பாடிய பாடல் புறநானூற்றில் வருகின்றது.

பெருங்கடுங்கோ பாடிய பாலைத்திணை குறித்த பாடல்கள் தொகை நூல்களில் அறுபத்தெட்டு இடம் பெற்றுள்ளன. குறுந்தொகையில் பத்துப் பாடல்கள் வருகின்றன. பழந்தமிழர் புவியியல் நீர்மையில் நிலங்களை ஐந்து என வகுத்தனர். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பன அவை. முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்னும் நிலம் தோன்றும் என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுவர். ஐவகை நிலங்களுக்கும் ஐவகை ஒழுக்கம் கூறுவர். அவை புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல், பிரிதல் என்பனவாகும். பாலைக்கு, உரிப்பொருள் பிரிதல் ஆகும். பாலைநிலத்தில் பண்டைநாளில் வேட்டுவர், மறவர், எயிர் முதலிய குடிமக்கள் வாழ்ந்தனர்.

இவர்கள், உயிர் ஓம்புதற்கு உற்ற தொழில் இன்மையால், பாலை நிலம் வழியாகப் பயணம் செய்வோர்களின் பொருள்களைக் கவர்ந்து கொள்வர். அவர்களை நூல்கள் ஆறலை கள்வர் என்று குறிப்பிடும். ஆறு - வழி; அலை - வருத்துதல், அலைத்தல்.

களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கங்களைக் கூறும் அகத்திணையில் வரும் தலைவர்கள், தந்துணைவியரை பல்வேறு நிலைகளில் விட்டுப் பிரிவர். ஓதுதற்கும், கல்வி கற்றற்கும், பொருள் ஈட்டுதற்கும், அரசர்களுக்கு உற்றுழி உதவுவதற்கும், தூதின் பொருட்டுமெல்லாம் பிரிந்து செல்வர்.

இனி குறுந்தொகையுள் வரும் ஒரு பாடலை நோக்குவோம். இல்லக் கிழத்தி ஒருத்தி வருகிறாள். அவள் கணவன் பொருள் தேடுதற் பொருட்டுப் பிரிந்து சென்றானாம். தலைவி, தோழிக்குக் கூறுகிறாள். தலைமகன் பிரிந்து சென்றமைக்குத்தான் வருந்தவில்லையாம். மாற்று, அவன் சென்ற கானகத்துத் தன்மைக்கு வருந்துகிறாளாம். பாடல் வருமாறு:-

‘உள்ளது சிதைப்போர் உளர் எனப் படாஅர்

இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவுஎனச்

சொல்லிய வண்மை தெளியக் காட்டிச்

சென்றனர்; வாழி தோழி என்றும்

கூற்றத்(து) அன்ன கொலைவேல் மறவர்

ஆற்றிருந்(து) அல்கி வழங்கு நர்ச் செகுத்த

படுமுடை பருந்துபார்த்(து) இருக்கும்

நெடுமூதுஇடைய நீரில் ஆறே.

(உள்ளது - முன்னோர் ஈட்டிய செல்வம்; சிதைத்தல் - அழித்தல் / செலவு செய்தல்; உளர் - செல்வம் உள்ளவர்; இரவு - யாசித்தல்; வன்மை - ஆண்மை; கூற்றம் - எமன்; அல்கி - தங்கி; வழங்குநர் - செல்வோர்/பயணிகள்; முடை - புலால்; நெடுமுதுஇடை - நீண்டபழையதாகிய)

'எனது அருமைத் தோழியே, 'ஒருவர், தமது முயற்சியால் பொருளை ஈட்டுதல் வேண்டும். அங்ஙனம் தாம் ஈட்டிய பொருளையே செலவு செய்தல் வேண்ம். அதை விடுத்து, தாயத்தாரால் - முன்னோரால் - ஈட்டப்பட்ட பொருளை அவர், செலவு செய்தலாகாது. தாம் ஈட்டிய பொருளைச் செலவு செய்வோரையே அறிஞர் பாராட்டுவர். தாமே பொருளை ஈட்டாதார் வாழ்க்கை பிறரிடம் இரந்துண்ணும் வாழ்வினும் இழிந்தது என்று நூலோரி கூறுவர். ஆடவருக்கு ஆண்மைத் தன்மை தனது முயற்சியால் ஈட்டிய பொருளைக் கொண்டு வாழ்தலாகும். இவ்வாறெல்லாம் அவர் எமக்குக் கூறினார். அதனைத் தெளிய வைப்பதற்காகவே பொருள் தேடச்சென்றார்.

'ஆம் அவர் பொருள் தேடச் சென்றவழியோ - பாதையோ - மிகக்கொடியது. அங்கு கூற்றுவன் போன்ற கொலைதொழில் மறவர் மறைந்திருப்பர். வழிப்போக்கரிடம் பொருளைக் கொள்ளையிட மறைந்திருப்பர். இறந்து பட்டோரின் புலால்மணம் எங்கும் வசீம். பருந்துகள் புலாலைக் கவர மேலே பறந்து திரியும். மேலும், நெடிய, பழைய, நீரற்ற பாதைகளிலேயே செல்லவேண்டும். எந்தலைவர் நோய் நொடியின்றி வாழவேண்டும்' என்று கூறி அமைகின்றாள்

'வினையே ஆடவர்க்கு உயிர். முயன்று பொருள் தேடச் சென்றமைக்கு நான் வருந்தவில்லை; அவர் சென்ற வழியின் அருமை குறித்தே வருந்துகின்றேன்' என்கிறாள். என்னும் குறிப்பும் போதருகின்றது.

இங்கு வாழ்வியல் விழுமியம் பளிச்சிகின்றது. அது எல்லோரும் அறிந்து கொனற் பாலதாகும். முந்தையோர் ஈட்டிய பொருள் ஒவ்வொருவரதும் வாழ்வுக்கு முதலாய் அமைய வேண்டும். அதனால் கிடைக்கப் பெறும் ஊதியம் மட்டும் எமது வாழ்க்கைச் செலவுக்கு மற்றுத் தமது உழைப்பில் வாழ்க்கைச் சகடத்தை ஓட்டுபவரே செல்வம் உடையாரென்று சான்றோரால் போற்றப்படுபவர்.

இரத்தல் இழிவு; அதனினும் முந்தையோர் ஈட்டிய பொருளைச் செலவுசெய்து வாழ்தல் மிக்க இழிவு ஆகும். 'தேடாதழிக்கிற் பாடாய் முடியும்' என்பது பொது மொழியாகும். நாம் முயற்சி உடையராய், நல்வழியில் நின்று பொருளை ஈட்டி முந்தையோர் தந்த பொருளைச் சிந்தையாது ஒழுகுவோமாகா!

காக்கை பிள்ளாய் கரைந்திட வேண்டும்

ஒரு நாட்டின் சிறப்பிற்குச் சான்றுபகர்பவன, அந்நாட்டில் தோன்றிய இலக்கியங்களேயாகும். அவை, அங்கு பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்கட் கூட்டத்தினர் மேற்கொண்டொழுகிய வாழ்க்கை முறை, பண்பாட்டுத் திறன் என்பவற்றின் அடிப்படையிலே எழுந்தன என்பதில் ஐயமில்லை. தமிழர் சமுதாயத்தின் மாண்புகளை அறிந்துகொள்ள, பழந்தமிழ் இலக்கியங்கள் பெரிதும் பயன்படுகின்றன. அவைபாட்டும் தொகையும் எனப்பகுக்கப்பட்டிருத்தலை அறிவாம்.

தொகை நூல்களுள் ஒன்றாய ஐங்குறுநூற்றை எடுத்துக் கொள்வோம். ஐந்திணைகளில் ஒவ்வொன்றுக்கும், குறைந்த அடிவரையறை கொண்ட நூறு நூறு பாடல்களைத் தனித்தனி உடைமையினால் ஐங்குறுநூறு என்னும் பெயர் உண்டாயிற்று எனலாம். ஆசிரியப்பாவான் அமைந்த இந்நூல் மூன்றடிச் சிறுமையும், ஆறடிப் பெருமையும் கொண்டது.

ஒவ்வொரு திணையினுள்ளும் நூறு நூறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மருதத்தை ஓரம்போகியாரும், நெய்தலை அம்மூவனாரும், குறிஞ்சியைக் கபிலரும், பாலையை ஓதலாந்தையாரும், முல்லையைப் பேயனாரும் பாடியுள்ளனர். நூலைப் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் தொகுத்துதவினர் என்பர்.

இன்று நாம், ஓதலாந்தையாரெனும் புலவர் பெருமான் யாத்த பாலைத்திணையுள் இடம் பெற்றிருப்பதாய ஒரு பாடல் குறித்துச் சிறிது சிந்திப்போம்.

தொடக்கத்தில், ஆழ்வார் பெருமக்கள் திருவாய் மலர்ந்தருளிய நாலாயிரத் திவ்விய பிரபந்தத்துள் வரும் பெரிய திருமொழிக்கண் உள்ள ஒரு சிறு செய்யுளைக் காண்போம்.

“கரையாய் காக்கைப் பிள்ளாய்

கருமாமுகில் போல் நிறத்தன்

உரையார் தொல்புகழ் உத்தமனைவரக்

கரையாய் காக்கைப் பிள்ளாய்!”

இங்கு, நாயக நாயகி பாவத்தில் நின்ற ஆழ்வார், தன் ஆருயிர்காந்தனாகிய, மாயனை, மன்னும் வட மதுரை மைந்தனை, தாயைக்குடர்விளக்கம் செய்த தாமோதரனை, வரும்படி கரையவேண்டும் என்று காகத்திடம் விண்ணப்பிக்கின்றார்.

காக்கை, நாம் அறிந்தவொரு பறவை, கருமகள் என்றும் வழங்குவோம். வடீகளில் காகம் கரையும் போது  விருந்து வரப்போகிறது என்று கூறப்படுவதையும கேட்டு இருக்கின்றோம். கவிஞர்கள், ஐந்தறிவுடைய காக்கை இடத்தே உள்ள அருங்குணங்களை, 'காலை எழுந்திருத்தல், காணாமலே புணர்தல், மாலை குளித்து மனைபுகுதல், உற்றாரோடு உண்ணல், உறவாடல்' முதலிய ஆறுகாப் பேசுவர். அவற்றை ஆறு அறிவுள்ள மனிதன் பயின்று கொள்ள வேண்டும் என்று கூறுவர். திருவள்ளுவப் பெருந்தகையும் காக்கை 'கரவாது உண்டலைக்' குறிப்பிடத் தவறவில்லை.

காக்கை கரையும்போது தத்தமது நிழரை அளந்து ஆரூடம் பார்ப்பவர்களும் நம்முள் இருக்கின்றார்கள். சுகம் லாபம், மழை, படை, அயனம், வெற்றி என்றெல்லாம் பயனும் கூறுவார்கள்.

இனி, ஐங்குறு நூற்றுப் பாடலுக்கு வருவோம்! நற்றாய் ஒருத்தி; ஆம் - 'ஆணெழில் அண்ணலோடு அருஞ்சுரம் போகிய மாணிழை மடவரல் தாய்' - தன் மகள் மீண்டுவரவேண்டும் என்று விழைகின்றாள். காகத்திற்குப் பராய்கடன் எடுக்கின்றாள். அதாவது தன்மகள் தன் கணவனோடும், மீண்டும் தன்மனைக்கே வரல் வேண்டும்; வந்தவழித் திருமணம் இயற்றி மகிழ வேண்டும் என்று எண்ணுகின்றாள். காக்கையாரிடம் நன்னிமித்தமாகக் கரையும் படியும் அவ்வாறு கரைந்தால் உரிய பலிக்கடன் தந்து மகிழ்விப்பேன் என்றும் குறிப்பிடுகிறாள்.

இப்போது செய்யுளின்  பொருளை நோக்குவோம். 'குற்றமற்ற சிறகினை உடைய காக்கையாரே! கருநிறக் காக்கையாரே! நமது பேரன்பு பொருந்திய சுற்றத்தாருடன், நிரம்ப உண்ணும்படி, பொன்னால் செய்யப்பட்ட கலத்திலே, பச்சை இறைச்சியை இட்டுகொழுப்புடன் சமைத்த உணவைத் தருவேன், இதற்குக் கைமாறாக நீ ஒன்று செய்தல் வேண்டும். அஃது என்னோ எனின், அழகிய கூந்தலை உடைய எனது மகளை, அவள் தேர்ந்தெடுத்த, வெற்றி மேம்பாடு உடைய, ஆடவருட்சிறந்த அந்த வேலேந்திய நம்பியுடன் மீண்டு, எம்மனைக்கே வரும்படி நீ கரைந்தருள வேண்டும்!!'

சரி பாடலைப் படிப்போம்.

மறு இல் தூவிச் சிறுகருங் காக்கை!

அன்புடை மரபின் நின்கிளையோ(டு) ஆரப்

பச்சூன் பெய்த பைநிணை வல்சி

பொலம்புனை கலத்தில் தருகுவன் மாதோ!

வெஞ்சி விறல் வேற் காளையொடு

அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமோ.

(மறு - குற்றம்; தூவி - சிறகு; ஆருதல் - உண்ணுதல்; பச்சூன் - பச்சை இறைச்சி; நிணம் - கொழுப்பு; வல்சி - உணவு; பொலங்கலம் - பொற்பாத்திரம்; ஓதி - கூந்தல்)

நரியார் வடை பெறுவதற்காக காக்கையாரைப் புகழ்ந்த கதை கேட்டதுண்டு. உடன்போக்குச் சென்ற தன் மகளை மீள வருவிப்பதற்காக இங்கே நற்றாயார், காக்கையாரை மறு இல் தூவிச் சிறு கருங்காக்கை என்று சிலாகித்துக் கூறுகின்றார். தொடர்ந்து கேவலம் காக்கைக்குத் தங்கக் கிண்ணத்தில் உணவு தரப்போகிறாராம். நிமித்த நூலார், காக்கை வீட்டில் இருந்து கரைந்தால் சென்றவர் செல்வத்துடன் மீண்டு வருவார் என்று பலன் கூறுவதும் உளங்கொளற பாலதாம்.

## சிலம்பு கழி நோன்பும் சீர்பெறு வதுவையும்

தலைப்பினைக் கண்ணுற்றதும், ஆச்சரியம் அடைவரீகள். அப்படி ஒன்றும் இல்லை; மணிவாசகப் பெருமான், அரச வண்டைப் பார்த்து ஒன்று கூறுகிறார் ஆம், 'தொன்மைக்கோலமே, நோக்கிக் குளிந்தூதாய் கோத்தும்பி' என்பது அது. நாமும் பழந்தமிழர்களால், அடிநாள் முதல்கைக் கொண்டு ஒழுகப்பட்டு மறைந்து போய்விட்ட, சிலம்புகழி நோன்பையும் சீர்பெறு வதுவையையும் குறித்துச் சிறிது தெரிந்து கொள்ளுவோம்.

சிலம்புகழிநோன்பு என்பது, திருமணம் ஆகாத மகளிர், திருமணத்தின் முன் இயற்றும் விசேட சடங்கு - விழாவாகும். பழந்தமிழ் மகளிர் திருமணம் காணும் வரை காலில் சிலம்பணிந்து இருந்தனர். சிலம்புக்கு, நெகிழம், பரிபுரம், நூபுரம் என்றெல்லாம் பல்வேறு பெயர்கள் உண்டு. திருமணம் நிகழ்தற்கு உறுதி செய்யப்பட்டதும் சிலநாள்களுக்கு முன்னரே, தாயார் வீட்டில் சிலம்பு கழி நோன்பு இயற்றப்படும். அதன்பின்னர் அவள் சிலம்பணியும் வழக்காறு இல்லை. இவர் திருமணமானவரா? அல்லது திருமணம் செய்யாதவரா? என்பதைத் துணிந்து கொள்வதற்கு ஏதுவாக இருந்தது இது.

பெரும்பதுமனார் சங்ககாலப் புலவர். அவர் சிலம்புகழி நோன்புடன் தொடர்புபட்ட இனிய காட்சி ஒன்றினை தருகிறார்; காண்போம்.

'கொடிய பாலைநிலத்து வழி. அங்கு வாகை மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. காற்று அடிக்கின்றது. வாகை நெத்துகள் ஒலியெழுப்புகின்றன. அயலில் மூங்கில் மரங்களும் கூட நிற்கின்றன. அவ்வழியே நம்பி ஒருவனும் நங்கை ஒருத்தியும் வந்து கொண்டு இருக்கின்றனர். நம்பியின் காலைக் கழல் அழகு செய்கின்றது.

கையில் விழிப்புடன் வில்லேந்தி நிற்கின்றான். நங்கையில் கையில் வளையல்கள் தெரிகின்றன. காலிலே சிலம்புகள் ஒலிக்கின்றன. பார்வைக்கு அவ்விருவரும் நற்குடியில் பிறந்தவர்கள் போலக் காட்சி அளிக்கின்றனர். எவ்வூரினர் என்பது தெரியவில்லை: யாவரது மக்களோ? என்று அறிய முடியவில்லை. நல்லாள் திருமணமாகாதவள் என்பதை அவள் அணிந்திருக்கும் சிலம்புகள் அறைகின்றன. நிச்சயமாக இரக்கப்பட வண்டியவர்கள். இன்னும் மணவினை நிறையவில்லை. இல்லவர் அறியாது இருவரும் காதல் வயப்பட்டு உடன்போக்கு நிகழ்த்துகின்றார்கள் போலும்' என்பது அது. (குறுந்தொகை)

முந்தையோர், தம்மகளிர்க்கு இளமைப் பருவத்தே சிலம்பு அணிவித்து மகிழ்வர். பின்னர் மணவினை வந்து அடுத்ததும் அதனை நீக்குவர்; கழற்றுவர். அது பெருவிழாவாக நடைபெறும். மைத்துனி ஒருத்தியே சிலம்புகழிக்கும் பணியை இயற்றுவாளாம். சிலம்பு அகற்றும் சடங்கின் போது உண்ணாநோன்பிருத்தலும் உண்டாம், பண்டையோர் இவ்வாறு ஒழுகினர்.

வதுவை என்பதை நோக்குவோம். நன் மணம் இயற்றுதலை வதுவை என வழங்குவர். திருமணவிழாவயர்தற்கு நிரைகால் பல நாட்டி, தண் பெரும் பந்தர் அமைப்பர்! பந்தருள்ளே பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்புவர்; விள்கேற்றுவர். பொழுது விடிந்ததும், சுபமுகூர்த்ததிலே முதிய மகளிர் நீரெடுத்துவருவர்; புதல்வரை ஈன்ற மங்கைநல்லார் நால்வர் மணமகளை நீராட்டுவர்; நீரொடு மலர் சொரிந்து வாழ்த்துவர்; பேரிற்கிழத்தியாகென ஆசி உரைப்பர்.

உழுந்துஇட்ட குழைதலை உடைய கும்மாயத்ததுடன் கூடிய பெருஞ் சோற்று அமலை யாவர்க்கும் வழங்கப்படும். இரு முது குரவர்களும் நீர்வார்த்துத் தம் மகளை தலைமகன் கையில் ஓம்படைப்பர். ஓம்படை, கையடை என்றும் வழங்கப்படும். அதாவது நீ, இவனை இன்னவாறு கொண்டாழுகுதி என்று புத்திமதி கூறிக் கையளித்தலாம். சிலப்பதிகார காலத்தில் இம்முறை சற்று மாறு 'மாமுது பார்ப்பான் மறை வழி காட்டத் தீவலஞ் செய்து' இயற்றும் மண முறை கால்கொள்ளத் தொடங்கிற்று என்பதும் நாம் உணரவேண்டும். சங்க இலக்கியங்களில் 'புலிப்பற்கோத்த புலம்பு மணித் தாலி' என்ற பிரயோகம் இருத்தலையும் காண்கின்றோம். இந்நாளில் தாலிபெண்ணுக்கு வேலி என்கிறார்கள். இனி ஐங்குறுநூற்றில் இருந்து ஒருபாடலை நோக்குவோம்.

'தலைவியைத் தலைவன் மருட்டித் தன்னோடு அழைத்துப்போயினன் என்ற செய்தியை ஈன்றவன் அறிந்தாள்; பெரிதும் வருந்தினாள். தலைவன் ஊரின்கண் இருந்து வந்தோர் சிலர், அவளிடம் சென்று, 'அன்னையே தலைவனுடைய தாய், நின்மகளைத் தன்மகனோடு பெரிதும் விரும்பி வரவேற்று, அவளுக்கு சிலம்புகழீஇ நோன்பு நிகழ்வித்து மகிழ்ந்தனர். யாம் அச்சடங்கு கண்டு வருகின்றோம்' என்று உணர்த்தினர். அது கேட்ட ஈன்றதாய் 'நீயிர் அங்குச் சென்று சிலம்பு கழிக்கும் விழாவை செய்தாளாயினும் ஆகுக! அடுத்து நின்ற வதுவைமணத்தையேனும் எம்மனைக்கண் செய்யத் தலைவன் தாயிடம் உடம்பாடுபெற்று வம்மின்' என வேண்டிக் கொள்கின்றாள்.

இனிப்பாடலைப் படிப்போம்

நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்

எம்மனை வதுவை நன்மணம் கழிகென

சொல்லின் எவனோ? மற்றே வென்வேல்

மையற விளங்கிய கழலடிப்

பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே. ஐங் - 366

(கழீஇ - கழித்து; அயர்தல் - விழாவெடுத்தல்; கையறவிளங்கிய - குற்றந்தீர்ந்து விளங்கிய; மறக்கழல் - வரீக்கழல்)

இங்கு பேரன்புடைய தாய், தன் அருமைத்திருக்குமரிக்கு, சிலம்பு கழிக்கும் நோன்மையும், மணவினையையும் தன் இல்லத்தில் வைத்து நிகழ்த்த விரும்பியிருந்தாள். சூழ்நிலை காரணமாகத் தம்மை அவர்கள் வஞ்சித்துச் சென்றுவிட்டனர் என எண்ணுகின்றாள். மருகன் மகளை மருட்டி அழைத்துச்சென்றமையை எண்ணிப் 'பொய்வல்காளை' என்கின்றாள். அதுமட்டுமல்ல 'அவன் வரீத்தை வெல்வேற் காளை என்றும், கழலடிக்காளை' என்றும் மறுபுறம் புகழவும் செய்கின்றாள்.

தருமவழி ஆட்சிக்குத் தடையாய் அமைவன

பழந்தமிழகத்தை, முடியுடை மூவேந்தர் ஆட்சிபுரிந்தனர் என்பதை அனைவரும் நன்கு அறிவோம். அவர்கள் வாடா வஞ்சியை, பீடார் உறந்தையை, மாட மதுரையைக் கோநகர்களாகக் கொண்டிருந்தனர். அம் மாமன்னர்களின் மாண்பையும், ஆட்சிச் சிறப்பையும், குடிகளை ஓம்பிய அருமைப் பாட்டையும், பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் பகர்ந்து நிற்றல் வரலாற்று உண்மையாகும்.

எட்டுத்தொகையுள் நான்காவதாகத் திகழும் நூல், பதிற்றுப் பத்தாகும். அது பத்துபத்தாக அமைந்துள்ள பத்துத் தொகுப்புகளை உள்ளடக்கி இருந்தது. மொத்தம் நூறு பாடல்களில் இடம்பெற்றிருந்தன. ஒவ்வோர் பத்தும் ஒவ்வோர் சேரமன்னர் குறித்து வெவ்வேறு புலவர் பெருமக்களால் பாடப்பட்டிருந்தன. முதற் பத்தும், பத்தாம் பத்தும் காலவெள்ளத்தில் மூழ்கிப்போயின.

எட்டுத்தொகையுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறத்திணையின் பாலனவாம். ஏனைய நற்றிணை முதலிய ஆறும் அகத்திணையின் பாலனவாம். புறத்திணை நாட்டாட்சி என்றும், அகத்திணை வீட்டாட்சி என்றும் தெரிந்திருக்கின்றோம்.

ஒவ்வொரு பத்தின் முன்னும் பதிகம் என்னும் உறுப்பு இடம் பெற்றிருக்கின்றது. அது பாடப்பெற்ற சேரவேந்தனின் மெய்க்கீர்த்தியையும், பாடிய புலவோர்களின்

பெயர்களையும் பாடிய பாட்டுக்களையும் பாடிப்பெற்ற பரிசில்களையும் கூறாநிற்கின்றது.

இன்று மூன்றாம்பத்தில் எமது கருத்தினைச் செலுத்துவோம். மூன்றாம்பத்தை பாலைக்கௌதமனார் பாடியிருக்கின்றார். இமயவரம்பன் தம்பி பல்யாகசாலைச் செல்கெழுகுட்டுவன் என்னும் சேரவேந்தன் மீது இது பாடப்பட்டிருக்கின்றது.

யாம், மூன்றாம்பத்தில் வரும் இரண்டாவது பாடலாகிய 'கயிறு குறு முகவை' யில் எமது கருத்தினைச் செலுத்துவோம். 'கயிறு குறு முகவை' என்றது பாடலில் வரும் ஒரு தொடர். அதாவது கொங்கநாட்டுக் கூவல்களின் - கிணறுகளின் - அயலே நீண்ட கயிற்றிற் கட்டப்பட்ட சிறிய முகவை - வாளி - கிடக்குமாம். நீர்வேட்கை - தாகம் மிக்க - பசுக்கூட்டம் அங்கு மொய்த்திருக்குமாம். நயம் மிக்க இத்தொடர் காரணமாக இப்பெயர் உண்டாயிற்று என்பர்.

இப்பாடலில் குட்டுவனின் முன்னோர், அறம் அறிந்து ஆட்சி செய்த சிறப்பு - அவனது படைப்பலம் - விஞ்சுதரு தோற்றம் - அகப்பா என்னும் பெரு நகரை அழித்த திறமை - பேராற்றல் - எத்தகைய பகைவருடனும் தொடுக்கும் போரை ஒரே நாளில் உச்சிப்பொழுதின் முன்னே முடிக்கும் வன்மை, பாழாக்கும் பான்மை முதலியன குறிப்பிடப்படுகின்றன.

குட்டுவனின் முன்னோர் தருமவழியில் அரசு செய்ததற்கு வேண்டிய உயிர்ப்பண்புகளை ஓம்பினார் என்பதை மட்டும் தெரிந்து கொள்வோம். அப்பகுதி வருமாறு:-

'சினனே காமம் கழி கண் ணோட்டம்

அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை

தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்(து)

அறம் தெரி திகிரிக்கு வழியடையாகும்.

தீது சேண் இகந்து நன்று மிகப் புரிந்து

........கானமும் பலபயம் உதவ

ஊழி உய்த்த உரவோர் உம்பல்

கண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல், அன்பு மிகவுடைமை, தெறல் கடுமை முதலலொடு செருக்கு, நன்மையில் நீங்கிய ஞானம் என்பன எல்லாம் நல்லாட்சிக்குத் தீது பயப்பன என்கிறார். அவற்றை நீக்கி, நற்கருமங்களை இயற்றி, ஒருவரை ஒருவர் வருத்தாது, பிறர் பொருள்களை விரும்பாது, நல்லறிவானே, நன்னெறிக் கண் ஒழுகி, வாழ்க்கைத்துணைவியைப் பிரியாமல், பிறர்க்குப் பகுந்தளித்து, தாமும் உண்டு, குடிமக்கள் நிறைந்த ஆயுளுடன் பிணியற்று நீடூழி

வாழ்ந்தனர் என்று குறிப்பிடுகின்றார். இன்று நாமும் உலகில் வாழ்வாங்கு வாழ இவை பெரிதும் உதவும் என்பது திண்ணம்.

நல்லாட்சிக்கன்றி, நமது இகவாழ்வுக்குமே இடையூறாக அமைந்த சினம் முதலிய இழிகுணங்களைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம்.

சினம் என்பது கோபம்; கோபம் மன்னவர்க்கன்றி மன்பதைக்குமே பாபம் விளைவிப்பது. வள்ளுவப் பெருந்தகையார், சினத்தினை நெருப்பு என்பர்; 'அது தன்னையன்றித் தனக்கு இனமானவர்களையும் அழிக்கும் திறம் கொண்டது. மன்னரும் மக்களும் கோபத்தை நீக்கிக்கொள்ள வேண்டும்.

காமம் இச்சையாகும். இங்கும் அளவிறந்த என்னும் பொருள் தரும் 'கழி' என்பதைக் கூட்டிக்கொள்ள வேண்டும். சச்சந்த மன்னன் கழிபெருங் காமத்தால் விஜையுடன் இல்லத்தே இருப்ப, அவன் அமைச்சன், கட்டியங்காரன் நாட்டினை அகப்படுத்திய செய்தியைச் சீவகசிந்தாமணி கூறும்.

கரிகண்ணோட்டம், அளவிறந்த உவகையாகும். மாணா உவகை என்றும் மொழிவர். திருவள்ளுவதேவரும் 'இவறலும் மாண்பிறந்தமானமும், மாணா உவகையும் மன்னர்க்கு ஏதம் தரும்' என்பர்.

அச்சம் அஞ்சுதலாகும். அனைத்து வாய்ப்புகள் அமைந்திருந்த போதும் அச்சம் உடைய மன்னனுக்கு அவ்வாய்ப்புப் பயன்படா அன்றோ! அச்சமுடையார்க்கு அரண் இல்லை. 'அஞ்சாமை அன்ன விழுப்பொருள் இல்லை' என்று தமிழ்மறை கூறுகின்றது.

பொய்ச்சொல், பொய் கூறுதல், அது ஒருவர் புகழைக் கெடுக்கும்; காரியத்தை அழிவு செய்யும். அரிச்சந்திரன் 'பதி இழந்தனம், பாலனை இழந்தனம், படைத்த நிதி இழந்தனம், வடுபேறுதான் எஞ்சி இருக்கின்றது. அதுவும் தான் இழக்க நேரினும் கூடப் பொய் சொல்ல மாட்டோம்' என்று கூறியமை உளங்கொளற்பாலதாம்.

அன்புமிக உடைமை, இதனை உலக வழக்கில் உலோபம் என்று கூறிவிடலாம். திருவள்ளுவதேவர் இதனைப் பற்றுள்ளம் என்பர்.

தெறல் என்பது தெறுதல் ஆகும். அஃதாவது தன் கீழ்வாழ்வார்க்கு மிகுதண்டம் விளைவிப்பதாகும். திருவள்ளுவர் வாய்மொழியில் கையிகந்ததண்டம் எனலாம். பிற என்றதனால் செருக்கு, நன்மை நீங்கிய ஞானம் முதலியனவும் கொள்ளப்படும்.

இவற்றை மண்ணாளும் மன்னர் அன்றி மக்களும் நீக்கி வாழ்வரேல் வாழ்வு இனிக்கும். இன்றைய குடியாட்சியில் மக்களின் தலைவர்களும் இந்த, அறம் தெரிதிகிரிக்கு இடையீடு விளைக்கும் தீமைகளைத் தம் ஆளுகையின் கீழ் உள்ள பிரதேசத்தில் இல்லை==========================(44)pdf

நீராட்டு விழாவின் சிறப்பு

வையைப் பேராற்றிலே நீராடுவோர் நீரினுள்ளே, செம்பொன்னால் ஆன நண்டு, இறால், வாளைமீன் முதலியவற்றைக் காணிக்கையாக இட்டு, 'நாடு விளைவதாக; உலகம் பொலிவதாக' என்று வாழ்த்துகின்றனர். இவ்வரி, எட்டுத்தொகையுள் ஒன்றாய பரிபாடற் கண்ணே - வையைப் பேராறு குறித்த பாடலில் வருகின்றது. (பரி.10) அதனைத் தமிழ்ச் சான்றோர், 'ஓங்கு பரிபாடல்' என்று சிறப்பிப்பர். பரிபாட்டு என்னூபாவினால் அமைந்தமையின் இப்பெயர் உண்டாயிற்று.

ஆசிரியர் தொல்காப்பியனார், நெடுவெண்பாட்டும், குறுவெண்பாட்டும், கைக்கிளையும், பரிபாடலும், அங்கதச் செய்யுளுமென இவை ஐந்தும் தம்மின் ஒத்து வெண்பா என்னும் உறுப்பினானே வரும் (தொல்.செய்118) என்றும், தொடர்ந்தும் பரிபாடல் வெண்பா உறுப்பாக இன்னபா என்பது உணராமல், பொதுப்பட நிற்றற்கும் உரித்து (தொல்.செய் 120) என்றும் கூறுவர்.

பரிபாடல் என்னும் தொகை நூலினுள், 70 பாடல்கள் இருந்தன என்பர். காலவெள்ளத்தில் அழிந்தனபோக, மிகுதியாக 22 பாடல்கள் கிடைத்துள்ளன. சிதைந்த சில பாடல்களும் உண்டு. திருமாலைப்பற்றி 6 பாடல்களும், செவ்வேளைப்பற்றி 8 பாடல்களும், வையை ஆற்றைப் பற்றி 8 பாடல்களும் நமக்கு இன்று கிடைத்துள்ளன.

ஆசிரியர் நல்லந்துவனார் முதலிய சான்றோர்கள் பலர் பாக்களைப் பாடியிருக்கின்றார்கள். மற்றும் இசை வகுத்தோர் உரிய யாழ் விவரம் முதலியனவும் தெரியவருகின்றன.

முந்தையோர், ஆற்றினைத் தெய்வமாகக் கண்டனர். செம்மேனி எம்மான் திருச்சடையிலே கங்கையை வைத்திருக்கின்றார். ஒரு சமயம் இராமபிரான் கங்கையில் நீராடினாராம். கங்காதேவி வெளிப்போந்து, 'ஐயனே உலகோர், என்னிடத்தே குளித்து நீராடித் தாம்தாம் செய்த பாவங்களைக் கழுவி விடுகின்றனர். இன்று நான் அப்பாபங்களை எல்லாம், நீ நீராடியமையால் நீங்கப்பெற்றேன். கழுவிக்கொண்டேன்' என்று மொழிந்த செய்தியை இராம காதை கூறுகின்றது.

திருநாவுக்கரசப் பெருந்தகையாரும், எங்கும் ஈசன் உளனென்று எண்ணி கங்கையிலும் காவேரியிலும் மாகடலிலும் நீராடிப் பயன்பெறலாம் என்கிறார்.

பழந்தமிழர் நாட்டில், ஆறு ஆடுதலும், கடலாடுதலும் பெருவிழாவாக நடத்தப்பட்ட செய்தியினை சங்க நூல்களும் சிலப்பதிகாரம் முதலிய காப்பிய நூல்களும் வெகுவிரிவாகக் கூறுகின்றன. இனி, பரிபாடல் பத்தாம் பாடலில் வரும் காட்சிகளில் ஒருசிலவற்றை மட்டும் காண்போம்.

தலைவி ஒருத்தி இருக்கின்றாள். அவளின் அருமைக் காதலன் வேந்தர்க்கு உற்றுழி உதவுவதற்காகப் போர்க்களம் சென்றிருக்கின்றான். பாசறையில் தங்கிய அவனிடம் தோழி, பாணன் ஒருவனைத் தூது விடுகிறாள். பாணன் அங்கு சென்று வையைப் பேராற்றில் புதுப்புனல் வந்தமையையும், அங்கு நிகழ்ந்த நீராட்டு விழாவினையும் பிற சிறப்புக்களையும் எடுத்துக் கூறுகின்றார்.

வையைப் பேராறு, உலகில் பசி முதலிய துன்பங்கள் நீங்கப் பெருகி ஓடா நிற்கின்றது. கரை காவலர் பறை முழக்குகின்றார்கள். புனலாட யாவரும் புறப்படுகின்றனர். மகளிர் பலவேறு அணி புனைந்து, நீர்வசீம் துருத்தி, சந்தனம் முதலிய பொருள்களைக் கொண்டு குதிரை மற்றும் எருது பூட்டிய வண்டி, கழுதை, சிவிகை முதலியவற்றில் ஏறிச் செல்கின்றனர்.

ஆற்றங்கரைக்கு வந்துவிட்டார்கள். ஆங்கு வந்தோர் எத்தகையவர்? கரும்பிள்ளைப் பூதனாரின் வாக்கினைக் கொண்டு அறிந்துக் கொள்வோம்.

முதியர் இளையர் முகைப்பருவத்தர்,

வதிமண வம்பலர் வாயவிழ்ந்(து) அன்னார்,

இருதிற மாந்தரும், இன்னினியோரும்

விரிவு நரையோரும் வெறு நரையோரும்

பதிவத மாதர் பரத்தையர் பாங்கர்.......... (பரி10)

என்று அடுக்கிக்கொண்டு போகிறார்.

அனைத்து மக்களும் வந்துவிட்டார்கள்.

ஆமாம். முகையனைய பருவத்தினரும், புதுமலர் போன்ற பருவத்தினரான இளமகளிரும், நரை விரவிய கூந்தலுடையோரும், முழு நரையுடைய முதுமகளிரும், பரத்தையரும், தோழியரும் வந்துள்ளார்கள்.

இங்ஙனம் வந்த மகளிரில் சிலர், நீரின் அழகை நயந்தனர். சிலர் நீரணிமாடத்தே ஏறினர். சிலர் ஆற்றிடைகுறையில் - அரங்கத்தில் - சென்று காதலரைத் தழுவினர். அதிசயம்! சிலர் தமக்குக் காவலாகப் பாட்டியரை அழைத்துவந்தனர். பாவம் அவரை விட்டுச் சென்று, வையைப் புனலை எதிர் கொண்டனராம்.

நீராடலின் கண் இளைத்த மகளிர் என்ன செய்கின்றனர்? அகிற் புகையாலே தம் உடம்பின் ஈரத்தைப் புலர்த்துகின்றனர். மார்பில் கலவைச் சாந்தை அப்புகின்றனர். சிலர், மாலையையும், சந்தனத்தையும், கத்தூரியையும், அணிகலங்களையும் நீரில் விட்டனர். ஏன்! மதுவினைக்கூட ஆற்றில் இட்டனராம். இவை வையைக்குக் கையுறைப் பொருள்களாம்.

மைந்தர் நிலையையும் சிறிது அறிவோம். வாழைத்தண்டைப் புணையாகக் கொண்டு தாவித் தாவித் திரிகின்றனர். சிலர் ஓடத்தில் ஏறி அதனை நீரோட்டத்துடன் செலுத்துகின்றனர். வேறு சிலர் நீரோட்டத்தை எதிர்த்தாடி இளைத்தனம். மற்றும் சில பெண்களைப் பாருங்கள்!

................மென்பாவையர்,

செய்தபூஞ் சிற்றடிசில் இட்டுண்ண ஏற்பார்,

இடுவார், மறுப்பார், சிறு(கு) இடையார்,

பந்தும் கழங்கும் பலகளவும் கொண்(டு) ஓடி.........

ஆம், மெல்லியலராகிய மகளிர் சிறு வீடு கட்டினர். சிறு சோறு ஆக்கினர். அவரிடம் வந்து சிலர் ஏற்பர். சிறுமியர் குறும்புக்காகத் தரமாட்டோம் என்று மறுப்பர். அதன் பொருட்டுச் சிலர் சிறுமியரின் பந்தையும் கழங்கையும் பிறவற்றையும் கவர்ந்து செல்வர். சிறுமியர் தேடிவர அவரிடம் அகப்படாமல் இருப்பதற்காகக் கடலுட்பாய்வார்.

நீர் விளையாட்டு நிறைந்ததும் மாலைக் காலம் வந்தது! தண்கதிர்ச் செல்வன் வானத்தே தோன்றினான். ஆற்றங்கரையை விட்டு மதுரை நகருக்குத் திரும்புகின்றனர். இன்ப மிகுதியால் பாடுவாரும், ஆடுவாரும் இரவுக்குரிய அணிகலங்களை அணிந்தவர்களுமாய் மீண்டனர்.

இவ்வாறு நீரணி விழாவானது தமிழ் மாந்தர் தம் தேசியத் திருவிழாவாக நடந்தது. பட்டினும், பருத்தியினும் நுண்ணிய ஆடைகளைக் கண்ட பண்டைத் தமிழர், நீராடக்கென்றே தனியான உடையை அணிந்திருந்தனர். பகலுக்கு என்று சில அணிகலன்கள், இரவுக்கென்று சில அணிகலன்கள் கொண்டிருந்தனர். இயற்கைவழி ஒழுகி இனிய இன்பம் கண்டனர்.

“செலவு ஒழிந்தனன் செறிக நின்வளையே”

இம்மகுட வாசகம், எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாய கலித்தொகைப் பாடல்க ஒன்றில் வந்துள்ளது. ‘காட்டைக் கடந்து பொருள் ஈட்டத் துணிந்த நம் தலைவர், தங்கருத்தைக் கைவிட்டுவிட்டார்; கவலை இனியில்லை; உடல் மெலிவால் கழன்ற கைவளைகள், இறுகச் செறியும் வண்ணம் உடல்பருக்க மகிழ்ச்சியில் திளைப்பாயாக’ என்னும் பொருளது அது.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக விளங்குவது கலித்தொகை. தமிழில் வழங்கும் வெண்பா முதலிய நால்வகைப்பாக்களுள் ஒன்றாய் கலிப்பாவினால் இயன்றது. அதனால், இப்பெயரை அது பெற்றுள்ளது. இது ‘கற்றறிந்தார் ஏத்தும் கலி’ என்று சான்றோரால் புகழப்படுகின்றது.

கடவுள் வாழ்த்து உட்பட நூற்று ஐம்பது பாடல்களைக் கொண்டது. பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் முதலிய பிரிவுகளை அடங்கியது. பாலை பாடிய பெருங்கடுங்கோ முதலியவர்களால் பாடப்பெற்றது. பல்வகை நயங்களும் நிறைந்தது! சொல்லோவியங்கள் செறிந்தது.

தமிழ் மாந்தராயினார், காதலித்தாரை மணந்து, புதல்வரை ஈன்று, நேரிய வழியில் பொருளீட்டி, அறநெறியில் செலவுசெய்து, இன்ப நலம் துய்த்த வாழ்வியல் வண்ணம் இங்கு இனிது செப்பப்படுகின்றது. ஆங்காங்கே குட்டி நாடகங்களாக அமைந்த கவிதைகளும் உண்டு.

முதலில் செய்யுளின் பொருட்சுருக்கத்தைக் காண்போம். "அன்னையே! யான் தலைவரைக் கண்டேன். கூறினேன். 'ஐயனே! உலர்ந்த கிளைகளை உடையவாகி, தேடி வந்தடைவார்க்கு, நிழல் தராமல், மரங்கள் வேருடன் அழிந்துபோகுமாறு கதிரவன் காய்கின்றான். அதனால் பட்ட மரங்கள் நிறைந்த பாலை வழிகளைக் கடந்து பொருள்தேடக் கருதுகின்றீரகளே! சற்றுக் கேளுங்கள். நம் தலைவி, மெல்லிய படுக்கையில், நின்னொடு துயில் செய்வாள் அன்றோ! அது போது நீவிர் சற்று நீங்கின், தனிமை உணர்வு தலைக்கொண்டு வருந்துவாள். அத்தகைய மெல்லியல்பு உடையாள், நின் பிரிவுக்கு ஆற்றாள் அன்றோ! பாவம் ! உள்ளம் உடைவாள். உறுப்புக்கள் ஒளியிழந்து விடுவாள் இறந்து போவாளும்கூட. என்செய்வேன்?' என்று இயம்பினேன். அவர் போக்கொழிந்தார். இனி உன் உடல் பருக்கும் நெகிழ்ந்த வளைகள் இறுகும்...."

இனி இங்கு குறித்த பாடலின் சில வரிகளைக் காண்போம்.

'வறியவன் இளமைபோல் வாடிய சினைவாய்ச்,

சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல் இன்றி,

யார் கண்ணும் இகழ்ந்து செய்து இசைகெட்டான் இறுதிபோல்

வேரொடு மரம்வெம்ப, விரிகதிர் தெறுதலின்

அலவுற்றுக் குடி கூற, ஆறின்றிப் பொருள் வெஃகிக்

கொலை அஞ்சா வினைவரால் கோல் கோடியவன் நிழல்

உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்......

நிலவுவேல் நெடுந்தகை, நீளிடைச்

செலவொழிந்தனனால் செறிகநின் வளையே.

பாலைக்கலி - 9

"சொல்லும் சொல் கேட்டீ சுடர் இழாய்"

கற்றறிந்தோர் ஏத்துங்க கலித்தொகையுள், இரண்டாம் பிரிவில் இடம்பெறுவது குறிஞ்சக்கலி, இஃது இருபத்தொன்பது பாடல்களால் அமைந்தது. இதனை 'வெறுத்தகேள்வி, விளங்கு புகழ்க் கபிலர்' என்று போற்றப்படும் சங்கப்புலவர் யாத்துதவினார்.

கபிலரைப்பற்றி, முன்பு அறிந்துள்ளோம். இவர் பழைய பாடல்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் முத்திறத் தொகைகளும் இடம்பெற்றுள்ளன. கபிலர் முத்தமிழ்த்துறையும் முறை கண்டுணர்ந்தவர். அதனை 'முத்தமிழ்க் கபிலர்' என்னும் தொடர் குறிக்கும்.

கபிலர் வேள் பாரியின் கெழுதகை நண்பர்; பாரியின் அவைக்களப் புலவர்; பரணர் என்னும் பழம்புலவருடன் நட்புரிமை கொண்டவர்.அதனால் 'கபிலபரணம்' என்றும் கூறப்பட்டவர்.

இவர் பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை, இலக்கியநயம் மிக்கவை. இயற்கை எழிலை இயைத்துக் கூறும் இவர் அமையம் வாய்க்கும் வழியெலாம் வாழ்வியலுக்கு வேண்டும விழுமியங்களைக் கூறாமற் கூறிச் செல்பவர். குறிஞ்சிக் கலியுள் வரும் ஒவ்வொரு பாடல்களும் செஞ்சொல் ஓவியங்களாகத் திகழ்கின்றன.

இன்று, குறிஞ்சிக் கலியுள் வரும் சொல்லோவியம் ஒன்றைக் காண்போம். அஃது 'ஒன்று இரப்பான் போல்' என்று தொடங்கி 'நெஞ்சே' என்று நிறைகின்றது. (11)

ஆம். ஆணெழில் அண்ணல் அவன் ஆயிழை ஒருத்தியைக் காதலித்தான். அவளும் காதலித்தாள். காலம் நீண்டது; கருமம் நிறைவெய்தவில்லை. காதலியன் ஆருயிர் தோழியின் உதவியை அவன் நாடினான்; அவளும் நிறைவேற்றி வைப்பதாக ஒப்புதல் அளித்தாள். தோழி தன் தலைவியிடம் வருகிறாள். இருவரிடையேயும் உரையாடல் தொடர்கிறது.

"அணிகலம் பூண்ட அரிவையே! வதியில் இளைஞன் ஒருவனைக் கண்டேன். ஏதோ ஒன்றை இரப்பான் போல் நிற்கின்றான். பணிவுடன் சில பகரத் தொடங்கினான். அம்மம்மா அவன் சாதாரண பேர்வழி அல்லன்; உலகைக் காக்கவல்ல மதுகை - வன்மை - உடையவன். கல்வி கேள்விகளில் வல்லாரை வழிபட்டு, உயர்ந்த உண்மைகளை அறிந்தான் போல் தோன்றுகின்றான். அடக்கம் மிக்கவன். பார்வைக்கு, வறியோரின் பசித் துன்பம்களையும் வள்ளல் போல் - ஈகைக் குணத்தால் மிக்கவன்போல் - தெரிகிறான். மிக்க பெரும் பொருளைத் திரட்டவல்ல வன்மையும் கொண்டவன். இறப்பவும் உயர்ந்த அவன் ஆண்தகை விட்டுச் சொல்லும் சொல் கேள்!"

“நறுநிதால்! அவன் நின்னை இன்றி உயிர்வாழ மாட்டானாம்; பாவம்! சாகத்துந்தான் போலும். அவன் சொல் நம்பற்கு உரியதா? யான் மனம் மாறினேன் பிறர்க்கும் இவ்வாறு ஆகுமோ!”

“அவன் பெரிதும் வருந்துகிறான். நீ அதனை அறிகிலை போலும். எம்போல்வாராலும் அவன் கூறும் சொல்லின், இயல்பை அறிந்து முடிவுகாண்டல் ஒல்லாதே! இயையாதே!”

“நீ தன்னைக் கைவிட்டால், வாழலேன் என்கின்றான் அயலான் ஒருவனுக்காக, நான் வருந்துகிறேன். ஊரார் என்னைப் பேதை என்னாரோ? ஆம் நாம் இருவோரும் கூடி ஆராய்வோம்.....”

“ஆமாம்; நாண்துறந்து, அவன்முன் சென்று ‘நில்லாதே போ’ என்று துரத்துவது நன்றன்றே! மேலும், ‘அயலான் ஒருவனை இவர்கள் ஏற்றுக் கொண்டனரே!’ என்று ஊரார் இழித்துக் கூறுவது எம் பெ தன்மைக்குப் பொருந்தாதே!”

தோழி, சுருதியை மாற்றுகிறாள்! “அவன் நம்மைக் கைப்பற்றத் துணிந்து விட்டான். நெஞ்சே! எம்பெருமாட்டி இதற்கு இசைந்திலள். நீ அவனிடம சென்று; நான் கூறுவது போல் குறிப்புக் காட்டி - ‘அவன் மேஎவழி மேவாய்’ - அவன் விரும்பும் இடத்திற்குச் செல்!” - என்று கூறியமைகின்றாள். இலக்கண நூலோர் இதனை இடம்பெற்றுத் தழாஅல் என்பர்.

இனி, பாடலின் சில வரிகளையாவது காண்போம்.

“ஒன்று இரப்பான்போல் எளி வந்ததும் சொல்லும், உலகம்

புரப்பான் போல்வதோர் மதுகையும உடையன;

வல்லாரை வழிபட்டு ஒன்று அறிந்தான் போல்

நல்லார்கண் தோன்றும் அடக்கமும் உடையன்;

இல்லோர் புன்கண் ஈகையில் தணிக்க

வல்லான் போல்வதோர் வன்மையும் உடையன்;

அன்னான் ஒருவன் தன் ஆண்தகை விட்டு என்னைச்

சொல்லும் சொல் கேட்டி சுடர்இழாய்!................................

.............................................................................................................. வாவெனக்

கூறுவேன போலக் காட்டி

மற்று அவன் மேஎவழி மேவாய் நெஞ்சே”                    (குறிஞ்சிக்கலி 11)

இனி, இப்பாடல் கொண்டு இற்றை நாளில் இளைஞர்கள் பால் நாம் வலியுறுத்தற் பாலதாம் விழுமியங்கள் எவை எனச் சிந்திப்போம்.

எவருக்கும் வலிமை என்பது வேண்டப்படுகின்றது. அவர்கள் கல்வி கேள்விகளில் மிக்காரிடம் சென்று, உர்ந்த உண்மைகளை அறிந்து கொளல் அவசியமாகின்றது. தன்னடக்கம் மிக மிக வேண்டப்படுகின்றுது. “காக்க பொருளா அடக்கத்தை - ஆக்கம் அதனின் ஊங்கு இல்லை உயிர்க்கு” என்பது வள்ளுவர் வாய்மொழி அன்றோ!

ஈகைக் குணத்தை இறுகப் பற்றுதல் வேண்டும். “வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை, மற்று எல்லாம் - குறியெதிர்ப்பை நீரது உடைத்து” என்பதைப் புரிந்துணர்தல் வேண்டும். குறியெதிர்ப்பை அளவு குறித்து வாங்குவது ஆண்டகைமை பேணுதல் வேண்டும். மகளிரும் நாண் எனும் நல்லணியைப் பணுதல் வேண்டும். “உயிரினும் சிறந்ததன்று நாணே! நாணினும் செயிர் தீர் கற்புச் சிறந்தன்று’ என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறுவர். (சிறந்தன்று - சிறந்தது)

அறத்தொடுபட்ட வாழ்வு வாழ்ந்து ஆரா இன்பம் துய்ப்போம்.

“நின்மெய் கண் குதிரையோ கவ்வியது?”

இன்று மருதக் கலியில் இருந்து ஒரு பாடலை எடுத்துக் கொள்வோம். மகுட வாசகம், இல்லத்தை விட்டுச் சென்று காலம் தாழ்த்தி வந்த கணவன், குதிரை ஏற்றம் பழகி வந்தேன் என்று பொய் புகன்றான். மனைவி குதிரைக்கும் பரத்தைக்கும் பொருந்தத்தக்க சொற்கள் கொண்டு உரையாடியபோது விடுத்த வினாவாகும் இது. ஊடல் என்பது காதல் காரணமாக நிகழும் பிணக்காகும்.

பொதுவாக குதிரையை நாம் அறிந்திருக்கின்றோம். வண்டி இழுக்கும் தொழிலை அது செய்கின்றது. பண்டை நாளில் நிலவிய நால்வகைப் படைகளுள் ஒன்றாகவும் திகழ்கின்றது. குதிரை ஏற்றம், யானை ஏற்றம் என்பன அரசகுமாரருக்கும் இளைஞர்களுக்கும் சிறந்த பொழுது போக்காகவும் அமைந்திருந்தது.

தேன் சொட்டும் திருவாசகத்தில் மணிவாசகப்பெருமான்-

‘மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த

தேவரும் காணாச் சிவபெருமான் - மாவேறி

வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க

மெய்யகத்தே இன்பம் மிகும்' என்று பாடுகின்றார். (மா - குதிரை) திருவிளையாடற் புராணம், சிவபிரான் இடது சாரி, வலதுசாரியாக மிக்க அருமைப்பாட்டுன் குதிரையை நடத்திக்காட்டிய காட்சியைக் குறிப்பிடுகின்றது. நிற்க.

இனி மருதக் கலிப்பாட்டலுக்கு வருவோம். இல்லின் ஒருபுறத்தில் கணவன் வந்து நிற்கின்றான். ஆடையின் மடிப்பு கலைந்து இருக்கின்றது. சந்தனப் பூச்சை வியர்வை சிதைத்திருக்கின்றது. தோள்மாலை குலைந்திருக்கின்றது. மனைவி 'அமையாப் பெருவலி உடையரீ! யாங்குச் சென்று ஈங்கு வந்துற்றீர்?' என்று சற்று உயர்ந்த தொனியில் வினவுகின்றாள்.

தலைவன் அடக்கமாக 'நிலமலர்க் கண்ணாய் குதிரை ஊர்ந்து வந்தேன்! அது தான் சற்று ..... தாழ்த்தி வந்தேன்' என்ற மொழிகின்றான்.

தலைவி, குதிரைக்கும் பரத்தைக்கும் பொருந்தும் வகையில் 'ஐயனே நீர் ஊர்ந்த குதிரை எது என்பதை நான் நன்கு அறிவேன்' என்கிறாள். பரத்தையின் அணியலங்காரங்களுடன் குதிரையின் அணியலங்காரங்களையும் இணைத்துப் பேசுகிறாள்.

ஆமாம் குதிரையிடத்தே, பிடமயிர், தலையாட்டம், கழுத்துவடம், கன்னச்சாமரை, சாட்டை, கடிவாளம், சதங்கை முதலியனவெல்லாம் இருப்பது சர்வசாதாரணம் தான்.

நீர் ஊர்ந்த பரத்தைக் குதிரையித்தே பின்னிக் கொள்வதற்காக வெட்டி விடப்பட்ட கூந்தல், சிவந்த குஞ்சி, கட்டுவடம், காதில் புல்லிகை, தொங்கும் சுட்டி, மேலாடை, மேகலை, சிலம்பு முதலியனவெல்லாம் உண்டுதானே! (புல்லிகை - ஒருவகை அணி)

'அந்தப் பரத்தைக் குதிரை மிசைத்தான் ஊர்ந்தீர், தளர்ந்து விட்டீர்! பாவம்! நல்ல குதிரைச் சேவகன்!' என்றெல்லாம் பரிகசிக்கிறாள்.

'ஐயனே, அந்தக் குதிரை உன் உடலில் கீறிவிட்டது. கூரிய குளம்பையுடைய அக்குதிரை கொடிது! கொடிது!! அதை ஊர்ந்த வாதுவ! வாழி.' என்றும் கூறுகிறாள்.

'உடலில் வண்ணம் தீட்டியாது போலத் தெரிகிறதே! கவ்வியது அந்தக் குதிரைதானோ? சீ! அச்சமின்றிக் கடித்த அக்குதிரை கொடிய நஞ்சு அல்லவோ?' என்று தொடர்கிறாள். அதனை மட்டும் சிறிது செய்யும் வடிவில் காண்போம். முதலில் பொருளை உரைநடையில் பார்ப்போம்.

நீர் ஊர்ந்த குதிரை எது என்பதை அறிந்து கொண்டேன். நன்று. அது முறையாக மணம் செய்து அறவழியில் வந்த குதிரை அல்ல. பாண தூது போக ஒரு வகையில் வந்த பரத்தை என்னும் பழிமிக்க குதிரை. நிச்சயம் அது உன் உருவை அழிக்கும். அக்குதிரையில் சவாரி செய்யாதே! இல்லை இல்லை அப்படி ஊர்ந்து செல்லவிரும்பினால் இப்பொழுதே செல்! செல்! என்று பிணங்கினாள். இனி பாடலின் ஒரு பகுதியை மட்டும் காண்போம்.

‘ஏந்து எழில் மார்ப எதிர் அல்ல நின்வாய்ச் சொல்

.....................................................................................

மிகநன்று; இனி அறிந்தேன் இன்று நீ ஊர்ந்த குதிரை,

பெருமணம் பண்ணி அறத்தினிற் கொண்ட

பருமக் குதிரையோ! அன்று பெரும்! நின்

ஏதில் பெரும் பாணன் தூது ஆட ஆங்கேயோர்

வாதத்தான் வந்த வரிக்குதிரை; ஆதி

உரு அழிக்கும்; அக்குதிரை ஊரல்; நீ ஊரின் பரத்தை

பரியாக வாதுவனாய் என்றும் மற்று அச்சார்த்

திரிகுதிரை ஏறிய செல்’ (மருதக்கவி 31)

பழந்தமிழர் தமது புதல்வியரைப் பல்வகையான அணிகலங்களைக் கொண்டு அழகுப்படுத்தி வாழ்ந்தனர். அகதன்றி வளரப்புப் பிராணிகளையும் அழகுபடுத்தி, ஆரா இன்பம் துயர்த்தனர்.

திருமணம் இயற்றி வாழ்வத, அறத்தொடு கூடிய வாழ்வென எண்ணினர். ஒழுக்கம் பிறழ்ந்த கணவர்களை தெண்டாடியர் இடித்திடித்துரைத்து அறவழி நிற்க வைத்தனர் என்றெல்லாம் அறிந்து கொள்ள இயல்கிறது.

மருதக்கலி தந்த மருதன் இளநாகனாரை வாழ்த்தி ஏத்துவோம்.

கொல்லேறு கொண்டான்!

“அந்தணர் அருமறை திருமணங்களை எட்டென்று எடுத்தியம்பும், அவை, ‘அறநிலை, ஒப்பே, பொருள்கோள், தெய்வம், யாழோர் கூட்டம், அரும்பொருள் வினையே, இராக்கதம் பேய் நிலை....... ” என வரும் நூற்பாவான் அறியப்படும். அறநிலை முதலிவயற்றை, பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்றும் கூறுவர்.

அசுரம் என்பது, ‘கொல்லேறு கொண்டான் இவளை எய்தும்,’ ‘வில்லோற்றினான் இவளை எய்தும்’ என விதித்து, அவற்றை நிறைவேற்றியோர்க்கு மகட்கொடை செய்வதாகும். இடைக்குலத்து இளைஞர் கொழுத்துத் திரண்ட, கூர்ங்கொம்பு

கொண்ட எருதி மடக்கிப் பிடித்து ஊர்ந்து தாம் விழைந்த மகளிரை மாலையிட்டு மகிழ்வர்.

இந்நிகழ்ச்சியை முல்லைக்கலியுள் காண முடிகிறது. காடுங்காடு சார்ந்த நிலமும் முல்லை எனப்படும். அந்நிலத்து மக்கள், ஆயர் இடையர், பொதுவர், கோவலர் என்றெல்லாம் அழைக்கப்படுவர்.

முல்லை நிலத்தே, வரகு, கம்பு, பால், நெய் முதலியன நிரம்ப நிரம்பக் கிடைக்கும். மேட்டு நிலத்தை உழுது பயிரிடல், ஆடு மாடு மேய்த்தல், பால், மோர், தயிர் விற்றல் முதலிய தொழில்கள் புரிவர். ஆய்ச்சியர் கொல்லோறு தழுவிய கொழுநரை மணம் புரிந்து மகிழ்வர். (கொல் ஏறு - கொலைத் தொழில் வல்ல எருது, தழுவுதல் - அதனை மடக்கி ஏறி ஊர்தல்). முல்லைக் கலிதந்த சோழன் நல்லுருத்தீரனார் பாடலொன்றில் இருந்து கொல்லேறும் தழுவும் காட்சியைக் காண்போம். ((முல்லைக்கலி 3)

பொதுவர் கன்னி ஒருத்தி, காதல் கொணடவன் கடுக வந்து மணம் கண்டிலன் எனக் கலங்குகின்றாள். தோழி ஊரில் நடந்த ஏறு தழுவுதல் காட்சியைக் காட்டிவிட்டு, ஆயர்கள் குரவைக் கூத்தாடுகின்றனர். அது காண வந்திருக்கும் காதலனுக்கு அறிவு வரும்படி செய்ய நாமும் அக்கூத்தில் கலந்து பாடுவோம்; வருகுதி என்கின்றாள். (குரவை - எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடும் கூத்து; விநோதக் கூத்து ஆறினுள் ஒன்று)

இனி விடயத்துக்கு வருவோம். ஆயர் மகளிர் அனைவரும் புறப்படுகின்றார்கள். கொன்றை காயா, வெட்சி, பாடவு, குருந்து, காந்தள் என்றென்று இன்ன பண்மலர்கள் கொண்டு தொடுத்த கண்ணிகளைச் சூடி இருக்கின்றார்கள். முல்லை அரும்பன்ன பற்கள் பளிச்சிடுகின்றன. சொற்களில் நாணம் பயில்கின்றது. கண்களில் அருள்பிலிற்றுகின்றது. எல்லோரும் களத்தின் புறத்தே உள்ள பரண்களில் அமர்ந்து கொள்கின்றார்கள்.

கொல்லேறு தழுவுற்களத்தில் காளைகள் கட்டவிழ்க்கப்பட்டுத் திரிகின்றன. வெண்காற் காவி; புள்ளி வெள்ளை; அணி கோட்டுச் சேய் வலிய ஏறு .... இவ்வாறு பல எருதுகள் திரிகின்றன. அவ்விடம் சிங்கமும் குதிரையும் களிறும் முதலையும் கலந்து போரிடும் மலைச்சாரல் போன்று காட்சியளிக்கின்றது.

அங்கு ஆயர்குலச் சிறுவர்கள் நிற்கின்றார்கள். அவர்களைத் தேடித்தேடிச் சென்று காளைகள் குத்துகின்றன. எருதுகளின் இரத்தம் தோய்ந்த கொம்புகளில், கணிச்சிப் படைக் கடவுள் - சிவன் - சூடிய இளம்பிறையில் மாலை போலக் குடர்கள் கிடக்கின்றன. பரணில் வீற்றிருக்கும் ஆயர் குல மகளிர் இடையே உரையாடல் தொடர்கின்றது. இளைஞர்கள் எருதுகளை அடக்கத் தொடங்கி விட்டார்கள்.

'தோழி, இதோ இவனைப்பார்; காளையின் கழுத்தில் பாய்ந்து அதற்குச் சூட்டிய மாலைபோலத் தழுவிக் கொண்டு விடாமல் பிடித்திருக்கும் இவன் ஆயர்மகன்தானே!'

‘மேலும் பார் ஒருவன் காளைமேல் அமர்ந்து ஆடி மகிழ்ந்து நீர்த்துறையில் தெப்பத்தில் அமர்ந்து அதைச் செலுத்திச் செல்பவன்போல எருதை விடாமல் ஊர்ந்து செல்கிறானே. இவன் ஆயர் மகன்தானே?’

பார் பார்! காற்றுப்போலக் கடுகி வந்த கரிய எருதை அதன் ஆற்றல் கெட அதனைத் தழுவிக்கொண்டு அமர்ந்து தோன்றும் இவனைப் பார். காலனைக் காலால் செற்ற சிவனார் போலத் தோன்றுகின்றான். ஐயோ! என் நெஞ்சு நடுங்குகின்றதே!’. மேலும் இவ்வாறு பலப்பல சொல்லி ஏங்குகின்றாள்.

தொடர்கிறது .....

புலியும் யானையும் போரிட்டாங்கு எருதுகளும் எருது நிகர் பொதுவர்களும் போரிட்டு ஓய்ந்தனர். தாந்தாம தழுவிய ஏறுகளைக் கைகொண்டு ஆயர்கள் வெளியேறினர். காட்சி நிறைந்தது.

ஆயர்குல ஆடவரும் மகளிரும் மன்றில் குரவையாடி மகிழத் தொடங்கினர்; பாடுகின்றனர்.

நாமும் பாடுவோம்.

..........................................................................................................

கொல்ஏற்றுக் கோடஞ்சுவானை, மறுமையும்

புல்லாளே ஆய மகள்.

அஞ்சார் கொலையேறு; கொள்பவர் அல்லதை

நெஞ்சிலார் தோய்தற் கரிய உயிர்துறந்து

நைவாரா? ஆய மகன் தோள்

வளிஅறியா, உயிர் காவல் கொண்டு

நரிவாலைப் மருப்பஞ்சம் நெஞ்சினார், தோய்தற்கு

எளியவோ ஆயமகள் தோள்.

விலைவேண்டார் எம்மினத் தாயார் மகளிர்

கொஏற்றுக் கோடிடைத் தாம் வழீவார் - மார்பின்

முலையிடைப் போலப் புகின்.

(புல்லுதல் - தழுவுதல்; கோடு - கொம்பு; நைதல் - வருந்துதல்; மருப்பு - கொம்பு; விலை - பரியப் பொருள்; வழீதல் - விரும்புதல்)

கொல்லோற்றினை கொம்புக்கு அஞ்சுவோனை, ஆயர்மகள் மணந்து கொள்ளார்; கொல்லேற்றை அடக்கிக்கொள்பவரல்லது, உள்ளத்தில் உரம் இல்லாதவர்க்கு ஆயர்மகள் தோள் அணைதர்ல இயலாதாம். உயிரைக் காற்று என்று கருதாது, கேவலம் அரிய பொருள் என்று எண்ணி கொல்லேற்றின் கொம்புகாண அஞ்சுவார்க்கு ஆயர் மகள் தோளைத் தழுவுதல் எளிது அன்று! எருதின் கொம்பிடையே புகுந்து பாய வல்லவர் இடத்தில் ஆயர்கள் பெண்வீட்டாரிடம் பரிசுப் பொருள் கூடக் கேக்க மாட்டாரா என்றெல்லாம் அவர்களின் மறக்கும் மாண்பினை குரவையுட் கூறி மகிழ்ந்தனர்.

நிறைவில் தெய்வத்தைப் பரவி - வழிபட்டு - மண்ணாளும் மன்னனை வாழ்த்தி நிறைவு செய்தனர்.

“சென்றனை துயரம் களைந்திடல் வேண்டும்”

இன்று, ‘கற்றோர் ஏத்தும் கலித்தொகை’யுள், நெய்தல் திணையில் வரும் ஒருபாடலை நோக்குவோம். கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் எனப்ழுடும். அந்நிலத்து மக்கள் பரதவர், கானவர் முதலிய பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுவர். தலைவன், சேர்ப்பன், கொண்கன், துறைவன் என்றெல்லாம் சொல்லப்படுவன். மீனையும் உப்பையும் விற்றுப்பொருள் கூட்டுபவர். மகளிர் கணவர் வரவு பார்த்து இரங்கி நிற்பர்.

நெய்தற் கலியைப் பாடியவர், நல்லந்துவனார் என்னும் தொல்தமிழ்ப்புலவர். இவரது இயற்பெயர் அந்துவன் என்ன அறிய வருகின்றது. கல்வி அறிவொழுக்கங்களில் சிறந்து விளங்கிய இவர் நல்லந்துவனார் என்று அடைதந்து அழைக்கப்பட்டார். மதுரையைச் சேர்ந்த இப்பெரியார், புலவர் பாடும் புகழ் அமைந்தவர். செய்யுளை நடத்திச் செல்லும்போது, கதை மாந்தர் மூலம், மக்கள் வாழ்விற்கு இன்றியமையாத விழுமியங்களை வித்திச்செல்லும் மிக்க பெருமை உடையவர்; ஆன்மநேயம் கொண்டவர்.

“மாமலர் .......தேதே” என வரும் பாடலை எடுத்துக் கொள்ளுவோம். (நெய்தற்கலி 16)

இளைஞன் ஒருவன் மங்கை நல்லாள் ஒருத்தியைக் காதலித்தான்; கைவிட்டுத்திரிகின்றான்; மங்கை நல்லாளின் ஆருயிர்த்தோழி, அவனைச் சந்தித்து அறிவு கூறித் திருமணத்துக்கு இயைவித்ததாகச் செய்யுள் நடக்கின்றது!

செய்யுளின் பொருளைக் காண்போம். நல்லாதனார், வாசகர்களை, கடற்கரைக்கு அழைத்துச் செல்கிறார். அங்கு கழி புள்ளிகளைக் காண்கின்றோம். அயலில்

தில்லை மரங்களும் கூட நிற்கின்றன. மணல்மேடு தெரிகின்றது. தாழைமரம் தோன்றுகின்றது. பழமும் தொங்குகின்றது. அம்மரம் தென்முகத் தெய்வம் தட்சணாமூர்த்தி வறீறிருந்தருளும் கல்லால மரம்போல இது விளங்குகின்றது. தொங்கும்பழம் கமண்டலம் போல் தெரிகின்றது. மலர்ந்திருக்கும் பூக்கள் காணப்படுகின்றன. 'ஓடு மீனோடி உறுமீன் வரும் வரை' வாடி இருக்கும் வெண்ணிற நாரைகளும் தங்கி இருக்கின்றன. இத்தகுதுறைக்கு உரிமை பூண்டவன் தலைவன். அவன் அங்கு நிற்கின்றான். தோழி அவனை அழைக்கின்றாள். அவனுடன் உரையாடுகின்றாள்.

இல்லறம் இயற்றுதல், வெறும் இன்பநுகர்ச்சிக்காக மட்டும் அன்று. ஆம் அலந்தவர்க்கு - வறியவர்க்கு - உதவுதற்குமாகும். அங்கு போற்றப்பட வேண்டியது தாங்கூடினாரைப் பிரியாது இருத்தலாகும். இல்லறத்தின் பண்பு பாடறிந்து ஒழுகுதலாகும். அஃதாவது உலகியலை அறிந்து ஒழுகுதலாகும். அன்பு என்று பேசுகின்றோமே அது தொடர்புடையார் மாட்டுத்தோன்றும் கருணைமட்டுமல்ல. தன் சுற்றத்தாரைக் கெடுக்காது வதிதலாகும். அறிவு என்பது என்ன? மெய்ப்பொருள் காண்பது மட்டுமல்ல, அறிவற்றோர் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதுல் - சகித்துக் கொள்ளுதல் - ஆகும். செறிவு என்கிறார்களே! இறுக்கம் என்போம், அது என்ன, உறவினர் கூறியவற்றை மறவாது இருத்தலாகும். இனி, நிறையெனப்படுவது மறைத்துக்காக்க வேண்டிய ஒன்றைப் பிறர் அறியாதபடி காத்தலாகும். முறை என்பது, நம்மபவர் என்று இரக்கம் காட்டாது குற்றத்திற்குத்தக்க தண்டம் அளித்தலாகும். இறுதியாகப் பொறை என்பதை நோக்குவோம். அது தான் பகைவரை அழிக்கும் காலம் வரும்வரை பொறுத்திருத்தலாகும்.

ஐயனே! இவ்வ்று கூறியவற்றை அறிந்து வாழ வேண்டுமேல் ஒன்று கூறுகின்றேன். பாலைப்பருகிவிட்டு, பாத்திரத்தைக் கைவிட்டது போலாகாது, நின்னால் வருந்தும் அவள் துயரை - தலைவி துயரை - விரைந்து துடைப்பீராகுக! அதன் பொருட்டு தேரை ஊர்ந்து செல்வரீ! என்று பாடல் நிறைகின்றது! குறித்தபாடலின் சில பகுதிகளை மட்டும் படித்துப்பாருங்கள்!

"மாமலர் முண்டகம் தில்லையோடு ஒருங்குடன்

...................................................... துறைவகேள்!

ஆற்றுதல் என்பது, ஒன்று அலந்தவர்க்கு உதவுவதல்;

போற்றுதல் என்பது, புணர்ந்தாரைப் பிரியாமை;

பண்பு எனப்படுவது, பாடறிந்தொழுகுதல்

அன்பு எனப்படுவது, தன்கிளை செறாஅமை;

அறிவு எனப்படுவது , பேதையார் சொல்நோன்றல்;

செறிவு எனப்படுவது கூறியது மறாமை

நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை

முறை எனப்படுவது கண் ஓடாது உயிர் வௌவல்

பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் .

............................................................................................................................. (நெய்தல் 16)

நல்லந்துவனார் ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை என்று அட்டவணையிட்ட ஒன்பான் அருங்குணங்களையும் காட்டுகின்றார். திருவள்ளுவளதேவரும், ஆங்காங்கு இவற்றைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றை எடுத்துக் காட்டின் கட்டுரை விரிந்து செல்லும். நிற்க.

நாமெல்லாம் அறத்தாற்றில் நின்று அலந்தார்க்கு - வறியார்க்கு - ஈதலாகி அருங்குகணங்களைப் பேணி நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்போமோக.

மடவரீ நும்வாய்ப் பொய்யும் உளவோ?

இன்று தொகைநூல் எட்டினுள், ஏழாவதாக விளங்கும் அகநானூறில் எமது சிந்தையைச் செலுத்துவோம். அகநானூறு அகத்திணை பற்றியது; நானூறு பாடல்களான் இயன்றது. நெடுந்தொகை எனவும் வழங்கும். பாடல்களை களிற்றியானை நிரை (1-120), மணிமிடைபவளம் (127 - 300), நித்திலக்கோவை (301 - 400) எனப் பகுத்துள்ளனர்.

இந்நூல், தமிழ் மக்களின் இயல்பு, வழக்கு, நாகரிகம், மனமுறை முதலியவற்றை விளக்குவதுடன், மன்னவர் கொடை, வரீம், நீதி, இயற்கை எழில் முதலியவற்றையும் இனிது எடுத்து இயம்பும். இனி விடயத்துக்கு வருவோம்.

களிற்றியானை நிரையுள் குறிஞ்சித்திணை தொடர்பான ஒரு செய்யுள். அது ‘அன்னாய்..... வல்லோர்க்கே’ (48 அகம்) என்பது.

‘மலைச்சாரலில், மலிபூஞ்சோலையில், இளைஞன் ஒருவன் ஊசி நூல் கொண்டு கோத்தமைந்த செங்கழுநீர் மலர் மாலையை அணிந்துள்ளான். பக்கம் சேர்த்திய வெட்சியாலாய கண்ணியன்; ஆகம் முழுதும் செஞ்சாந்து பூசியுள்ளான். அவனிடத்து வாரிந்து கட்டப்பட்ட வில் காணப்படுகின்றது. பகழி ஒன்றைக் கையில் பிடித்துள்ளான்.

'புலி, புலி' என்று எழுந்த சத்தம், அவன் காதில் விழுகின்றது. சத்தம் வருகின்ற திசையை நோக்கி நடக்கின்றான். ஆம் வந்து விட்டான். அங்கு புலியைக் காணவில்லை. சிறுமியர், ஒருவர் பின் ஒருவர் ஓடி மறைகின்றார்கள். தாரகை நடுவண் தண்மதி போல் விளங்கும் நங்கை ஒருத்தி நாணிக் குனிந்து நிற்கின்றாள். உரையாடல் தொடங்குகின்றது.

'ஐவகை முடித்த கூந்தலினையும், அழகிய நெற்றியினையும், உடையீர் எங்கே புலி, அது சென்ற தன்மை ஏது? என வினவுகின்றான். விடை கிடைக்கவில்லை. அவன் துணிச்சலுடன் 'நும்வாயிடத்துப் பொய்யும் உளவோ?' என்கின்றான். மையுண்ட கண்மாதொருத்தியை நோக்குகின்றான். அவ்விடத்தை விட்டுச் சற்று அகல்கின்றான். தேரில் ஏறுகின்றான். தேர் மந்த கதியில் செல்கின்றது. தண்மதி என நின்ற தையல் தனது உயிர்த்தோழியை நோக்குகின்றாள். 'இவன் மகன்தானே?' என்று கூறி அமைகின்றாள். காதல் அரும்பி மலர்ந்துவிட்டது. காலம் உருண்டு சென்றது.

தலைவி, வீட்டினுள் முடங்கிக்கிடக்கிறாள் பாலும் உண்ணாள்; பழங்கண்(துன்பம்) உற்று நிறமும் மாறிக் காட்சியளிக்கின்றாள். அருமைத்தோழியைக் கண்டு தன்மகளின் மாற்றத்துக்கு காரணம கேட்கின்றாள். தோழி முன்பு நடந்த செய்தியைக் கூறுகின்றாள். (மாலை, கண்ணி என்பன மாலை விசேடங்கள்)

.................................................................................... மேல்நாள்,

மலிபூஞ் சாரல்என் தோழி மாரோடு

ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி

புலிபுலி என்னும் பூசல் தோன்ற

ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்

ஊசிபோகிய சூழ்செய் மாலையன்

பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்

குயம்மண்டு ஆகம் செஞ்சாந்து நீவி

வரிபுனை வில்லன் ஒரு கணை தெரிந்துகொண்டு

யாதோ மற்றுஅம் மாதிறம் படரென

வினவி நிற்றந்தோனே அவற்கண்டு

எம்முள் எம்முள் மெய்மறைபு ஒடுங்கி

நாணி நின்றனம் ஆக, பேணி

ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்

மையீரோதி மடவரீ நும்வாய்ப்

பொய்யும் உளவோ என்றனன்.

அவன் மறைதேஎம் நோக்கிமற்றுஇவன்

'மகனே தோழி' என்றனள்..............

அதன் அளவு உண்டுகோள் மதிவல்லோர்க்கே' -தங்கால்முடக் கொற்றனர்.

இது செவிலித்தாய்க்குத் தோழி அறத்தொடு நின்றது என்னும் துறையின் பாலதாம்.

அறத்தொடு நிற்றல் என்பது களவொழுக்கத்தை, முறையே வெளிப்படுத்தி நிற்றல் என்னும் பொருளதாம். தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தை, அண்ணன்மார் முதலாயவர்களுக்கும் வெளிப்படுத்தி நிற்பர்.

பண்டைத்தமிழர் தம் புதல்வியர் பேதைப் பருவம் நீங்கிய பின்னர் அவர்களை 'மேதையங்குறு மகள்' என அழைத்தனர். அதாவது அறிவு சான்ற சிறுமியராகவே கண்டனர். ஆசிரியர் தொல்காப்பியர் அம் மகளிர் பால்,

'செறிவும், நிறைவும், செம்மையும் செப்பும்

அறிவும் அருமையும்..................................'

அமைந்து கிடந்தன என்பர். (தொல் 1155)

(செறிவு - அடக்கம்; நிறைவு - மன அமைதி; செம்மை - நேர்மை; செப்பு - தகுவன கூறுதல்; அறிவு - இயற்கை அறிவு; அருமை - அருமைப்பாடு)

இத்தகைய உயர் பண்பினர் இடம் பொய்கூறுவதற்கு வேண்டாவாம். வேங்கைப் பூவினைப் பறிக்கும் வழி, 'புலி புலி' என்று கூறின் கிளைகள் சரிந்து கொடுக்கும் என்பது பண்டையோர் சம்பிரதாயம். இவ்வளவு சீர்மையுடையாரிடத்தே பொய் வரமாட்டாதன்றோ?

'இவன் மகனே' என்பதை நோக்குவோம். மகன் என்றது ஆடவனை. பண்டையோர் ஆடவர்களுக்கு அருங்குணங்களாக, அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பவற்றைக் கூறுவர். குன்றநாடன், ஆடவர் திலகன் ஆனமையால், தன் நெஞ்சுள் புகுந்த அவன் தன்னைக் கைவிட மாட்டான் என்பதனால் 'மகனே' எனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறினள் என்று கொள்ளவும் இடமுண்டு. நாம் உயரிய பெண்மைக்குணங்களையும் ஆண்மைக்குணங்களையும் பேணி இன்பம் காண்போம்.

‘தாம் தம் செய்வினை முடிக்குக!’

தலைவன் பிரிவால் நலிவுற்ற தலைவி, தோழியை அழைக்கின்றாள். ‘தோழி! நாம் அவர் பிரிவால் பெரிதும் வருந்துகின்றோம். ஆயினும் அவர் கருதிய பொளீட்டும் செயல் இனிது நிறைவெய்த வேண்டும்’ என்று மொழிகின்றாள். இது மகுடவாக்கியத்தின் பொருளாகும். (அகம் 155) பாடல் அறன் கடை என்று தொடங்கி மலை இறந்தோரே என்று நிறைகின்றது. (இறத்தல் - கடத்தல்) அகநானூற்று மணிமிடை பவளத்து வருகின்றது.

நாம் தெரிவுசெய்த பாடலை இயற்றிய பழம்பெரும் புலவர், பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆவர். அவரைப் பற்றி முன்பு தெரிந்திருக்கின்றோம். அவர் சேரநாட்டு வேந்தருள் ஒருவர். புலமை நலம் கனிந்த சால்பினர். பெருங்கடுங்கோ என்பது இவரின் இயற்பெயர். பாலைத்திணைப் பாடல்களை பொருணயம், சொன்னயம் விஞ்சப்பாடுதலால் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்று பேசப்படுகின்றார். அகநானூறு தவிர்ந்த பிறதொகை நூல்களிலும் இவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாடலுக்குரிய திணை - பாலை; துறை - தலைமகன், பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் சொல்லியது என்பதாம்.

குறித்த பாடலின் திரண்ட பொருளை நோக்குவோம். “தோழீ! நம் தலைவர் புனைந்தியற்றப்பட்ட அணிகலங்களை உடையாய் கேள்; அறங்கடைப்படா வாழ்க்கையும் பிறன் கடைச் சென்று ‘ஈது இடுக’ என்று இரவாநிலையும் நமக்கு வாழ்வியலுக்கு இன்றியமையாதன. இவற்றைத் தரவல்லது பொருள் ஒன்றே! என்றெல்லாம் மொழிந்தார்”,

“தாம் எம்மை நீத்து, நெடுந்தொலைவு தூரம் சென்று பொருள் தேடும் முயற்சிக்கு எமது ஒப்புதலைப் பெற ஆசைப்பட்டார். எமது கரிய கூந்தலை நீவினார்; தடவினார். இன்று யாம் அவர் பிரிவால் நோயுற்றுள்ளோம் தான். எனினும் வெம்மை மிகுதியால், மரற்புற்கள் வாடும் மலையைக் கடந்து சென்றுள்ளார். அவர்தம் ஆள்வினை உடைமையை நிறைவேற்றுவாராக” என்று மொழிந்தாள். தொடர்ந்து “அவர் சென்ற வழியோ கொடிது. பெருவரீன் பாணனது பிரதேசத்தில் பாற் பசுக்கள் நிறைந்த இடையராயினார், நீர் பெறற் பொருட்டு, குழிக்கிணறுகளைத் தோண்டுவர். குழியுட் கிடைக்கும் நீர் விரைவில் காய்ந்து விடும். பெரும் யானைகள் ஆங்கு வந்து, நீர் பெறாது ஏகும். அம்மட்டோ? நீர் வேண்டி ஆங்கு கொடிய புலிகளும் வரும். நீரின்மையின் அவையும் மீண்டேகும். சகதியுன் அவற்றின் அடிச்சுவடுகள் தெரியுமாம். அவர் சென்ற பாதையோ மிகமிகக் கொடிது” என்று கூறிமுடிக்கின்றாள்.

பெருங்கடுங்கோ முதலிய பண்டைப் புலவோர் சிறந்த எண்ணங்களையும் உயர்ந்த நோக்கங்களையும் கொண்டிருந்தனர். மக்கள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்தனர்.

வேண்டும் வழியெல்லாம் கதை மாந்தர் வழியாக அரிய குணநலங்களை வெளியிட்டனர்.

ஆடவராயினார், 'வினையே ஆடவற்கு உயிர்' என்று கண்டு உயிரையும் பொருட்படுத்தாது உறுபொருள் திரட்ட முயன்றனர். திரட்டிய பொருளைக் கொண்டு ஈதல் இசைபட வாழ்தல் என்னும் நேரிய வழியில் நின்றனர். ஈதற்குச் செய்க பொருளை என்று இசைத்தனர்.

பாருங்கள் இன்றைய அகப்பாட்டிலே, பீடார் புலவர் பெருங்கடுங்கோ பாத்திரத்தின் ஊடாக - கதை மாந்தர் வாயிலாக - இல்லொழுக்கத்தில் கடைப்பிடிக்க வேண்டிய இனியவழியை இயம்புகின்றார். அவர் கூறும் விழுமிய கருத்தினைக் காண்போம்.

அறன் கடைப படாஅ வாழ்க்கையும் என்றும்

பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்

பொருளின் ஆகும் புனைஇழை என்றுநம்

இருளேர் ஐம்பால் நீவியோரே.............

மரல்வாடு மருங்கின் மலையிறந்தோரே. (அகம் 155)

திருவள்ளுவதேவர் அறத்தினை உயர்ந்த செல்வம் என்று கூறுவர். எவர் ஒருவர் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நீங்கி வாழுகின்றனரோ அவரே அறத்தில் நின்று வாழ்வார் என்ற குறிப்பினையும் தருகின்றார். இனி, கம்பநாடர்,

'தக்க இன்ன தகாத இன்னவென்று

ஒக்க உன்னல ராயிடின் மக்களும் விலிங்கே'

என்று கூறுவர் ஆசிரியர் பரிமேலழகர். 'மனு முதலிய நூல்களில் விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும் விலக்கப்பட்டவற்றை ஒழிதலும் அறம்' என்று கூறுவர். ஈதலை மேலான அறம் என்று கூறுவோரும் உளர். இரத்தலினும் இன்னாதது வேறொன்றில்லை என்பது நூலோர் கூற்று.

என்றுமே அறத்தினை வலியுறுத்தும் பெருங்கடுங்கோ அவர்கள் பாலைக்கலியுள்ளும் கதைமாந்தர் வாயிலாக உயரிய விழுமியம் வளர, நிலைக்க, எல்லாவற்றுக்கும் பொருளே வேண்டும் என கூறாநிற்பர்.

அரிதாய அறனெய்தி அருளியோர்க்(கு) அளித்தலும்

பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்

புரிவமர் காதலில் புணர்ச்சியும் தருமெனப்

பிரிவெண்ணி பொருளவயின சென்ற நம்காதலர் (கலி 11) என்பது அது.

எனவே பொருளீட்டி, அன்பும் அறனும் உடையராகி, பண்பும் பயனும் உற்று, மனித வாழ்வை வளமுள்ளதாக ஆக்குவோமாக!

“நெடியோய் யாம் ஏத்துகம்”

கடந்த பல வாரங்களாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் பகரும் விழுமிய பண்புகள் பற்றிச் சிந்தித்து வருகின்றோம். இன்று, புறநானூறு புகலும் ஒரு செய்தியை நோக்குவோம்.

பழந்தமிழ் இலக்கியங்கள் பாட்டும் தொகையும் எனப்பகுக்கப்பட்டிருத்தலையும் அறிவோம். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் பழைமை வாய்ந்தனவே!

தொகை நூல்களுள் புறநானூறு, இறுதிக்கண் இடம் பெற்றுள்ளது. தண்டமிழ்ச் சான்றோர் சங்கநூல்களின் முடிமணி என்று இதனைப் போற்றுவர்.

இது, செந்தமிழ் மாந்தரின், தொன்மைக்காலத்து நாகரீகம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம், சமயம் என்னாப் பலதுறைகளிலும் அரிய, பெரிய செய்திகளைக் கூறாமற் கூறுகின்றது.

தமிழ் மாந்தர் அகம், புறம் என்னும் இரு வாழ்வியல் நெறிகளைக் கைக்கொண்டொழுகியமை உலகப் பிரசித்தமானது. புறத்திணையில் அறமும் பொருளும் புகலப்படுகின்றது.

ஆசிரியர் தொல்காப்பியர், புறத்திணையை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் முதலியவாகப் பகுப்பர்.

பின்வந்த சான்றோர் ‘வெட்சி நிரை கவர்தல்; மீட்டல் கரந்தையாம்; வட்கார் மேல் செல்வது வஞ்சியாம்; உட்காது எதிரூன்றல் காஞ்சி; எயில் காத்தல் நொச்சி; அது வளைத்தலாகும் உழிஞை; அதிரப் பொருவது தும்பையாம்; போர்க்களத்து மிக்கோர் செருவென்றது வாகையாம் - என்பவற்றுடன் கைக்கிளை, பெருந்திணையையும் இணைத்து பன்னிரு பாற்றதாகப் பகர்வர்.

(நிரை - பசுக்கூட்டம்; வட்கார் - பகைவர்; எயில் - மதில்; அதிர்தல் - அஞ்சுதல்; செரு - யுத்தம்)

பத்தாயிரமாம் ஆண்டில் உலகடங்களிலும் சாந்தி, சமாதானம் சகவாழ்வு வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்படுகிறது! முடி மன்னர் ஆட்சி மறைந்து சனநாயக ஆட்சி உதித்துவிட்டது. ‘வாழு; வாழ விடு‘ என்னும் மகாமந்திரம் மட்டும் கேட்கின்றது. அனைத்தும், ஆள்பவரிடத்தேதான் தங்கி இருக்கிறது.

இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்கு முன்னே பழந்தமிழகம் முடிமன்னர் ஆட்சியில் நிலைபெற்றிருந்தது. மன்னவர் உலகுக்கு, நெல்லும் (உணவு வளம்) உயிர் அன்று; நீரும் (நீர் வளமும்) உயிர் அன்று; 'மன்னவனே' உயிர் என்ற கோட்பாட்டினை உடையராய் இருந்தனர். அது மட்டுமல்ல, குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊரும் மன்னவர்க்கும் நடு நாள் யாமத்தும் பகலும் துயிலாது காவல் புரிவோனுக்கும் உண்பதும் உடுப்பதும் மட்டும் வேறுபடும்; ஏனைய எல்லாம் ஒன்றே! என்றும் துணிந்திருந்தனர்.

ஆட்சி என்னும் வண்டியைச் செலுத்தும் மன்னவன் மாட்சிமை உடையனாய் இருப்பின் யாதொரு தீதும் இன்றி அந்த வண்டி இனிது இயலும் என்றும் கண்டிருந்தனர். 'முறை செய்து காப்பாற்றி, இறையாம் - கடவுளாம் - தன்மை எய்தினர்'

இனி புறநானூற்றுப் பாடலுக்கு வருவோம். ஊன் பொதி பசுங்குடையார், ஒரு பழம்பெரும் புலவர் அவர். சோழன், நெய்தலங்காணனல் இளஞ்சேட்சென்னி என்னும் வேந்தனைக் காண்கின்றார். அவனிடம் உள்ள தனித்தன்மைகளைப் பார்க்கின்றார். தன்னை வழிபடுவோரை, தழுவிக் கொள்ளுகின்றான். பிறரிடம் குற்றம் கண்டு பழிகூறுவார் சொல்லை ஏற்றுக் கொள்ளுகின்றான் இல்லை. எதனையும் மெய்யா, பொய்யா என ஆராய்கின்றான். பின்னர் நீதி நூலுக்குப் பொருந்தத் தண்டம் வழங்குகின்றான். எதிரி தன்னை வந்து கண்டு அடியில் வீழ்ந்து நின்றால் தண்டனையையும் குறைத்துக் கொள்ளுகின்றான். வந்தோர்க்கு வரையாது கொடுக்கின்றான். ஒன்றைச் செய்யும் முன்பு நன்றாக ஆராய்கின்றான். நடந்த ஒன்றுக்காகப் பிழை செய்தோமே என்று பின்பு வருந்தும் தன்மை அவனிடம் இல்லை. மனை வாழ்க்கையில் இன்பம் காணுகின்றான். மண்ணின் மேல் வான் புகழ் நட்டு வாழ்கின்றான். புலவர் இறுதியில் 'நெடியோய், யாம் நின்னை அணுக வந்தமை நின் பல்குணங்களையும் புகழ்கின்றோம்' என்கிறார். இனி, பாடலைக் காண்போம்.

வழிபடு வோரை வல்லறி தீயே

பிறர் பழி கூறுவோர் மொழிதே றலையே

நீ மெய் கண்ட தீமை காணின்

ஒப்ப நாடி அத்த(வு) ஒறுத்தி

வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்

தண்டமும் தணிதி நீ பண்டையிற் பெரிதே!

அமிழ்(து) அட்டானாக் கமழ்குய் அடிசில்

வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை

மகளிர் மலைத்தல் அல்லது மன்னர்

மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப

செய்திரங்கா வினைச் சேண் விளங்கு புகழ்

நெய்தலங்காண் நெடியோய்

எய்த வந்தனம் யாம் ஏத்துகம் பலவோ

'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்கிறார்களே! ஆட்சியாளர் அறத்திறம் காத்து ஒழுகினால் அல்லல் ஒன்று இல்லை; இல்லை. திருத்துவதிலும் திருந்த நடக்க முயலுவோமாக!